கல்கி

KALKI
25.6.95 ரூ. 3.00



வழக்கறிஞர்கள் போராட்டம்; அரசின் அலட்சியம்!

வக்கீல் சண்முகசுந்தரத்தின் மீது நடந்த தாக்குதலைத் தொடர்ந்து, தமிழ்நாட்டிலுள்ள வழக்கறிஞர்கள் மூன்று நாட்கள் கோர்ட்டை பகிஷ்கரித்தார்கள். சண்முகசுந்தரம் தாக்கப்பட்டது தொடர்பாக சி.பி.ஐ. விசாரணை கோரியும், அவருக்கு ஐம்பது லட்சம் நஷ்டஈடு கோரியும் இரண்டு ரிட் மனுக்களை ஒரு புறம் தாக்கல் செய்த கையோடு இந்த பகிஷ்கரிப்பு.

அதுவும் கோடை விடுமுறை முடிந்து கோர்ட் திறக்கப்பட்ட சமயத்தில் இப்படியொரு நீண்ட போராட்டம் நடத்துவதால் பொது மக்களுக்கு இடைஞ்சல் இல்லையா? அடையாளப் போராட்டத்துடன் நிறுத்திக் கொண்டிருக்கக் கூடாதா! இந்த சந்தேகத்தையே கேள்வியாக, சென்னை வழக்கறிஞர் சங்கத் தலைவர் பி. ஜெயராமனிடம் கேட்டோம்.

"பொதுமக்கள் கண்ணோட்டத்தில் பார்த்தால் உங்கள் கேள்வி நியாயமான கேள்விதான். ஆனால் எங்கள் நிலையையும் நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

"சண்முகசுந்தரம் மீதான தாக்குதல் ஒரு தனிப்பட்ட சம்பவம் என்று கொள்ள முடியாது! வேறு பல தாக்குதல்கள், அராஜகங்கள் நடந்துள்ளன. முக்கியமாக, விஜயன் தாக்கப்பட்ட சம்பவம்... இப்போது வக்கீல் சண்முகசுந்தரம் தாக்கப்பட்டுள்ளார். இந்தச் சூழ்நிலை எதைக் காண்பிக்கிறது? தமிழ்நாட்டில் வக்கீல்கள் சுதந்திரமாகத் தொழில் நடத்த முடியாத நிலை இருக்கிறது என்பதைத்தானே! ஒரு வழக்கறிஞருக்குத் தம்மிடம் வரும் எந்த கேஸையும் எடுத்துக் கொள்ளும் உரிமை உண்டு.

"ஒரு வழக்கறிஞரின் உதவி கேட்டு வருபவர் குற்றவாளி அல்லது நிரபராதி என்பதை கோர்ட்டும் சட்டமும்தான் தீர்மானிக்க வேண்டும் என்கிற நிலை இருப்பதால், வழக்கறிஞர்கள் தொழில் என்பது மிகவும் சுதந்திரமான தொழில். இந்தத் தொழிலைச் செய்வதற்கு உரிய பாதுகாப்பு இல்லாவிடில் பாதிக்கப்படப் போவது மக்கள்தான்.

"ஏனென்றால், நாளை, பொது மக்கள் கொண்டு வரும் கேஸ்களை தங்கள் உயிருக்கே ஆபத்து என்ற நிலை வரும்போது எந்த வக்கீல் துணிந்து கோர்ட்டில் ஆஜராக முன்வருவார்?

"ஆகவேதான் வழக்கறிஞர்கள் போராட்டத்தில் இறங்கினோம். அரசாங்கத்துக்கும், மக்களுக்கும், ஏன் எங்கள் சக வழக்கறிஞர்களுக்கும் கூட, நாங்கள் விழிப்புற்ற நிலையில் இருக்கிறோம் என்பதைக் காட்ட, களத்தில் இறங்கி இருக்கிறோம். இன்னும் சொல்லப் போனால் சில வேகமான வழக்கறிஞர்கள்; காலவரையற்ற பகிஷ்கரிப்பு செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் இதனால் மக்களுக்கு ஏற்படும் இன்னல்களை கணக்கில் கொண்டு, மூன்று நாட்கள் கோர்ட்டை பகிஷ்கரித்தோம். இது அனைவரும் சேர்ந்து எடுத்த முடிவு" என்றார் ஜெயராமன். •



வழக்கறிஞர்கள் கொடுத்த மனுவைப் பெற்றுக் கொள்ள முதல்வரோ தலைமைச் செயலரோ கோட்டையில் இல்லை. அரசாங்கத்தின் இந்த அலட்சியப் போக்கே வழக்கறிஞர்களின் போராட்டத்தை நியாயப்படுத்தி வலு சேர்க்க உதவிக் கொண்டிருக்கிறது!

— ஆர். எஸ்.

படம் நன்றி : தினமலர்



• சூர்யா தொடரில்...


'குறிஞ்சி மலர் நாயகன்' இன்று சன் டீ.வி. 'சூர்யா' தொடரில் முழு வீச்சுடன் அசத்திக் கொண்டிருக்கிறார் "ஏது, அரசியலைக் கொஞ்சம் ஓரம் கட்டி, மும்முரமாக நடிப்பில் இறங்கி விட்டீர்களா?'' என்று கேட்கப் போயிருந்தோம்.

ஸ்டாலினின் பிரத்யேக பீட்டர்ஸ் ரோடு அலுவலகம்; கட்சி வாசனை, கரைவேட்டி கும்பல் ஏதுமின்றி இயல்பாக இருந்தது. முகப்பில் பெரிய வெங்கடாஜலபதி(!) படம். உள்ளே கலைஞர் போட்டோ. சின்ன டேபிளில் சிணுங்கும் டெலிபோன். முனகும் மின் விசிறி. ஓடாத ஏஸி. ("வோல்டேஜ் ட்ராப், அதான்!") புன்னகையுடன் ஸ்டாலின்.

மைக்கைப் பிடித்தால் மணிக்கணக்கில் முழங்கக் கூடியவர் பேட்டி என்றால் யோசித்துத்தான் பேசுகிறார். (வார்த்தைக்கு வார்த்தை!)

"**பா**ருங்கள், அரசியல் என் தொழில். என் வாழ்க்கை. என் பார்வை சமூகம் சார்ந்தது. சமூகப் பிரச்னைகள் மீதான என் கருத்துக்களை வெளிப்படுத்த, பொதுக் கூட்டங்களை விட, டீ.வி. சக்தி வாய்ந்த உபகரணமாக எனக்குத் தோன்றுகிறது. நேரடிப் பிரசங்கங்களை விட ஒரு கதையாக, நாடகமாகச் சொல்லும்போது, விஷயத்தின் கனம் குறையாமல் அதே சமயம் சுவாரஸ்யமாகவும் வெளிப்படுத்த முடிகிறது. அதனால்தான் நடிக்க வந்தேன்!''

"ஆக, உங்கள் அரசியலுக்கு உதவியாகத்தான் நடிப்பே தவிர, நடிப்பில் சிறப்பு ஆர்வம் ஏதும் இல்லை



“டீவி சினிமா

மு.க. ஸ்டாலின் பேட்டி!

என்கிறீர்களா?"

"அப்படித்தான் சொல்ல வேண்டும். 'குறிஞ்சி மலரி'ல் நான் நடிக்க ஒப்புக் கொண்டதே, நா.பா.வின் கதை தந்த அழுத்தமான பாதிப்பால்தான். மிசாவில் கைதாகி சிறையில் இருந்த சமயம்... நிறைய படிக்க நேரம் கிடைத்தது. அப்போது எதேச்சையாக 'குறிஞ்சி மலர்' நாவல் படிக்கக் கிடைக்க, அசந்து போனேன்! திரும்பத் திரும்பப் படித்தேன். சமூகப் பிரக்ஞையுள்ள அந்த அரவிந்தன் பாத்திரம் என்னை மிக பாதித்தது. நான்- நிஜ வாழ்க்கையில் - எப்படி இருக்க விரும்புகிறேனோ, கதையில் அப்படி இருந்தான் அரவிந்தன்! சொல்லி வைத்தாற்போல் இயக்குநர் சி.வி. ராஜேந்திரன், தாம் குறிஞ்சி மலரை டீ.வி. சீரியலாக எடுக்க விருப்பதாகவும், அரவிந்தனாக நான் நடிக்க வேண்டுமென்று கேட்டதும் யோசிக்காமல் ஒப்புக் கொண்டேன்."

"அதுசரி. 'சூர்யா'?"

"இதுவும் விழிப்புணர்வு ஊட்டும் கதைதானே! தொடரில், அந்த கலெக்டர் பேக்கிற இடங்களெல்லாம் தீவிர சமூகப் பிரக்ஞையின் வெளிப்பாடாகத்தானே அமைந்து வருகிறது? இம்மாதிரி பாத்திரங்களை ஏற்பது என் கடமை என்று கூடச் சொல்வேன்."

"கொஞ்சம் பின்னோக்கிப் போகலாம். பள்ளி, கல்லூரி நாட்களில் நடிப்பு அனுபவம் உண்டா?"

"அஃப்கோர்ஸ்... நாடகங்களில் நடித்திருக்கிறேன். கல்லூரி வயதுகளில் அரசியல் ஆர்வம் வந்துவிட, கட்சி பிரசார நாடகங்களில் தீவிரமாக இயங்கி இருக்கிறேன். 1971 என்று ஞாபகம். என் முதல் அரசியல் நாடக அரங்கேற்றம் எம்.ஜி.ஆர். தலைமையில் நடந்தது! வெட்டவெளியில் மண்தரையில் உட்கார்ந்து அவர் என் நாடகத்தை ரசித்தது மறக்க முடியாத நிகழ்ச்சி! பின்னால் அந்த நாடகத்திற்கான பாராட்டு விழாவில் என் தந்தை தலைமை ஏற்க, எம்.ஜி.ஆர். என்னை வாழ்த்திப் பேசி மோதிரம் பரிசளித்தது இன்னும் நெகிழ்ச்சியான சம்பவமாக ஞாபகம் இருக்கிறது. 'படிப்பைக் கெடுத்துக்காம நடி' என்ற அவரது அட்வைஸும் எனக்கு அப்போது உபயோகமாக இருந்தது."

"வரவேற்பு எப்படி இருக்கிறது சூர்யாவுக்கு? கட்சி ஆட்கள் பாராட்டுவார்கள் தான். பொது மக்களிடமிருந்து...?"

"நிச்சயம் நல்ல வரவேற்பு தெரிகிறது. நிறைய கடிதங்கள் வருகின்றன. ஒரு மாதிரி ஸாஃப்ட்ரோலில் குறைந்த அளவு ஆக்ஷன் கலந்து நடிப்பது பிடித்து விட்டது போலிருக்கிறது!"

"இரண்டு டீ.வி. சீரியல்கள் ஆயிற்று.



இருக்க எதற்கு?"

"இலக்கணமற்ற நடிப்பு!"



'சூர்யா' தொடரின் இயக்குநர் செல்வாவிடம், "நடிப்பில் தீவிர ஆர்வம் இல்லை என்று சொல்பவரிடம் எப்படி வேலை வாங்குகிறீர்கள்?" என்று கேட்டோம்.

"அது தானே டெக்னீஷியனின் பணி? அவரது கேரக்டர், அதற்கேற்ற மேனரிஸம், அசைவுகள் என்ன, எங்கே, எவ்வளவு வேண்டும் என்பதை முன் கூட்டியே முடிவு செய்து கொண்டு விடுவேன். செட்டில், நம் தேவையைச் சொன்னால் அவர் செய்து காட்டுவதை கூட்டிக் குறைத்துச் செய்யச் சொல்லி வாங்கிவிட வேண்டியதுதான்!"

"தொழில்முறை இயக்குனரான நீங்கள், தொழில்முறை அல்லாத நடிகரான ஸ்டாலினின் நடிப்பு பற்றி— உங்கள் உண்மையான விமர்சனம் சொல்ல முடியுமா?"

"நடிப்புக்கான இலக்கணங்கள் எதையும் பின்பற்றா நடிப்பு அவருடையது. கொஞ்சம் கூர்ந்து கவனித்தால் ரசிக்க முடியும்."

"இந்தத் தொடர் குறித்து கலைஞர் உங்களிடம் ஏதும் கருத்துச் சொன்னாரா?"

"இதுவரை இல்லை. ஆனால் நன்றாக வருகிறது என்று நண்பர்களிடம் சொல்லியிருக்கிறார் என்று கேள்விப்பட்டேன்!"

இனி சினிமா...?"

"வேண்டாமென்று பார்க்கிறேன். விருப்பமும் இல்லை. தவிர, இன்று சினிமாவை விட டீவிக்கு 'ரீச்' அதிகம் இருக்கிறது. ஒரு படம் ஓடுமா, ஓடாதா என்று முதல் போட்டு விட்டு குழம்பிக் கொண்டிருப்பவர்கள் இன்று அதிகம். டீவியில் இது மாதிரி பிரச்னைகள் ஏதும் இல்லை பாருங்கள்! தவிரவும், முழுநேர நடிகனாகவெல்லாம் எனக்கு ஏது நேரம்?"

"உங்கள் நடிப்பு பற்றி கலைஞர் என்ன கமெண்ட் சொன்னார்? உங்கள் மனைவி?"

"அப்பா தொடர்ந்து 'சூர்யா' பார்த்து வருகிறார். 'ஆக்ஷன் போதாது என்பது அவர் அபிப்பிராயம். தவிர நிறைய மெஸேஜ் சொல்ல வேண்டும் என்று வற்புறுத்தினார். அஃப்கோர்ஸ், இனிவரும் வாரங்களில் மெஸேஜ் நிறையவே இருக்கும் பாருங்கள். அப்புறம் என் மனைவி... என் பர்ஃபாமன்ஸ் அவளுக்குப் பிடித்திருக்கிறது என்றுதான் நினைக்கிறேன். வருகிற கடிதங்களையெல்லாம் அவள்தான் முழுக்க படித்துப் பார்க்கிறாள். 'கட்சிக்காரர்களிடமிருந்து எக்கச்சக்கக் கடிதங்கள் வந்தாலும், அந்த அளவுக்கு மேலே பப்ளிக்கிலிருந்து வந்தால்தான் சிறந்த நடிகர் என்று ஒப்புக் கொள்வேன்' என்கிறாள்!"

"நடிப்புத் துறை சார்ந்த வெளி நபர்கள் யாரும் பாராட்டினார்களா?"

"குறிஞ்சி மலர் வெற்றி விழாவில் டைரக்டர் பாலசந்தர் சொன்னார். 'நடிக்காமல் இருப்பது தான் நிஜமான நடிப்பு. அது ஸ்டாலினுக்குக் கை வந்திருக்கிறது' என்று. எனக்குக் கிடைத்த பெரும் பாராட்டு அது!"

சந்திப்பு: **பா. ராகவன்.**

அட்டை வண்ணப்படம், படங்கள் : **கேமரா திருஞானம்**

அடுத்த இதழில்



●● **வைரமுத்து சொன்ன ஜோசியம்!**
– பாடகி சுவர்ணலதா பேட்டி.

●● **நாசரின் 'அவதாரம்'**
– ஓர் அலசல்

Kalki Shopping Page

இந்தியாவின் முதல்தரமான நிதி நிறுவனம்

- இந்தியாவிலேயே மிகப்பெரிய நிதி நிறுவனம், ரூ. 34,000 கோடிக்கும் மேல் சொத்து ஆதாரம் கொண்டது.
- 30 ஆண்டுகளாக தலைமையாய் விளங்கிவரும் ஐடிபிஐ முக்கியமான துறைகளான பவர், பெட்ரோலியம், இன்ஃப்ராஸ்ட்ரக்சர், [illegible] மற்றும் டெலிகம்யூனிகேஷன்ஸ் ஆகியவற்றில் ஏற்பட்டுவரும் வாய்ப்புகளை சமாளிப்பதற்கு ஒப்பற்றவிதம் அமைந்துள்ளது.
- உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் மிக அதிக கிரெடிட் ரேட்டிங்.
- எல்லா இந்திய வங்கிகள் மற்றும் நிதிநிறுவனங்களைக் காட்டிலும் அமெரிக்க, ஐரோப்பிய மற்றும் ஆசிய நாடுகளின் மூலதன சந்தையிலிருந்து இந்திய தொழிற்துறைக்கு மிக அதிக ஃபோரெக்ஸ் நிதி திரட்டியுள்ளது.




மிகவும் விரைந்து முன்னேறிக் கொண்டிருக்கும் பொருளாதாரத்தின் வாய்ப்புகளை கைவசப்படுத்தும் சாமர்த்தியம் இந்தியாவிலேயே மிகப்பெரிய நிதி நிறுவனத்தைத் தவிர வேறு எதற்கு சாத்தியமாகும்?

IDBI

இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் பாங்க் ஆஃப் இந்தியா
ஐடிபிஐ டவர், கஃப் பரேடு, மும்பாய் - 400 005.

Adfactors/IDBI/3/95 TM





1995 ஜூன் 25
யுவ ஆனி 11
மலர் : 53
இதழ் : 47

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. - பாரதியார்.



சென்றார், பார்த்தார், வென்றாரா?

பிரெஞ்சு அதிபர் சிராக்குடன் நமது பிரதமர் நடத்திய பேச்சு வார்த்தைகளில் இந்தியா - பிரான்ஸ் இடையே தொழில் வர்த்தகப் பரிமாற்றம் அதிகரிக்க வழிவகுக்கப்பட்டுள்ளது.

இன்றைய பிரெஞ்சு அதிபர் சிராக்கின் வாழ்க்கையை அலசினால் நமது தலைவர்கள் இன்னும் அதிகமான பலன் பெறலாம். பாரிஸ் நகரின் பல பகுதிகளுக்கும் பல மேயர்கள் உண்டு. இவர்களின் தலைவர் 'லார்ட் மேயர்' எனப்படுவார். அப்படி லார்ட் மேயராக இருந்த சிராக், பிரெஞ்சு மக்கள் எல்லோரும் பெருமைப்படுகின்ற பாரிஸ் நகரை மேலும் எழில் மிக்கதாகவும் பசுமையாகவும் தூய்மை மிக்கதாகவும் செய்ய பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். இதனாலேயே பிரபலமடைந்து பிரெஞ்சு மக்களின் இதயங்களில் இடம்பெற்றார். கட் அவுட்கள், போஸ்டர்கள் மூலம் அல்ல. "நான் அதிபர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால் வீண் செலவுகளைக் குறைப்பேன்; வேலை இல்லாத் திண்டாட்டத்தைக் குறைப்பேன்" என்று இரு முக்கிய வாக்குறுதிகளை அளித்தார். பதினாலு ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு வலது சாரி ஜனாதிபதியை பிரெஞ்சு மக்கள் தேர்ந்தெடுத்தார்கள்!


பதவிக்கு வந்ததும் தாம் வாக்களித்தபடியே சிக்கன நடவடிக்கைகளில் இறங்கி,



> **"'ராவுக்குப் பிறகு யார்? அப்போது இந்தப் பொருளாதாரக் கொள்கை என்ன ஆகும்? நமது முதலீட்டின் கதி யாதாகும்?' என்று யோசிக்கிறார்கள்."**

ஏராளமான பணத்தை கபளீகரம் செய்து வந்த நாலைந்து அரசு இலாக்காக்களையே ஒழித்துக் கட்டி விட்டார் சிராக்! இதனால் அரசு அதிகாரிகள் பலர் கோபப்பட்டாலும் மக்கள் மகிழ்ந்து போயிருக்கிறார்கள். வேலையில்லா திண்டாட்டத்தைக் குறைப்பதிலும் சீக்கிரமே கணிசமான வெற்றி பெறுவார் என்று நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

பொதுவாகவே மேல்நாட்டவருக்கு இந்தியாவிலோ சீனாவிலோ முதலீடு செய்வதில் இப்போது நாட்டம் அதிகரித்து வருகிறது. இதற்கு இரண்டு முக்கிய காரணங்கள். முதலாவது, எந்தத் தொழில் என்று ஆரம்பித்தாலும் மாசுக் கட்டுப்பாடு என்ற முறையில் மேல்நாடுகளில் கெடுபிடி ரொம்ப ரொம்ப அதிகம். மக்களிடம் இது பற்றிய விழிப்புணர்வும் மிகுதி. இதனால் தொழிலகங்கள் பலவும் இயங்குவதில் பல சிரமங்களைச் சந்திக்கின்றன. இரண்டாவது, தொழிலாளர்



களுக்கான ஊதியமும் இதர வசதிகளும் அங்கு அபரிமிதம். ஒப்புநோக்க சீனா, இந்தியா போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் குறைவு. எனவே இங்கு உற்பத்தி செய்து அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளுக்குக் கொண்டு செல்வதில் கவனம் செலுத்துகின்றனர். இதில் நமக்குச் 'சபாஷ் சரியான போட்டி'யாக விளங்குவது சீனா, பார்மோஸா போன்றவை.


இந்தியாவில் முதலீடு செய்வதில் மேல்நாட்டுத் தொழிலபதிர்களுக்கு ஆர்வம் இருப்பினும், இன்றைய புதிய பொருளாதாரக் கொள்கை அவர்களுக்கு திருப்தி தந்த போதிலும், 'இந்த அரசு நிலைக்குமா? நீடிக்குமா?' என்ற அச்சம் அவர்களுக்கு இருக்கிறது. 'ராவுக்குப் பிறகு யார்? அப்போது இந்தப் பொருளாதாரக் கொள்கை என்ன ஆகும்? நமது முதலீட்டின் கதி யாதாகும்?' என்று யோசிக்கிறார்கள்.

இதற்கு ஒரே தீர்வு, புதிய பொருளாதாரக் கொள்கையைப் பொறுத்தமட்டில் ஆளும் காங்கிரஸ் கட்சி, எதிர்க்கட்சிகளையும் அணைத்துச் செல்ல வேண்டும். எதிர்க்கட்சிகளும் 'இந்தக் கொள்கையை நாங்கள் ஏற்கிறோம்; நாங்கள் பதவிக்கு வந்தாலும் இந்த சுதந்திரப் பொருளாதாரக் கொள்கையையே (சிறு சிறு மாற்றங்களுடன்) கடைப்பிடிப்போம்!' என்று பகிரங்கமாக உலகுக்கு அறிவிக்க வேண்டும். இதைச் செய்தால் மிலியன் கணக்கில் டாலர்கள் இங்கு முதலீடாகி வேலை வாய்ப்புக்களும் 'ஓகோ' என்று உயரும்.

வோட்டுப் பிடிக்கும் சுயநலத்தை சற்று ஒதுக்கி வைத்து, தேசநலனையும் மக்கள் நலனையும் மட்டுமே சிந்தித்தால் நமது தலைவர்கள் இதைச் செய்வார்கள். ஆனால் துரதிர்ஷ்டவசமாக இங்கு முன்நிற்பது சுயநலமாகத்தானே இருக்கிறது!


அன்றும், இன்றும், என்றும்
24% வட்டியை அளிக்க முடியும் என்கிற
அனுபவ் உத்தரவாதத்தின் 5 ரகசியங்கள்

எந்த ஒரு நிதி நிறுவனத்திற்கும் அது என்ன வட்டி அளிக்கிறது என்பதை சொல்வது எளிது. ஆனால் அதை சொன்னபடி செய்வது மிகவும் கடினம். அப்படி இருக்கும்பொழுது, அனுபவ் உத்தரவாதம் மட்டும் டெபாசிட்தாரர்கள் முழு நம்பிக்கையைப் பெற்றதன் காரணம் என்ன?




ரகசியம் 1:

தனது அடிப்படை கொள்கைகள் மற்றும் திட்டங்களை கண்டிப்புடன் கடைப்பிடித்தல்.




ரகசியம் 2:

1000-க்கு மேற்பட்ட, பல தொழிற் துறைகளில் தேர்ச்சி பெற்ற நிபுணர்கள் கொண்ட நிர்வாக அமைப்பு.



ரகசியம் 3:

எந்தவித அபாயமும் இன்றி, அதிக ஈட்டுத் தொகையை உத்தரவாதம் செய்யும் வகையில் அனுபவ் குரூப்பை சேர்ந்த கட்டிடத் தொழில் மற்றும் ஏற்றுமதி தொழில்களில் நிதிகளை பயன்படுத்துதல்.



ரகசியம் 4:

அனுபவ் குரூப் கம்பெனிகளின் நிரூபணமான லாபகரமான செயல்திறன்.



ரகசியம் 5:

அனுபவ் நிறுவனங்களின் சிறப்பான வளர்ச்சியைக் கண்டு சர்வதேச நிறுவனங்கள், அதனுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள முன் வந்துள்ளன.

ஐந்து ரகசியங்கள். ஐந்து உறுதிப்படுத்தும் உண்மைகள். இவை சுட்டிக் காட்டுவது ஒன்றேதான்.

அனுபவ் உத்தரவாதம் என்பது முழுமையாக நம்பக்கூடிய உத்தரவாதம்

அனுபவ் டெபாஸிட் ஸ்கீம்

குறைந்தபட்ச முதலீடு	வட்டி விகிதம்	
ரூ. 10,000/-	24%	12 மாதங்களுக்கான வட்டி மாதாந்திர பின் தேதியிட்ட செக்குகள் மூலம் முன்னதாகவே தரப்படும்.

அனுபவ் பாண்ட்

குறைந்தபட்ச முதலீடு	காலம்	முதிர்ச்சி கால ஈட்டுத்தொகை
ரூ. 25,000/-	3 1/2 ஆண்டுகள்	ரூ. 50,000/- (உங்கள் முதலீடு 3 1/2 வருடங்களில் இரட்டிப்பாகிறது)

அனுபவ் ஃபைனான்ஸ் அண்டு இன்வெஸ்ட்மெண்ட்ஸ்

அனுபவ் சென்டர், 11, சோமசுந்தரம் தெரு, தி.நகர், சென்னை-600 017.
ஃபோன்: 8254155/8282629/8282833/8283316 ஃபாக்ஸ்:8284967

திறமையுடன் செயலாற்றுகின்றோம். அதிக வட்டி தருகிறோம்.

ADWAVE/AFI/5032 TAM 0

● திருச்சி: ஜெனி பிளாசா, டிறப் எண் - 9, கீழ்தளம், எண்.3, பாரதியார் சாலை, திருச்சி - 620 001. ● கோயம்புத்தூர்: 101, 105 D-B ரோடு, ஆர்.எஸ்.புரம், கோயம்புத்தூர் 641 002. ● சேலம்: சிவா காம்ப்ளெக்ஸ், சாரதா காலேஜ் எதிரில், சேலம் - 636 009. ● மதுரை: 119, இரண்டாவது மாடி, மேற்கு பெருமாள் மேஸ்திரி தெரு, மதுரை - 625 001. ● திருநெல்வேலி: 25, பி, இரண்டாவது மாடி, எஸ்.ஆர்.கே. காம்ப்ளெக்ஸ், எஸ்.என்.நெடுஞ்சாலை, திருநெல்வேலி ஜங்க்ஷன். ● நாகர்கோவில்: முதல் தளம், டி.எஸ்.என். காம்ப்ளெக்ஸ் அருகில், டி.வி.சி. பஸ் ஸ்டேண்டு அருகில், மீனாட்சி புரம், நாகர்கோவில் - 629 001. ● தாம்பரம்: பி.ஆர். காம்ப்ளெக்ஸ், இரண்டாவது தளம், நேஷனல் தியேட்டர் எதிரில், எண். 12, ராமகிருஷ்ணா சாலை, தாம்பரம், சென்னை - 600 045.



கல்கி கிருஷ்ணமூர்த்தி அறக்கட்டளை— ஏழை மாணவர்களுக்கு உதவி ரூ.55,000/-

அமரர் கல்கி அவர்கள் பெயரில் நிறுவப்பட்டுள்ள அறக்கட்டளை ஆண்டு தோறும் ஏழை மாணவர்களுக்கு உதவி வருகிறது. சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டதைக் காட்டிலும் இந்தக் கல்வி ஆண்டுக்கு (95-96) ரூ. 10,000/- அதிகரித்து மொத்தம் ரூ. 55,000/- உதவித் தொகை வழங்கப்படவிருக்கிறது. இத்தொகை பின் வருமாறு விநியோகமாகும்:

●● பட்ட மேற்படிப்பு அல்லது ஆராய்ச்சியை மேற் கொண்டுள்ள மாணவர்கள் நால்வருக்குத் தலா ரூ. 1500/- வீதம் ரூ. 6000/-

●● இசை அல்லது நாட்டியம் பயிலும் மூவருக்குத் தலா ரூ. 1000/- வீதம் ரூ. 3000/-

●● பதினாறு கல்லூரி மாணவர்களுக்குத் தலா ரூ. 1000/- வீதம் ரூ. 16,000/-

●● இருபத்தியெட்டு மேல் நிலைப் பள்ளி அல்லது பாலிடெக்னிக் மாணவர்களுக்குத் தலா ரூ. 750/- வீதம் ரூ. 21,000/-

●● பதினைந்து உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்குத் தலா ரூ. 600/- வீதம் ரூ. 9000/-

இவற்றுள் அமரர் கல்கி படித்த மூன்று பள்ளிக் கூடங்களில் மூன்று மாணவர்களுக்கு மூன்று உதவித் தொகைகள் ஒதுக்கப்படுகின்றன. மீதமுள்ள உதவித் தொகைகளைப் பெற, தமிழகமெங்கும் உள்ள கல்வி நிலையங்களில் படிக்கும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. மாணவர்கள் தங்கள் கைப்பட எழுதிய விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலிக்கப்படும்.

உதவித் தொகைகளைப் பெற, மாணவ, மாணவியர் படிப்பில் சிறந்தவர்களாகவும், அதே சமயம் கல்வியைப் பெற்றோர் உதவியுடன் மட்டுமே தொடர முடியாத நிலையில் பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களாகவும் இருக்க வேண்டும். அரசு அங்கீகாரம் பெற்ற ஒரு கல்வி நிலையத்தில் சேர்ந்து படிக்க அனுமதி பெற்றிருக்க வேண்டும். இவற்றை உறுதிப்படுத்த, கல்லூரி அல்லது பள்ளி முதல்வரின் சான்றிதழுடன் விண்ணப்பிக்க வேண்டும். சென்ற கல்வி ஆண்டின் இறுதித் தேர்வில் பெற்ற மதிப்பெண்களின் நகலை முதல்வரின் கையொப்பத்துடன் இணைப்பது அவசியம்.

விண்ணப்பங்களை ஆராய்ந்து உதவித் தொகை பெறத் தகுதியுள்ள மாணவ, மாணவியரை அறங்காவலர்கள் தேர்ந்தெடுப்பார்கள். அறங்காவலர்கள் முடிவே இறுதியானது.

சான்றிதழ்களைத் திருப்பி அனுப்புவதற்கில்லை. கடிதப் போக்குவரத்து இடையாது.

விண்ணப்பங்கள் வந்து சேரக் கடைசி தேதி : ஜூலை 31, 1995.

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி :

நிர்வாக அறங்காவலர்,
கல்கி கிருஷ்ணமூர்த்தி அறக்கட்டளை,
நெ. 1. ஐந்தாவது தெரு, ஏரிவட்டம்,
நுங்கம்பாக்கம், சென்னை - 600 034.


மன்னார்குடி முதல்வர்; ஸ்ரீவித்யா ராஜகோபாலர்!

சம்ப்ரோக்ஷணத்தையொட்டி தமிழக முதல்வர் மன்னார்குடிக்குச் சென்ற கதை, கிளைக் கதைகள் ஒரு புறமிருக்கட்டும்; மன்னார்குடி முதல்வனைப் பற்றித் தெரிந்து கொள்வோம்.

மாராத குறுநகையுடன் கம்பீரமாக தரிசனம் தந்து கொண்டிருக்கிறார் அந்த மாடு மேய்க்கும் கண்ணன்.

'322 ஆண்டுகள் கழித்து குடமுழுக்கு செய்யப் பெற்ற இத் தலத்தின் பெருமைகளைப் பற்றி உங்களுக்கென்ன தெரியும்?' என்று சற்றே ஏளனத்துடன் கேட்பது போன்ற ஒயிலான புன்னகை!

புராணக் கதையின்படி இவ்விடத்துக்கு முன்பு செண்பகவனம் என்று பெயர். இந்த வனத்தில் 1008 முனிவர்கள் தவம் இருந்தார்களாம். அவர்களுள் வாஹிமுகர் என்பவர் ரொம்பவும் சிறப்புவாய்ந்தவராய் இருந்திருக்கிறார். இவருடைய இரு புதல்வர்கள் கோப்ரளயர் மற்றும் கோபிலர். இவ்விருவரும் துவாரகை சென்று கண்ணனை நோக்கித் தவமிருந்த போது நாரதர் தோன்றினார். 'கண்ணன் துவாரகையிலிருந்து புறப்பட்டு வைகுண்டம் திரும்பி விட்டான். இனி நீங்கள் காவிரியின் கிளைநதியான ஹரித்ராநதிக் கரையில் போய் தவம் செய்யுங்கள்' என்றார்.


• தாயார்

அவ்வாறே அவர்கள் செய்ய பரந்தாமன் ஓடோடி வந்து முப்பத்திரண்டு விதமாக இவர்களுக்குச் சேவை சாதித்திருக்கிறார். இறுதியாக பெருமான் அருளிய தோற்றம் தான் ஸ்ரீவித்யா ராஜகோபாலனின் உருவம். அதே திருவுருவத்துடன் பெருமான் அவ்விடத்தில் கோயில் கொள்ள வேண்டும் என்று சகோதரர்கள் வேண்ட, அவர்கள் வேண்டுதலைப் பூர்த்தி செய்தார் பெருமான்.

நின்ற திருக்கோலம்; பின்னாலுள்ள பசுவின் மீது ஒயிலாகச் சாய்ந்த இருக் சேவை. உடலில் ஒற்றை ஆடை; இருபுறமும் ருக்மிணி - சத்யபாமா; ஒரு காதில் குண்டலம், மற்றொன்றில் ஓலை; (கோபிகைகளுடன் ஜலக்கிரீடை செய்த போது காதணி மாறிவிட்டதாகப் புராணக் கதை) வலக்கரத்தில் மும்மடிப்புச் சாட்டை! - இது தான் உற்சவரின் தோற்றம்.

கர்ப்பகிருஹத்தில் ஸ்ரீ தேவி பூ தேவியுடன் வாசுதேவப் பெருமானாகக் காட்சி தருகிறார் இறைவன்.

ராஜாதி ராஜ சோழன் அமைத்ததாகவும் பின்னர் குலோத்துங்க சோழன் புதுப்பித்ததாகவும் அதற்கும் பின்னர் விஜயநகர மன்னர் ஒருவர் சம்ப்ரோக்ஷணம் செய்வித்ததாகவும் இக் கோயில் பற்றி வர

• பெருமாள்



லாறுகள் வழங்குகின்றன. எனினும் புராணக் கதைகளைப் பார்க்கும் போது கிருத, திரேதா, துவாபர, கலி யுகங்களைக் கண்டவர் இந்த மன்னார்குடி பெருமாள் என்று தெரிகிறது.

தினசரி ஏழு கால பூஜை, அலங்காரம் என்று கல்யாண கோலாகலத்துடன்தான் இருக்கிறார் ராஜ கோபாலசுவாமி. தவிரவும் பத்து நாட்களுக்குத் தொடர்ந்து நடைபெறும் பத்து திருவிழாக்கள் உண்டு. பங்குனி பிரம்மோத்ஸவம் 18 நாட்கள்! அதன் பின்னர் ஏழு நாட்கள் விடையாற்றி...

சேஷ வாகனம், தங்கக் கருடன், வெண்ணெய்த்தாழி, தங்கக் குதிரை என்று வெவ்வேறு கோலங்களில் பெருமாள் காட்சி தருவது கண்கொள்ளாத விருந்தாக இருக்கும். திருத்தேர் விழா, உள்ளூர் தேசிய மேநிலைப் பள்ளி மாணவர்களின் விழா! சாதி - மத - இன பேதம் பாராது அனைத்து மாணவர்களும் வடம் பிடிப்பார்கள்.

மன்னார்குடி மதிலழகு என்று பொன்மொழியாகிவிட்ட மதில் சுவருக்கு உள்ளே ஐந்து, வெளியே இரண்டு என ஏழு பிராகாரங்கள். 154 அடி உயரத்தில் பிரதான ராஜகோபுரம்; அதன் எதிரே, உச்சியில் கருடாழ்வாருடன் கருங்கல் தூண். இந்த கருடஸ்தம்பமே ஊரின் அடையாளச் சின்னமாகிவிட்டது.

16 கோபுரங்கள், 18 விமானங்கள், 24 சந்நிதிகள் என்று 23 ஏக்கர் பரப்பில் பிரும்மாண்ட கோயில். அதே 23 ஏக்கர் விஸ்தீரணத்தில் ஹரித்ராநதி என்கிற திருக்குளம்.

தனிக் கோயிலில் செங்கமலத் தாயார். 'ஹேமோப்ஜநாயிகா' என்ற வடமொழி பெயர் இவருக்கு... பிறகு மகரிஷியின் புதல்வியாக அவதரித்து 'மணந்தால் கண்ணனையே மணப்பேன்' என்று பிடிவாதமாய்த் தவமிருந்து மணாளனை அடைந்தவர்.

பெருமாளின் கருணையும் தாயாரின் வைராக்கியமும் தெய்வீகக் குணங்களாகச் சங்கமிக்கும் இந்தத் தலத்திற்கு ராஜ மன்னார்குடி என்ற பெயர் அமைந்ததில் ஆச்சர்யம் என்ன?

சம்ப்ரோக்ஷண தினத்தன்று இரவு ஸ்ரீ வித்யா ராஜகோபாலர் தங்கக் கருடனில் வீதி உலா வந்தபோது இந்தப் பெயர் பொருத்தத்தை எண்ணி நெகிழ்ச்சியுடன் வழிபட்டார்கள் பக்தர்கள்.

மன்னார்குடியிலிருந்து:
ஜானகிமணாளன்



• ஸ்ரீமத் ஆண்டவன் ஸ்வாமிகள்

வேதத்தை சுவாசிக்க முடியுமா? முடியும்! சென்ற மாதம் 27 ஆம் தேதியிலிருந்து இம்மாதம் முதல் தேதிவரை ஸ்ரீரங்கத்தில் இருந்தவர்களுக்கு அது சாத்தியமாகி இருக்கும். ஆயிரக்கணக்கான வேத விற்பன்னர்களால் ஊரே புனிதமானது!

திரும்பிய பக்கமெல்லாம் ரிக், யஜுர், சாம, ராமாயண பாதுகா சகஸ்ர பாராயணங்கள்.

விஷயம் இதுதான். ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் ஸ்வாமிகளின் அறுபதாவது பிறந்த நாள் விழா.

ஆண்டவன் ஸ்வாமிகள் பூர்வாசிரமத்தில், மதுராந்தகத்தை அடுத்த வேலாம்பூரில் தமிழாசிரியராக இருந்தவர். தமிழ்

படித்து முடித்தால் பணமுடிப்பு!

தவிர, சமஸ்கிருதம், தெலுங்கு மொழிகளில் விற்பன்னர். அவரது சஷ்டி அப்தபூர்த்தி, கிட்டத்தட்ட ஒரு கலை - ஆன்மிக ஒருங்கிணைப்பு விழாவாகவே நடந்தது. பல்வேறு மடாதிபதிகளும், இன்னிசைக் கலைஞர்களும் ஆஜர்!

ஆண்டவன் ஆசிரமத்தின் செயலாளர் மாதவாச்சார் சொன்னார்.

"1963 முதல் 26 வருடங்களாய் இப்போதுள்ள ஸ்வாமிகளுக்கு முன்பிருந்த திருக்குடந்தை ஆண்டவன் ஸ்வாமிகள் காலத்திலிருந்தே இங்கே செய்யப்பட்டு வரும் நற்பணிகள் அநேகம். ஸ்ரீரங்கத்தில் ஒரு சமஸ்கிருதக் கல்லூரி, அறுபது மாணவர்கள் உணவு, உடை, இருப்பிடம், ரூ. 200 உதவித் தொகையுடன் தங்கிப் படிக்கும் வேத பாடசாலை என்று வேதம் தழைக்க வழி செய்திருக்கிறார்கள். படித்து முடித்தவர்களை கௌரவிக்கும் வகையில் ரூ. 20 ஆயிரம் பணமுடிப்பு வேறு!

"மேலும் ரங்கநாத பாதுகா என்று ஆன்மிக இதழ் வெளியீடு, சென்னையில் ஓர் ஆயுர்வேத இலவச மருத்துவமனை என்று தொண்டைப் பரவலாக்கி வருகிறார்கள்."

ஸ்ரீரங்கத்திலிருந்து : **கிருஷ்ணா**

பார்க் டவுன் பெனிபிட் பண்ட் லிமிடெட்

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம். துவக்கம் 1985 Post Box No: 2806

223, தங்க சாலை, (கந்த கோட்டம் அருகில்) பார்க் டவுன், சென்னை-3 போன்: 582676, 564354

கிளை அலுவலகங்கள்: 2 கிழக்கு மாடவீதி, திருவான்மியூர், சென்னை-41 போன் 413582, 416417

P-995,இரண்டாவது அவென்யு, 12-வது மெயின்ரோடு ஜங்ஷன், அண்ணாநகர், சென்னை-40 போன் 6262656, 6280750



ஃபிக்சட் டிபாசிட்

46 நாள்	90 நாள்	6 மாதம்	1 ஆண்டு	2 ஆண்டு	3 ஆண்டு	4 ஆண்டு	5 ஆண்டு ★
13%	14%	15%	17%	18%	18.5%	19%	20%

21% 5 வருடங்கள் ரூ.50,000/- அதற்கு மேலும்

PB பாண்டு

முதலீடு	காலம்	திரும்பப் பெறும்தொகை
ரூ.25,000	60 மாதம்	ரூ.70,000

குழந்தைகள் கல்வி நலத்திட்டம்

L.K.G. முதல் கல்லூரி தொடக்கம் வரை

வைப்புத் தொகை ரூ. 5,100/-

3-ஆம் ஆண்டு நிறைவிலிருந்து தொடர்ந்து 12 ஆண்டுகள் ரூ.500/- பெறலாம். திட்ட டெபாசிட் காலத்திலிருந்து 16, 17-வது ஆண்டுகளில் தலா ரூ.1,000/- வீதமும், 18-ம் ஆண்டு துவக்கத்தில் ரூ.75,000/-ம் வழங்கப்படும்.

நலத்திட்டத்தின் 5% மாணவர்களுக்கு +2 அரசுத் தேர்வு மதிப்பெண் அடிப்படையில் ரூ.25,000/- பரிசாக ஒவ்வொருவருக்கும் நிதி நிறுவனம் வழங்கும்.*

திட்டத்தின் பயனை உங்கள் மழலைச் செல்வங்களுக்கு வழங்கி மன நிம்மதி பெறுவீர்! மகிழ்ச்சி அடைவீர்!!

காமதேனு மாபெரும் திரும்பப் பெறும் திட்டம்

டிபாசிட் திட்டம் 15 ஆண்டுகள்	5-ம் ஆண்டு நீங்கள் பெறும் தொகை	10ம் ஆண்டு நீங்கள் பெறும் தொகை	15ம் ஆண்டு பெறும் தொகை
Rs.6,320	Rs.6,000	Rs.6,000	Rs.56,320

கனகதாரா டிபாசிட்

ரூ.50,000/- முதலீடு செய்வீர்

10ஆம் ஆண்டு முடிவில் ரூ.50,000/- பெறுவீர்

அடுத்த 20ஆம் ஆண்டு முடிவில்

ரூ.1 கோடி பெறுவீர்

செல்வக்களஞ்சியம்

டிபாசிட்	காலம்	வருவாய்
Rs.7,500	15 Yrs	Rs.1,25,000
Rs.9,000	15 Yrs	Rs.1,50,000

பொற்குவியல் திட்டம்

டிபாசிட்	காலம்	வருவாய்
மாதா மாதம் ரூ. 100/-	25 Yrs	Rs.3,00,000

வெகுமதி முதலீட்டுத் திட்டம் - II

ரூ.3450/- செலுத்துவீர். 252 மாதங்கள் நிறைவில் ரூ.2 லட்சம் பெறுவீர்.

மறு முதலீட்டுத் திட்டம்

உங்கள் தொகை 45 மாதங்களில் இரட்டிப்பு ஆகும்

டிபாசிட்	12 மாதம்	24 மாதம்	45 மாதம்	60 மாதம்
Rs.1,000	Rs.1,184	Rs.1,430	Rs.2,000	Rs.2,535

பென்ஷனர் நலத்திட்டம் 20% P.a.

ரூபாய் 10 ஆயிரமும் அதற்கு மேலும்: காலம் 1 ஆண்டு

வயோதிகர், விதவைகள், ஊனமுற்றோர், கல்வி மற்றும் அறக்கட்டளை பயன் பெறலாம்.

சேமிப்பு திட்டம் 10% P.a.

தங்க நகை கடன்

Rs. 3,000 PER 10 GRAM

விதிகளின் பேரில் கடன் வழங்கப்படும். (உச்ச வரம்பில்லை)

ஆலோசகர்:

P. பாலசுப்ரமணியம், B.Sc.

முதன்மை அறங்காவலர்

கந்தகோட்டம், சென்னை - 3.

ஒவ்வொரு மாத வட்டிக்கான காசோலை மொத்தமாக டெபாசிட் செய்யும்போதே வழங்கப்படும்.

*தனிப்பட்ட டெபாசிட் திட்டம் 20%

குறைந்த அளவு ரூ.20,000 டெபாசிட் காலம் 5 ஆண்டுகள்.

இயக்குனர் குழுத் தலைவர்:

R. விவேகானந்தன், B.Com.

❒ ரூ. 5/- செலுத்தி பங்குதாரர் ஆவீர். ❒ சேமிப்பே செழிப்புக்கு வழிகாட்டும் ❒ வெள்ளி விடுமுறை



பணம் பண்ணலாம் வாங்க!

போன வாரம் ஐ.டி.பி.ஐ. பற்றிச் சொன்னேன் இல்லையா? அதே மாதிரி இன்னொரு அமைப்பு ஐ.சி.ஐ.சி.ஐ Industrial Credit and Investment Corporation of India. (ICICI)

இந்த அமைப்பும் நிறைய தொழில் முயற்சிகளுக்குக் கடனுதவி செய்திருக்கிறது. அது மட்டுமல்லாமல் இன்னொரு சிறப்பான நல்ல காரியமும் செய்திருக்கிறது இந்த நிறுவனம். யூனிட் டிரஸ்ட் ஆஃப் இந்தியாவுடன் சேர்ந்து 'கிரைஸில்' என்கிற அமைப்பை ஆரம்பித்திருக்கிறது.

ICICI, IDBI மாதிரி CRISIL என்கிறதும் ஒரு நீளமான பெயரின் சுருக்கம்: Credit Rating Information Services of India Ltd.

பொது மக்களிடம் ஃபிக்ஸட் டெபாஸிட் கேட்டோ அல்லது டிபஞ்சர்கள் வினியோகித்தோ சந்தையில் இறங்கும் நிறுவனங்களை எடை போட்டு, அவற்றின் பொருளாதார பலத்தின் அடிப்படையில் பிரிப்பதுதான் கிரைஸிலின் வேலை.

காலாகாலத்தில் வட்டியைக் கொடுத்து, மெச்சூர் ஆகும் தொகையை உரிய நேரத்தில் திருப்பித் தரும் நிறுவனங்களுக்கு FAAA முத்திரை தருகிறது கிரைஸில்.

FAAA முத்திரை பெற்ற நிறுவனத்தில் பணம் போடுவது, அரசாங்க வேலையிலிருப்பவருக்குப் பெண் கொடுக்கிற மாதிரி– உத்தரவாதமான பாதுகாப்புத் தரும் சமாசாரம்.

FAAA வுக்கு அடுத்தபடியான இடம் பெறும் கம்பெனிக்கு AA முத்திரை. அதற்கப்புறம் A, BBB, BB, B, C,D என்று சர்டிபிகேட் கீழ்நோக்கிப் போகிறது.

'C' சான்று என்றால் கம்பெனி நிலைமை ரொம்ப சுமார்தான் என்று பொருள். D கொடுத்தாலோ – அதன் நிலைமை doubtful.அதாவது சந்தேகத்துக்கிடமாக இருக்கிறது – என்று பொருள்.

ஆனால் எந்த கம்பெனிதான் தனக்கு'D' சான்று கிடைத்துள்ளதை ஒப்புக் கொள்ளும்? FAAA கிடைக்கும்போது மட்டும்தான் பக்கம் பக்கமாக விளம்பரம் வெளியிட்டுக் கொள்வார்கள். B,C,D என்றெல்லாம் கீழ்நோக்கிப் போனால் கமுக்கமாக இருந்து விடுவார்கள்!

ஆனால், பணம் பண்ண நினைக்கும் சிகாமணியோ, நாமோ கம்மாயிருந்து விடக் கூடாது.

கிரைஸில் போன்ற அமைப்பில் தோண்டித் துருவி விசாரித்து, அப்புறமாக நம் பணத்தை முதலீடு செய்யணும். இல்லாவிட்டால் கிரைஸிலின் மிக உயர்ந்த சான்றை ஏற்கெனவே பெற்றுவிட்ட சுந்தரம் ஃபைனான்ஸ் அல்லது சோளமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்ட் ஃபைனான்ஸ் மாதிரியான கம்பெனிகளில் முதலீடு செய்து கொள்ளலாம்.

கிரைஸிலைப் போலவே செயல்படும் வேறு இரு நிறுவனங்கள் ICRA (Industrial Credit Rating Agency Limited) மற்றும் CARE (Credit Analysis and Research Ltd) இவற்றின் அங்கீகாரமும் கூட நம்மை ஏமாறாமல் காப்பாற்றும்.

ஆனால் எந்தவொரு நிதி நிறுவனமும் CARE, ICRA அல்லது CRISIL இன் ஆய்வுக்குத் தன்னை உட்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் கிடையாது. அதனால் பல நிறுவனங்களின் செயல்பாடு பற்றி அவை செய்து கொள்ளும் விளம்பரத்திலிருந்துதான் நாம் அறிய முடிகிறது. விளம்பரங்களில் மிகை இல்லாமல் இருக்குமா...?

அதனால்தான் எல்லா நிறுவனங்களும் ஏதேனும் ஓர் அமைப்பின் ஆய்வுக்கு உட்படுவதைக் கட்டாயமாக்க வேண்டும் என்று இப்போது நிபுணர்கள் குரல் கொடுக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

இது முதலீட்டாளர்களுக்கு மட்டுமே ஆதரவான ஒருதலைபட்சமான குரல் அல்ல... ஏனென்றால், இப்படியொரு சட்டம் வரும் போது நிறுவனங்களின் செயல்பாடும் மேம்படத்தானே செய்யும்!

(பணம் பெருகும்)

வி. கோபாலன்



நீங்கள் நல்ல கணவனாக இருக்க வேண்டுமா?

எல்லா கணவன்மார்களும் அவசியம் படிக்க வேண்டிய விஷயம் இது.

●● உங்களுக்குக் கிடைத்திருக்கும் மனைவி ஒரு பொக்கிஷம். உங்கள் தாயுடனோ, சகோதரியுடனோ ஒரு போதும் அவளை ஒப்பிட்டு பிரச்னை உண்டாக்காதீர்கள்! அவள் உங்கள் தாயைப் போல் எப்படி இருக்க முடியும்? மிஞ்சி மிஞ்சிப்போனால் அவள் தனது தாயைப் போலத்தான் இருப்பாள்!

●● உங்கள் மனைவி எப்படி உங்களுக்கு உண்மையாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறீர்களோ, அதையேதான் அவளும் உங்களிடமிருந்து எதிர்பார்ப்பாள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். பிற பெண்கள் விஷயத்தில் கடிவாளம் கட்டாயம்.

●● உங்கள் அலுவலகப் பணியை ஒரு போதும் வீட்டுக்குக் கொண்டு வராதீர்கள். பணிதான் முக்கியமென்றால் பின் திருமணம் எதற்கு? ஒரு வெற்றிகரமான கணவனாக இருப்பது, வெற்றிகரமான தொழிலதிபராக இருப்பதை விடக் கஷ்டமான காரியம்!

●● மனைவி என்பவள் சம்பளமில்லாத வேலைக்காரி அல்ல! உங்களைப் போலவே அவளுக்கும் அலுப்பு, சலிப்பு, களைப்பு உண்டு. உங்கள் சின்னச் சின்ன காரியங்களை நீங்களே பார்த்துக் கொள்ளலாமே! முடிந்தால் உங்கள் மனைவியின் வேலைகளில் அவ்வப்போது கூடமாட ஒத்தாசை செய்து பாருங்கள்! விளைவுகள் படு சுவாரஸ்யமாக இருக்கும்!

●● நயாபைசா செலவில்லாமல் மனைவியை உங்கள் வசமாக்க ஒரே வழி– பாராட்டுங்கள்! அவளது செய்கைகளை, சாதனையை (அப்படி ஏதும் இல்லா விட்டாலும்) சமையலை, புடைவையை, மேக்–அப்பை மனதாரப் பாராட்டுங்கள்! அடிக்கடி பாராட்டுங்கள். நேசத்தை மனத்தில் வைத்துப் பூட்டாதீர்கள். வாய் வார்த்தைதான் வடிகால்.

●● உற்சாகமூட்டும் கணவனாக இருப்பது நல்லதுதான். ஆனால், உதவி புரியும் கணவனாகவும் இருப்பது அதைவிட முக்கியம். வேலைக்குப் போகிற மனைவி என்றால், ஒருநாள் அவளுக்கும் சேர்த்து, காலை உணவை நீங்களே சமைத்துப் பாருங்கள். ரியாக்ஷன், மாலையே தெரியும்!





●● பணிபுரியும் பெண், வீட்டை அலட்சியப்படுத்துகிறாள் என்பது தவறான கருத்து. அவள் நன்கு திட்டமிடத் தெரிந்தவள். பரந்த கண்ணோட்டத்தைக் கொண்டவள். பிறரோடு பழகுவதன் மூலம் அவள் சிறந்து விளங்கி, குடும்பத்திற்கு ஒரு சொத்து ஆகிறாள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்!

●● நீங்கள் புகை பிடிப்பவராக இருந்தால், புகை பிடிக்காத பிறருக்கு உங்களால் நேரும் வேதனையைப் புரிந்து கொள்ள முடியாது. உங்கள் புகைப் பழக்கம், உங்கள் மனைவிக்குப் பிடிக்கா விட்டால் பாடுபட்டு, அதை விட்டுவிடுங்கள். அல்லது மனைவியோடு இருக்கும் சமயங்களிலாவது புகைக்காமலிருங்கள். வீட்டுக்கு வரும்போது வாய் சுத்தமாக இருக்க வேண்டியது அவசியம்!

●● மனைவியிடம் பொய் சொல்லாதீர்கள்! எதையும் மறைக்கப் பார்க்காதீர்கள். கலந்து பேசுவதன் மூலம் எத்தகைய பிரச்னையையும் சுலபமாகத் தீர்த்து விடலாம்!

●● ஒரு விருந்தின்போது அவளைச் சுற்றி ஆண்கள் கூடினால் அது பற்றிப் பெருமை கொள்ளுங்கள். பிறரை அவள் கவர்வது உங்களுக்குப் பிடிக்கவில்லையெனில் கோளாறு உங்களிடம்தான்! உண்மையான அன்பு என்பது நம்பிக்கையின் அடிப்படையில் உண்டாவதுதான்!

●● உங்களுக்கு வேண்டுமானால் உங்கள் தாய் உலகத்திலேயே சிறந்த பெண்மணியாகத் தோன்றலாம். உங்கள் மனைவிக்கும் அப்படியே தோன்ற வேண்டுமென்று கட்டாயமில்லையே! அவள் உணர்வுகளையும் புரிந்து கொள்ளுங்கள்!

●● நீங்கள் கோபமாக இருக்கும்போது என்ன சொல்கிறீர்கள் என்பதில் கவனமாக இருப்பது அவசியம். சம்பந்தமில்லாத விஷயங்களைப் பற்றி (உதா: 'ங்கொப்பன் மட்டும் யோக்கியமா?') பேச வேண்டாம்.

●● எதிலும் எப்போதும் பொறுமை அவசியம். ஒவ்வொரு நிமிடத்தையும்



இன்பமாக்க முயலுங்கள். (உங்கள் மனைவிக்கு) அவசரமாக ஆபீஸ் கிளம்பும்போது ஒரு முத்தம், கரத்தின் அழுத்தம், கன்னத்தில் வருடல்– இவைகளால் சாதிக்க முடியாதவைகளே இல்லை!

"நல்ல கணவனாக இருப்பது எப்படி?"
என்னும் நூலிலிருந்து: **மௌலி**
நன்றி: கண்ணதாசன் பதிப்பகம்,
சென்னை - 17, விலை: ரூ. 21/-



"ஏம்ப்பா 501, பிளேடு பக்கிரியை லாக்கப்ல அடைக்கச் சொன்னா அவனோட என்னய்யா வாக்குவாதம் பண்ணிக்கிட்டு இருக்கிறே?"

"வேற ஒண்ணுமில்லை சார். அமெரிக்க ஜனாதிபதி கிளிண்டன் கூட நின்னு எடுத்துக்கிட்ட போட்டோவைக் காட்டி, சம்பவம் நடந்தன்னைக்கு வெள்ளை மாளிகைல அவர் கூடத் தங்கியிருந்தேங்கிறான் சார்!"

– நாகலை இளவல்

மரம் நடுவதன் பலன்




பலவிதமான மரங்களை நிழல் இல்லாத இடங்களில் உண்டாக்கி வளர்த்து, வழிப்போக்கர்களுக்கு நிழலுண்டாக்கியவன் தன் வம்சத்தில் இறந்தவர்களையும், இனி பிறப்பவர்களையும் பாவிகளாக இருந்தாலும் தூய்மைப்படுத்தப் பிதுரர்களுக்குப் ப்ரீதி உண்டாக்குபவனுவான்.

ஒருவன் இறந்த பிறகு அவனது புத்திரர் அவனைச் சாந்தியடையும்படி பலவித கிரியைகளைச் செய்வதுபோல் ஒருவன் வளர்த்த மரங்களும் அவனை சாந்தியடையச் செய்விக்கும். மரங்கள் மலர்களினுல் தேவகணங்களையும் பழங்களினுல் பிதுர்த் தேவர்களையும் நிழலினுல் அதிதிகளையும் பூஜிக்கின்றன. மலர், பழம் முதலியவற்றுடன் கூடி நின்று பூவுலகத்தில் இருப்பவர்களையும் திருப்தி செய்விக்கின்றன.

கின்னரர், உரகர், இராக்ஷஸர், தேவர், கந்தருவர், ரிஷிகணங்கள் முதலிய யாவரும் விருக்ஷங்களை விரும்புகிறுர்கள். இகத்திலும் பரத்திலும் இம்மரங்கள் தம்மை வளர்த்தவனுக்குப் புத்திரர்கள் என்று சொல்லப்படுகின்றன.

நீர்த்துறைகளை உண்டாக்குபவர்களும், மரங்களை நட்டு வளர்ப்பவர்களும், யாகங்களைச் செய்த வேதியர்களும் சத்தியவான்களும் ஒரு காலத்திலும் ஸ்வர்க்க லோகத்தை விட்டு நீங்க மாட்டார்கள்.

(சிவ மஹா புராணம்)



என்னுயிரும்

பெண் வேண்டாம் என்று அறவே மறுக்க மிகப் பெரிய வைராக்கியம் வேண்டும். அது தொடர்ந்த போராட்டம். நியமங்களும் நிஷ்டைகளும் துணை செய்தால் பார்க்கின்ற பெண்களை தெய்வ ரூபமாய்ப் பார்க்க இயலும். இப்படிப் பெண்ணை விலக்கிய மனிதர் லட்சத்தில் ஒருவராகத்தான் இருக்க முடியும். பெண்ணை விலக்க வேறொரு சுலபமான வழி உண்டு. பசியை அடக்க உணவு உண்பது போல பெண்ணை விலக்கப் பெண்ணை அனுபவித்து விடுவது ஒரு வழி. பெண்மையின் அண்மை இருந்து அனுபவங்கள் மெருகேற கொஞ்சம் கெட்டிக்காரனுக்கு 'போதுமென்ற திருப்தி ஏற்பட்டுவிடும். 'ச்சீ... ச்சீ இந்தப் பழம் புளிக்கும்' என்று இழிவுபடுத்துவதைவிட திகட்டும்படி தின்றுவிடுவது நல்லது. "திராட்சைப்பழம் சாப்பிடு... அது உடம்புக்கு நல்லது. நான் வேண்டுமென்ற திராட்சைப் பழம் சாப்பிட்டிருக்கிறேன்..." என்று திராட்சைப்பழம் சாப்பிடாமல் பேச முடியும்.

ஆனால் பெண் வேண்டாமென்று பிரம்மச்சாரியாய் இருப்பதைவிட மிகப் பெரிய போராட்டம் பெண்ணோடு வாழ்வது. பெண் வேறு வகைப் பிராணி அல்ல. ஆணைப் போல சமமான அறிவும் உணர்வும் உள்ள ஜீவன். இதனால் அவளைப் புரிந்து வாழ்க்கை நடத்த வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இந்தப் புரிந்துகொள்ளுதலுக்கு மிகப் பெரிய பொறுமை தேவையாக இருக்கிறது. பொறுமையின் முதல் விஷயம் விட்டுக் கொடுத்தல். விட்டுக் கொடுத்தலின் வெளிப்பாடு, பெண் சீறினாலும் மௌனமாக ஏற்றுக் கொள்ளுதல்.

நாற்பது ஏக்கர் நன்கு முதிர்ந்த ஏலக்காய் எஸ்டேட்டுக்குச் சொந்தக்காரரான கதிரேசனை, நாச்சியப்பச் செட்டியாரின் மூத்த மகனை, பன்னிரண்டரை லட்ச ரூபாய் பாங்க் பேலன்ஸ் உள்ள கதிரேசனை, படித்தவனை, ஆங்கிலம் பேசுகிறவனை, கம்ப்யூட்டர் தெரிந்தவனை, கவிதைகள் எழுத முயற்சிக்கிறவனை, சாதாரண டிரைவர் என்று நினைத்துக் கொண்டு சொர்ணலட்சுமி சீறினாள்.

"டிரைவராடா நீ... மாட்டு வண்டி

நீயல்லவோ

12

பாலகுமாரன்

ஒட்டிட்டிருந்தவனெல்லாம் டிரைவர்னு வந்துட்டீங்களா? பைத்தியக்காரனா நீ.. ஏன் ஒடிச்சு ஒடிச்சு ஓட்டினே?" - விழுந்த அவ மானத்தைக் கடுங்கோபமாக மாற்றினாள்.

ஆணும் அவமானம் தாங்காதவன்தான். அதிலும் பெண் அவமானப்படுத்திவிட்டால் நொந்து நொறுங்கிப் போகிற ஜாதிதான். அதேசமயம் அவமானப்படுத்திய பெண்ணை எதிரியாகக் கருதாது ஆச்சரியமான விஷய மாய்ப் பார்த்துவிட்டால், அவனுக்கு அவ மானம் உறைப்பதேயில்லை. ஆணுக்குப் பெண்ணில் எது ஆச்சரியம்? பெண்ணின் அழகுதான். ஆணை அதிரடிக்கிற விஷயம். பத்தாவது படிக்கிறபோது சினிமா போஸ் டரில் உள்ள நடிகையின் உருவத்தைப் பார்த்துத் திகைத்துப் போன அதேவிதமாய் கதிரேசன் இப்போதும் திகைத்துப் போனான். அவன் கண்கள் அளவெடுக்க ஆரம்பித்தன.'அதிசயிக்கத் துவங்கின. அந்த மழையைத் தாண்டி ஏதோ ஒரு வாசனை அந்தப் பெண் மீது வீசியது. அது, புல் வாச னையா... பெண் வாசனையா என்கிற கேள்வி வந்தது.

அவன் பார்ப்பதை அவள் பார்த்தாள். 'அடச்சீ' என்று மனசுக்குள் திட்டினாள். "சரியான பன்னாடை" என்று வாய்விட்டுத் திட்டினாள். ஒரு சாய்வு நாற்காலியின் முதுகுப் பக்கம் போல சரிவாய் இருந்த மலை மீது கையும் காலும் ஊன்றி ஏறத் துவங்கினாள்.

கடல் போல மலையும் ரகசியமானது. எல்லோராலும் மலைமீது வசிக்க முடியாது. மலைமீது வசிக்கச் சுத்தமான நுரையீரல் வேண்டும். மூச்சுப் பிடித்துப் பழக்கம் இருக்க வேண்டும். தொடையிலும் ஆடு தசையிலும் அதிகமான வலு இருக்க வேண் டும். நடந்து நடந்து வலித்தாலும் லட்சியம் செய்யாத புத்தி இருக்க வேண்டும். நாகர் கோவில் கடற்கரைப் பக்கம் சொர்ண லட்சுமி உப்புக்காற்று சுவாசித்த பெண். முறைத்துப் பார்க்கும் ஆளிடமிருந்து நகர்ந்துவிட வேண்டுமென்று கையூன்றி மலையேறினாள். சொட்டச் சொட்ட நனைந்தபடி கொட்டும் மழையில் அப்படி ஏறுவது அவ ளுக்கே ஆயாசமாகத்தான் இருந்தது. ஆனா லும் நாற்பதடி சரிவை ஒரு பதினைந்து இரு பது தப்படியில் கடந்து விடலாம் என்று தோன்றியது. ஆனால் மலை ரகசியமானது. நாலாவது தப்படியில் மலையின் புற்கள் அவள் காலடியில் வாரிவிட்டது. அவள் கைகளால் புற்களைப் பற்றி வயிறு ஒட்டி குப்புறக் கிடந்தாள். மேலேறுவதற்காக இரண்டு முறை காலை நகர்த்த பிடிமான மாய் இருந்த புற்கள் வேரோடு வந்தன. புற்கள் கைவிட சொர்ணலட்சுமி சறுக்கி னாள். ஏறியதைவிட மிகவேகமாய்க் கீழே நழுவினாள். உடம்பு ஈரப்புல் தரையில் நழுவும்போது புடைவை சுருட்டிக் கொண்டு தூக்கிற்று. கொலுசு போன்ற கணுக்கால், வெள்ளை வெளேரென்ற ஆடு தசை என்று நகர்ந்தது.

'கடவுளே!' என்று அவள் மல்லாந்து புரண்டாள்.

எழுந்து நின்று புடைவையைத் தழைத் துக் கொள்ள முயன்றாள். முக்கால்வாசி எழுந்து நின்றபோது குப்புறவிழாமல் இருப் பதற்காக சொத்தென்று உட்கார்ந்தாள். உட் கார்ந்த வேகத்தில் மறுபடியும் சறுக்கினாள். கதிரேசனை முட்டிக் கொண்டு நின்றாள். இப்படி ஒரு மோசமான கோணத்தில் தான் இருக்க நேர்ந்த அவமானம் அவளைத் தாக் கிற்று. அவசரமாக நகர, அவன் கால்களை அழுத்தி அவளை நகர ஒட்டாமல் செய்தான்.

"பைத்தியம்... முரட்டுத்தனம் பண்ணாத பைத்தியம்... வுட்டா இன்னும் கீழ போயிடுவ. அப்புறம் ரெண்டு நாள் பொறுத் துத்தான் மேல வரமுடியும். அந்தப் பக்கம் ஆடு மாடு கூட போக முடியாத இடம். உன்னைக் கயிறு போட்டுத்தான் தூக்க முடி யும். உன்னை ஒண்ணும் செய்துர மாட் டாங்க... கொஞ்ச நேரம் அப்படியே இரு."

"எப்படி இப்படியே இருக்கிறது?" அவள் ஆங்காரமாய்க் கத்தினாள்.

"அப்ப போ..." அவன் புரண்டு விலகிக் கொண்டான்.

அவள் இன்னும் நாலடி சறுக்கினாள்.

அருகம்புல் போல் காட்சியளித்த ஆனைப்புல்லில் மழை பட்டுப் பட்டு ஒரு வழுவழுப்பு ஏற்றியிருந்தது. மண், கோதுமை அல்வாவாய் ஒரு நெகிழ்வில் இருந்தது. சொர்ணலட்சுமி நாலடி சறுக்கி, அவன் வலதுகால் பேண்ட்டை இறுக்கப் பிடித்து மல்லாக்கக் கிடந்தாள். கதிரேசன் இடக்கையால் புல்லைக் கொத்தாகப் பிடித்தபடி குப்புறக் கிடந்தான். குப்புறப்படுத்தபடியே காலின் கீழ் மல்லாக்க இருக்கும் சொர்ணலட்சுமியை வியப்புடன் பார்த்தான். அது ஓர் அதிரடி ஆங்கிளாக இருந்தது. பயத்தில் அவள் வேகமாக மூச்சு விட்டுக் கொண்டிருப்பதை அசைவுகள் மூலம் உணர முடிந்தது. இன்னொரு மேகம் தரையிறங்க இன்னொரு மேகம் மலையிறங்க இன்னும் இருட்டாகி அடர்த்தியாய் மழை பெய்யத் துவங்கியது. முதுகு முழுவதும் சுள்ளென்று வலிக்க மழை பெய்தது. இரண்டு பேரும் மூன்று நிமிடங்கள் அப்படியே இருந்தார்கள்.

"நான் சொல்றதைக் கொஞ்சம் கேக்கறியா?" கதிரேசன் பேசத் துவங்கினான்.

அவள் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

"கையை வுட்டுட்டேன்னா இன்னும் அறுபதடி கீழ போயிடுவ. அப்படியே புரண்டு அப்படியே ஏறி எனக்குச் சமமா வா. நின்னு நிமிர்ந்து மலையேற முடியாது. ஓணான், பல்லி மாதிரி வயிறு ஒட்டி தம் புடிச்சு ஏறணும். எங்கயாவது குச்சி உடைச்சி, மண்ணுல குத்தி, அதைப் புடிமானமா வச்சுக்கிட்டு நகரணும். உனக்கு மலைபத்தித் தெரியலை. முரட்டுத்தனம் காட்டாத, மேலே போறதுக்கு வழிபாரு. சொல்றது புரியுதா?"

அவள் அப்படியே மல்லாக்கக் கிடந்தாள்.

"நாங்கல்லாம் நல்ல குடும்பத்து லேடீஸ்" என்றாள்.

"யார் இல்லைன்னது?"

"இந்த மாதிரியெல்லாம் ஆம்பளை பக்கத்துல இருக்க மாட்டோம்."

"இப்படி இருன்னு நானா சொன்னேன்? கார்க் கதவுல போய் டமால்னு முட்டினே. கதவு புட்டுக்கிட்டு வுழுந்தே. வுழுந்த உன்னைக் கூட்டிட்டுப் போறதுக்காக நான் இறங்கினேன். என்னையும் ஏற வுடாத நீயும் ஏறாத... இப்படி பேண்ட்டைப் புடிச்சுக்கிட்டு தொங்கிக்கிட்டிருந்தா என்ன அர்த்தம்? அதனாலதான் சொல்றேன், புரண்டு எனக்குச் சமமா ஏறி வா. கையும் காலும் ஊனி என் பக்கத்துல குப்புறப்படுத்துக்கோ. நாற்பத்தஞ்சடி அம்பதடி மேல ஏறணும். நிதானமா ஏறணும். வெக்கப்படாதே. நான் உன்னை ஒண்ணும் செய்துர மாட்டேன். புரியுதா? பயந்து போய் ரொம்ப இழுத்தேன்னா நானும் புடிய வுட்டுச் சரிய வேண்டியதுதான். பெரிய கொத்தா புல்லைப் புடிச்சிருக்கேன். ஒரு அளவுக்கு மேல வெயிட் தாங்காது. அதனாலதான் சொல்றேன். பதட்டப்படாத வா..."

"என் தலையெழுத்து... கண்ட ஆம்பளைக்கு முன்னால இப்படி நிக்கணும்னு..."

"எனக்கு ஒண்ணும் தேவையே இல்லை... நீ மேலே போ... இல்லை கீழே போ... பேண்ட்டை வுடு."


"இடிச்சுக் கீழே தள்ளிட்டு ஈவு இரக்கமில்லாம பேசறாம் பாரு." அவள் அவனுடைய பேண்ட்டை இன்னும் இறுக்கமாகப் பிடித்துக் கொண்டாள்.

"ஒரு உதை வுட்டேன்னா எங்கேயோ போய் வுழுவ நீ. சாவறதுக்குன்னே ஏலக்கா எஸ்டேட் வந்திருக்க."

"நாங்க நல்ல குடும்பத்து லேடீஸ்."

"அப்ப நாங்கல்லாம் யாரு? எங்களுக்கெல்லாம் குடும்பம் கிடையாதுன்னு நினைச்சுக்கிட்டிருக்கியா? எப்படியோ போ!"

அவன் இரண்டு எட்டு ஏற, அவள் அவன் பேண்ட்டை இன்னும் இறுகப் பற்றிக் கொண்டாள். அவன் தன்னை விட்டுப் போய்விடுவான் என்று குப்புறப்படுத்தாள். கை ஊன்றி, கால் ஊன்றி மலை ஏறுகிற மாடு போல் அவனுக்கருகே வந்தாள். மெல்ல மெல்ல இப்படி வந்துவிடலாம் என்று எண்ணிச் சற்று வேகமாய் மேலேறத் துவங்கினாள். நாலுமுறை புல்லை மிதித்த முன்கால் பாதம் வழுவழுப்பாகி ஐந்தாவது மிதிக்குச் சறுக்கிவிட்டது. மீண்டும் சறுக்கிக் கொண்டு வந்தாள். அவன் புரண்டு கை



"எவ்வளவு தைர்யம் இருந்தா கள்ள நோட்டை மாமூலா தருவாய்?"

"என்னோட தொழிலை நானே மதிக்கலேன்னா எப்படி, தொரே!"

— அம்பை தேவா

யூன்றி உட்கார்ந்து கொண்டான்.

"கருமகாண்டம்." கத்தினான்.

"யாரைச் சொல்றே?"

"இங்க வந்து மாட்டிக்கிட்டேனே... என்னைச் சொல்றேன்."

"நகர்ந்து போயிரட்டுமா... நீயா மேல ஏறிக்கிறியா?"

"கொஞ்சம் இரு. போயிராத..." கத்தினான். காலை அவன் முதுகின் மீது வைத்து உந்தி ஏறினான்.

"இப்ப காலை மடக்கு..." அவன் கத்தினான். அவன் காலை மடக்க, அவன் பின் பக்கமாய் நகர்ந்தான்.

அவளுக்கு அவனைப் போல உட்கார்ந்தபடியே பின்நோக்கி மேலேறிவிடலாம் என்று தோன்றியது.

அவள் புரண்டு உட்கார்ந்தாள். புல் நசுங்கிச் சாறு நெகிழ்த்தியது. ஈரப்புடைவையில் சாறு வழவழக்க அவள் சட்டென்று இறங்கி அவன் முதுகோடு ஒட்டிக் கொண்டாள்.

"கருமகாண்டம்... சொல்லியே... ஏதாவது சொல்லு... சொல்லித் தொலைச்சிடு. நீயா ஏதாவது பண்ணிட்டு நீயா ஏதாவது சொல்லிக்க. உன்னைக் கார்ல ஏத்துன பாவத்துக்கு நான் இதையும் அனுபவிக்கணும். இதுக்கு மேலேயும் அனுபவிக்கணும். இப்ப என்ன பண்ணப் போறே? இப்படியே ஒட்டிட்டு இருக்கப் போறியா? இல்ல உருப்படியா மேல போகப் போறியா?"

"ஏன் இப்படிச் சறுக்குதுன்னே தெரியலை. அவள் குனிந்து புற்களைப் பார்த்தாள்.

"இந்த இடம் முழுக்க விளக்கெண்ணெய் தடவி வச்சிருக்கு நீ சறுக்கணும்னு."

"இப்ப என்ன பண்றது?"

"நீ படிச்ச பொம்பளைதானே?"

"ஆமா..."

"அதான் பிரச்னை. படிக்காத பொம்பளையா இருந்தா இந்நேரம் சொல் பேச்சு கேட்டு மேல போயிருக்கும்."

"நான் என்ன செய்ய?"

"நீயா எதுவும் செய்ய வேணாம். என் முதுகுல கால் வச்சு விலகிப் போய்க் குப்புறப் படுத்துக்க. நான் உன் பக்கமா வரேன். என் இடுப்பையோ தோளையோ இறுக்கப் புடிச்சுக்க. நான் புல்லைப் பக்குவமாப் புடிச்சு மேல போயிருவேன். நான் கால் தூக்கி உந்துறபோது நீயும் கால் தூக்கி உந்தணும். என்னை இரிப்பாப் புடிச்சிக்கிட்டு, கால் உந்தி மேல வரணும்."



"இப்போ, உங்க கட்சி எப்படி இருக்கு?"

"நல்லாவே வளர்ந்துகிட்டு வருது; முன்னே கட்சியிலே மூணு கோஷ்டிதான் இருந்துச்சு; இப்போ ஆறு கோஷ்டிகள் இருக்கு!"

— வி. ரெங்கநாதன்

"ஆபத்து நேரத்துலதான் ஜெண்ட்ஸ் அட்வான்டேஜ் எடுக்கறாங்க."

"என்னா எடுக்கறாங்க?"

"அட்வான்டேஜ்... அத்துமீறல்."

"குரங்கு, சனி, பீடை, தரித்திரம். இது பெரிய ரம்பை... நாங்க அத்துமீறி ஆடறோம். எப்படியாவது போய் ஒழி."

அவன் விலகிச் சறுக்கி புற்களைப் பிடித்து நின்று, அவளைக் கடந்து போனான்.

அவளும் குப்புறப் படுத்து முதுகுச் சட்டையைப் பற்றிக் கொண்டாள். அது கிழிய அவள் அவன் இடுப்பைப் பிடித்துக் கொண்டாள். நகர்வது சிரமமாக இருந்தது. அவன் இரைந்தான். எம்பி அவளாகவே அவன் தோள் பிடித்துக் கொண்டாள். அவள் பாதி உடம்பு அவன் முதுகில் கிடந்தது. அவன் மலை விளிம்பில் வேர் பிடித்து நின்றான். அவளைத் தன் தலைமீது கால் வைத்துப் போகச் சொன்னான்.

அவள் ஏறி கார் நிற்கும் சமதளத்துக்குப் போனதும் அவன் ஏறி மேலே வந்தான். தள்ளாடி ஒரு மரத்தடியில் உட்கார்ந்து கொண்டான்.

"என்னா... ரொம்ப கஷ்டமாயிடுச்சா...?" அவள் குனிந்து விசாரித்தாள்.

அவன் சட்டை பட்டனைக் கழற்றிக் காட்டினான். மார்பு முழுவதும் செதில் செதிலாய் சிராய்த்திருந்தது. மண்ணைத் தட்டிவிட ரத்தம் வந்தது. அவள் அவனை மரத்தில் சாய்த்துத் தன் முந்தானையால் அவன் நெஞ்சு மண்ணைத் துடைத்தாள். ஓர் ஆணை அவள் இப்படித் தொட்டது இது தான் முதல் தடவை.

(தொடரும்)

மாஸ்டர்

மாஸ்டர் வந்துவிட்டார். கணேசனுக்கு இருப்பு கொள்ளவில்லை. எட்டு வருடம். பெரிய இடைவெளி. வேலை ஓடவில்லை. அண்ணன் வந்தால் சொல்லி விட்டுப் போகலாம். விடுவாரோ? தெரியாது. இன்னும் இரண்டு ஜாக்கெட்டுகளுக்குத் துணி கத்திரித்து வைத்துப் போயிருக்கிறார். சாயங்காலம் வரை வேலையிருக்கும்.

ராத்திரி கடைசி வண்டிக்கு மாஸ்டர் வந்த செய்தியைச் சொன்னது ராஜு மாமாதான். காலை கடை திறந்த போதே வந்து தகவல் சொல்லி விட்டார். அண்ணன் வெறுமனே தலையாட்டினார்.

"என்ன செஞ்சாராம் இத்தனை நாள்?"

"யார் கண்டா? வடக்கே எங்கோ திரிஞ்சிட்டிருந்திருக்காரு."

எட்டு வருடம் முன்பு, யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் மாஸ்டர் போய் விட்டிருந்தார். அப்புறம் கடிதமுமில்லை. தகவலுமில்லை. யாத்திரை போன மேடவாக்கம் மாமா, டெல்லியில் பார்த்ததாய்ச் சொன்னார். பின்னொரு முறை, லீவுக்கு வந்த ஜெயராஜ் அண்ணன், செகந்தராபாத்தில் தன் குவாட்டர்ஸில் வந்து சாப்பிட்டு விட்டுப் போனதாகச் சொன்னார்.

இதெல்லாம்தான் சந்திரா அக்காவை சமாதானப் படுத்தி வைத்திருந்தது. என்ன இருந்தாலும் வந்து விடுவார் என்று தீவிரமாக நம்பினாள். குறைந்த பட்சம் அம்முக்குட்டிக்காகவாவது வந்து விடுவார். மாஸ்டர் போன போது அம்முக்குட்டி ஒன்றாவதோ, ரெண்டாவதோ படித்துக் கொண்டிருந்தது.

தையலில் கவனம் செலுத்த முயன்றான் கணேசன். இந்த ஜாக்கெட்டை முடித்து விட்டால் கூட போதும். மூனாவது தெரு சித்தியினுடையது. நாளன்னைக்கு ஏதோ கல்யாணம், கண்டிப்பாய் வேண்டும் என்று சொல்லியிருந்தாள் சித்தி. ரொம்பக் கறார். பேச்சும் வெடுக்கென இருக்கும். அண்ணனே பயப்படுவார்.

இந்தச் சித்திக்கே, மாஸ்டரைப் பார்த்தால் கொஞ்சம் கலக்கம்தான். ஒருமுறை சித்தியின் பையன் செல்வத்தை அடித்து விட்டதற்காக, மாஸ்டரிடம் சண்டை போடப் போனாள் சித்தி. இன்னும் பள்ளிக் கூடத் தெருவெல்லாம் அந்த சம்பவத்தை ஞாபகம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

சித்தி கத்தத் தொடங்கினாள். மாஸ்டர் வெளியே வந்தார். வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டார். முதலில் மெதுவாகப் பேசினார். சித்தி எகிறி எகிறிக் கத்தினார். ஒரே அறை. திரும்பிப் பார்க்கும் கண நேரத்திற்குள் சித்தி அடங்கி விட்டாள். யாருமே எதிர்பார்க்கவில்லை, மாஸ்டர் அடிப்பார் என்று.

எல்லோரும் பயந்து விட்டார்கள். நிச்சயம் அடிதடி, சண்டை என்று தெருவே ரணகளப்படப் போகிறது என்று அரண்டார்கள். ஒன்றும் நடக்கவில்லை. செல்வத்தைக் கூட்டிக் கொண்டு சித்தி வீடுபோய்ச் சேர்ந்தாள். மணியக்கார மாமா மட்டும் ஆச்சரியமாய்ச் சொல்வார்.

"கட்ன பொண்டாட்டியக் கூட எவனும் இப்படி அறைய மாட்டான்யா! என்னமா ஒரு அறை! அவளும் வாயை மூடிக்கிட்டுப் போயிட்டாளே!"

மாஸ்டரை அதுவரை எவரும் கோபப் படுவார் என்றே நினைத்ததில்லை. அதன் பிறகு கொஞ்சம் கொஞ்சமாய் கோபம், அவர் குணமாகவே நினைக்கப்படத் தொடங்கியது. சந்திரா அக்கா உதைபடுவதாய்ப் பேசிக் கொண்டார்கள். கணேசனே, அம்முவைத் தொடையில் கிள்ளி, கன்றிப் போயிருப்பதைப் பார்த்திருக்கிறான்.

ஆனால் இதெல்லாம் அவனுக்குப் பெரிதாய்த் தோன்றியதில்லை. அடங்காப் பிடாரிகளையும், சோம்பேறிகளையும் நல்வழிப் படுத்தும் வழியாகவே நினைத்தான். வேறென்ன செய்ய முடியும்? ஆனால் மாஸ்டர் அவனுக்கு வேறு முகத்தோட அறிமுகமாகியிருந்தார்.

கண்டிப்பு. அதே நேரத்தில் கருணை. எட்டாம், ஒன்பதாம் வகுப்புகளுக்கு அவர்தான் கணக்கு மாஸ்டர். கணக்கு வரவில்லையென்றால் மூட்டி உடைந்துவிடும். அப்புறம் அவரே கூப்பிட்டு பக்கத்தில் உட்கார்த்தி, ஒவ்வொரு படியாய்ச் சொல்லித்தருவார். அவர் சொல்லும்போது எல்லாம் புதுசாய் இருக்கும். துலக்கியது போல், தெளிவானது போல்.

ஒரு ராகத்தை இசைப்பது போல் வருடி வருடிப் போகும். அவர் வார்த்தைகளின்

ஆர். வெங்கடேஷ்

அன்னியோன்யம் ஒரு சிட்டிகைத் தூக்கலாய்த்தெரியும். பின்னர் பேசிக் கொண்டு வீடு வரும்போது, தோளில் கை மட்டும்தான் போடமாட்டார். மற்றபடி சகலமும் பேசுவார், பெண்கள் உட்பட.



கணேசனுக்கு வெட்கமாய் இருக்கும். பேசக் கூடாதோ என்று தோன்றும். பேசும்போது, அழகும் கிளர்ச்சியும் கலந்து கட்டி, பூரிக்க வைக்கும். அழகு தான் பிரதானம் என்பார். அவர் அழகு, மேல் தோலோடு மட்டும் நிற்கவில்லை. மனசின் அழகுகளை ஒருசில வார்த்தைகளில் சொல்லி விடுவார். இப்படிப்பட்டவர் சந்திரா அக்காவை அடிப்பதையோ, அம்முவைக் கிள்ளுவதையோ, கணேசனால் நம்ப முடியவில்லை.

பல சனி, ஞாயிறுகள் அவரோடே போயிருக்கின்றன. மடை திறந்துவிடவும், களையெடுக்கவும் அவரோடு வயலுக்குப் போயிருக்கிறான். வீட்டுத் தோட்டத்தில் மஞ்சளும், பூச்செடிகளும் வைக்கும்போது கூட உதவியிருக்கிறான். எல்லாமே பேச்சு சுவாரஸ்யத்தோடு நடந்து கொண்டேயிருக்கும். நேரம் கிடைத்தால் அம்முவோடு விளையாட்டு. சில மாத்தியானங்களில் சந்திரா அக்காவின் கைச் சாப்பாடு.

வருங்காலத்தில் மாஸ்டர் மாதிரியே ஆக வேண்டும் என்று நினைத்திருக்கிறான். அவரைப் போலவே மீசை, நிறுத்தி நிதானமான பேச்சு, பின்கை கட்டின நடை எல்லாம் தனக்கும் வரும் என்று கணேசன் நம்பினான். எல்லாவற்றையும்விட, எவரிடமும் நின்று கனிவாய் புன்னகையோடு, வாஞ்சையோடு விசாரித்துப் பேசுவதைப் பழக்கப்படுத்திக் கொள்ள நினைத்திருக்கிறான்.

இந்தப் பேச்சு சுவாரஸ்யத்திற்கும், சரியான விளக்கங்கள், தெளிவுகளுக்கும் அவரிடம் நிறைய பேர் பேசினார்கள். தனக்குத் தெரிந்ததை அவரும் மறைக்காமல், வழி சொல்லிக் கொடுத்தார். பெண்களிடம் வாத்ஸல்யம் கொஞ்சம் கூடுதல் என்று ஊரில் பேசிக் கொண்டார்கள். உதவும் பழக்கம், பல வீடுகளின் உள்ளறைகள் வரை சென்றதாய்ச் சொல்லிக் கொண்டார்கள்.

கணேசனால் இவைகளை இன்றுவரை நம்ப முடியாதுதான் இருக்கிறான். ஓடிப் போனதற்கு, இதையேதான் காரணமாய்ச் சொன்னார்கள். யாரோ ஒரு புருஷங்காரன் பார்த்து அடித்துத் துரத்தியதன் பலன்தான் என்றார்கள். சந்திரா அக்கா நம்பவில்லை, கணேசனைப் போலவே!

"ஆமா அந்த கட்சி ரெண்டா பிரிஞ்சி கட்சிக் கொடிக்கு சண்டை போட்டுக்கிட்டாங்களே, என்னாச்சு...?

"ஆளுக்கொரு கலரா வைச்சிக்கிட்டாங்களாம்!"

– பொன். குமார்



புறம் பேசியவர்களையெல்லாம் சந்திரா அக்கா ஒதுக்கி வைத்தாள். இந்தப் பேச்சையெல்லாம் அடக்க, நிச்சயம் மாஸ்டர் வருவார் என்று காத்திருந்தாள். அந்த வீட்டுக்குச் சுவாதீனமாய் போய் வந்தவன் கணேசன் ஒருவன்தான். அம்மு வளர்ந்து நின்றபோது, மாஸ்டரைத்தான் நினைத்துக் கொண்டான் கணேசன். அவர் சொல்லிக்கொடுத்த பல அழகுகள் அவளிடம் துளிர்ப்பதாய் அவனுக்குத் தோன்றியது. பழைய சௌஜன்யத்தோடு பேசினாலும், உள்ளுக்குள் வெட்கம் தந்த விலகல், கணேசனுக்குப் பிடித்திருந்தது.

“என்னடா, முடிஞ்சிச்சா?”

அண்ணன் வெளியே செருப்பைக் கழற்றும் நிழல்.

“பட்டன் தெக்கனும்ணே. அவ்வளவுதான். முடிஞ்சிடுச்சி.” அண்ணன் உள்ளே வந்தார். இன்னொரு மிஷினில்போய் உட்கார்ந்து கொண்டார். வியர்வையைத் துடைத்தபடி, சுற்று முற்றும் பார்த்தார்.

“சரி, போய் சாப்பிட்டு வெரசா வா...”

எங்கோ பார்த்துச் சொன்னார். உடனே கிளம்பினால் அண்ணனுக்குப் பிடிக்காது. “எப்ப சொல்வேன்னு காத்திருந்தியா?” என்பார். சொன்னபின் பத்துப் பதினைந்து நிமிஷம் வேலை செய்ய வேண்டும். மறுபடி ஒருதரம் சொல்வார். அப்போ லேசாய் அசைந்து கொடுக்கலாம். அப்புறம் அவசரமே இல்லாததுபோல் கிளம்ப வேண்டும். எல்லாம் இங்கே வந்து கற்ற சூட்சுமங்கள். பொய்கள்.

கணேசனுக்கு எரிச்சலாய் இருந்தது. இவையெல்லாம் இயல்புகளில்லை. சொந்தமாய் இரண்டு மிஷின் போட்டு உட்கார்ந்துவிட்டதனாலேயே, அண்ணன் பெரியாளா? ஏன் இப்படி ஒரு அடக்குமுறை குணம்? ஏன் தன்நிலை மட்டும் இப்படியே இருக்கிறது! பத்தாவது முடித்த கையோடு காஜா எடுக்க வந்தவன்தான். இன்று மிஷின் பிடித்து ஓட்டினாலும் என்ன முன்னேற்றம், பலன்?

எங்கு தவறு என்று தெரியவில்லை. யோசிக்க யோசிக்கக் குழப்பம்தான். இந்த வேலையைக் காப்பாற்றிக் கொள்ள எவ்வளவு பொய் சொல்லியிருக்கிறான்? நினைக்கவே வெட்கமாய் இருக்கிறது. ஏன் இதெல்லாம்?

மாஸ்டரைத்தான் கேட்கவேண்டும். அவருக்கு விடை தெரிந்திருக்கலாம். தெரிந்திருக்கும். எத்தனையோ விஷயங்களுக்குத் தெளிவு சொல்லியிருக்கிறார். இதற்கா விடை தெரியாமல் இருக்கும்?

மாஸ்டர் வீட்டுக்கு நடந்தான். நாலாவது தெரு திரும்ப, மாஸ்டர் வீட்டு முருங்கைகள் தலையசைத்துக் கொண்டிருந்தன. ஆவலும் தயக்கமுமாய் கால்கள் பின்னின. எட்டு வருடங்கள். மாஸ்டர் முகம் மறந்திருக்கலாம்.

மீசை பெரிசாகி விட்டது. பருக்களின் தடங்கள் முகத்தில். இப்போது தொங்கத் தொங்க லுங்கி. சிங்கப்பூர் சரக்கு. உடல் கச்சலாய் உயரம் தெரிகிறது. வாசல் திண்ணையில் யாரோ உட்கார்ந்திருப்பது தெரிந்தது.

நெருங்க, முகம் முழுக்க வெண்தாடியோடு மாஸ்டர். திண்ணைச் சுவரில் தலை சாய்ந்திருந்தது. கண்கள் மூடியிருந்தன. நின்றான். தலைக்குத் துண்டை முட்டுக் கொடுத்திருந்தார். திட்டுத்திட்டாய் வெண்கேச மார்பு. முட்டி வரை தூக்கியிருந்த ஒத்தை வேட்டி. கூப்பிட்டான். இரண்டு மூன்று முறை உள்ளேயிருந்து அம்மு எட்டிப் பார்த்தாள். லேசாய்ச் சிரித்தாள் போலிருந்தது. தலை கவிழ்ந்து கொண்டான். மாஸ்டரைத் தட்டி எழுப்பினாள் அம்மு. உதறிக் கொண்டு எழுந்தார்.

“கணேசன்...”

இழுத்தாள். அவர் கண்களையே பார்த்திருந்தான் கணேசன். கால்களைத் தொங்கப் போட்டு உட்கார்ந்தார். கால்கள் வீங்கியிருந்தன.

“என்ன?”

புருவம் உயர்த்தி மட்டும் கேட்டார்.

“கணேசன் சார்.”

“தெரியுது. என்ன பண்ற?”

“டெய்லரா இருக்கேன். எப்படி இருக்



“கணிதத்தில் பையனோட மார்க் எவ்வளவுன்னு கேட்டா பணவீக்கம் மாதிரின்னு சொன்னா என்ன அர்த்தம்?”

“இது கூடவா புரியல்ல! 'சிங்கிள் டிஜிட்'டுக்கு வந்துடுத்துன்னு சொல்ல வந்தேன்.”

— டி.என். மகாலிங்கம்

ஸ்ரீ காஞ்சி பூஜ்ய ஸ்ரீ பரமாச்சார்யாள் அவர்கள் அத்வைத வித்யாசார்யாள் மஹாராஜா ஸாஹேப் பகவான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் அவர்களின் வம்சத்தில் உதித்தவர்களே.

மஹான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதரவர்களால், 1542-ல் ஸ்தாபிக்கப்பட்டு, தொடர்ந்து நடந்து வரும் வேத பாடசாலையை ஸமிதியானது தாய் போல் இயங்கிக் காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் 130 மாணாக்கர்கள் வேதாத்யாயனம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஓர் நாள் உணவளிக்க, உணவு வகையினை அனுசரித்து சுமார், முறையே ரூ. 500/-, ரூ. 750/- அல்லது ரூ. 1000/- ஆகிறது. இந்தத் தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ. 5000/-, ரூ. 7500/- அல்லது ரூ. 10,000/- மூலதனம் ஏற்படுத்தியோ, அவ்வப்போது தொகை அனுப்பியோ, ஒரு குறிப்பிட்ட தினத்தில் உணவளிக்கும் கைங்கர்யத்தில் பங்கு கொள்ளக் கோருகிறோம். நன்கொடை அனுப்ப வேண்டிய பெயரும் முகவரியும் :

அத்வைத வித்யாசார்யா மஹாராஜா ஸாஹேப்
ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி,
42, காமாக்ஷி ஜோசியர் தெரு, கும்பகோணம் - 612 001.

செக் (or) டிராப்ட் முதலியவைகளை A.V.M.S.G.D.P.S. ஸமிதி என்ற பெயருக்கு அனுப்பலாம்.

······இந்த நன்கொடைக்கு **80-G** விதியின்படி வருமான வரிவிலக்கு உண்டு······

குறிப்பு : எம்மிடம் வேத, வைதிக, ப்ரயோக நூல்கள் யாவும் கிடைக்கும். **Rs.** 3/- க்கு தபால் தலை அனுப்பி எமது **Catalogue** ஐ பெற்றுக் கொள்ளலாம்.



"எதுக்காக நம்ப ஊர் எம்.பி. கத்தி, அரிவாளோட பார்லிமெண்டுக்குள்ள நுழைஞ்சாராம்?"

"அவர் வெட்டுத்தீர்மானம்கறதை தப்பா அர்த்தம் பண்ணிக்கிட்டாராம்!"

- என்.கே. பாலசுப்பிரமணியன்

இங்க..." லேசாய் ஒரு 'உச்' சத்தம் வெளிப்பட்டது.

"உங்கள பாத்து நெறையப் பேசணும்னு நெனச்சேன் சார். எப்போ வருவீங்கன்னு எதிர்பார்த்துக்கிட்டு இருந்தேன்."

தலை குனிந்திருந்தார்.

"எப்படி சார் இருக்கீங்க..."

"கணேசனா..." சந்திரா அக்கா வாசல் பக்கம் பார்த்தாள்.

"ஆமாக்கா! உன்னே பார்த்துப் புன்னகைத்தான். நிலையோரம், அம்மு தன்னையே பார்ப்பது போல் அவனுக்குத் தோன்றியது.

"சாப்பிட்டியா தம்பி..."

"போயிட்டிருக்கேன் அக்கா. மாஸ்டர் வந்திருக்கார்ன்னு ராஜு மாமா சொன்னாரு. பாக்கலாம்னு வந்தேன்."

"மோர் குடிக்கிறியா?"

அம்மு சட்டென உள்ளே போனாள். கணேசன் மாஸ்டரைப் பார்த்தான்.

"நீங்க இல்லாம ரொம்ப கஷ்டப்பட்டுட்டேன் சார். என்ன பண்றதுன்னு தெரியல. பத்தாவது முடிச்சவுடனே மேல படிக்கணும்னு ஆசை. என்ன படிக்கறதுன்னு தெரியல. நீங்க இருந்திருந்தா சொல்லியிருப்பீங்க. கடைசியில ஒண்ணும் செய்யாம வீட்டுல இருந்தேன். அப்பனும், ஆத்தாளும் கத்தினாங்க. கடைசியில டெய்லர் கடையில சேர்ந்தேன் சார். எங்க சார் போயிட்டீங்க?"

அம்மு மோர் கொண்டு வந்தாள். கொடுக்கும் போது விரல்கள் பட்டதாய்த் தோன்றியது. சின்னதாய் ஒரு வெப்பம். நிலையருகே போய் நின்று கொண்டான்.

"நெறைய பேசினாங்க, உங்கள பத்தி. என்ன என்னவோ. ஒரே வெறுப்பாயிடிச்சி. அக்காவா இருந்ததனால தாங்கினாங்க. வேற யாராவதுன்னா, என்னென்னவோ ஆயிருக்கும்."

சொம்பை கீழே வைக்கப் போனபோது, கையில் வாங்கிக் கொண்டாள் அம்மு. குனிந்ததில் லேசாய் சரவாசனை.

"என்னென்னமோ ஆயிருக்கு சார். உங்க கிட்ட நெறைய பேசணும். எட்டு வருஷமா சொல்ல ஆளில்லாம இருக்கேன், சார்."

அம்மு புன்னகைப்பது போலிருந்தது.

"சாப்டேன் தம்பி..." சந்திரா அக்கா குரல் உள்ளேயிருந்து வந்தது.

"இல்லக்கா, அம்மா வெச்சிருக்கும்..."

"ஏன், ஒருநா சாப்டக் கூடாதா..."

"இன்னொருநாள் வரேன்க்கா. மாஸ்டருக்குப் போடுங்க."

எழுந்து கொண்டான். அண்ணன் காத்திருப்பார். நேரங்கழித்துப் போனால் கோபப்படுவார்.

"சார், அப்ப நானு..."

அவர் மீண்டும் கால்களைக் கீழே இறக்கினார். எழுந்து கொண்டார். கணேசனை அருகே கூப்பிட்டார். தோளில் கை போட்டார். ஆச்சரியமாய்ப் பார்த்தான்.

"அப்படி போலாம்..."

ஒரு பக்கம் சந்தோஷமாய் இருந்தது. தோளில் கை போடும் அளவுக்கு வளர்ந்திருப்பது பெருமையாய் இருந்தது.

திரும்பிப் பார்த்தான். அம்மு நின்றிருந்தாள்.

"கடை எங்கருக்கு?"

"மொத தெருவுல. பழைய ராஜமாணிக்கம் வீட்டு வாசல். இப்ப ரூமாக்கிட்டாங்க."

"உனக்கு என்ன வயசாவுது?"

"இருபது, இருபத்தொண்ணு..."

"சொல்லவேணாம்னு நெனச்சேன். இப்போ நீ பெரியவன். வந்ததிலேர்ந்து, 'உங்க கிட்டே பேசணும், கேக்கணும்னு' சொல்றியே, உனக்கு சுயமா யோசனையே இல்லையா?"

என்ன சொல்வது என்று தெரியாமல் பார்த்தான் கணேசன்.

"இது ரொம்ப தப்பு. நான் ரொம்ப சாதாரணமானவன். நிறைய தப்பு பண்ணியிருக்கேன். நீயா யோசிக்கக் கத்துக்க. முடிவு பண்ணக் கத்துக்க. நான் தேவையில்லை. இதுக்கு மேல தொந்தரவு பண்ணாத. வீட்டுக்கும் வரவேண்டாம். எனக்கும் தோளுக்கு மேல வளர்ந்த பொண்ணு ஒண்ணு இருக்கு. புரிஞ்சுதா? இனிமேலாவது நான் நல்ல அப்பனா இருக்கணும்னு பாக்கறேன்."

தோளிலிருந்து கையெடுத்து விட்டார். தனியாக விடப்பட்டது போல் தோன்றியது கணேசனுக்கு.

மாஸ்டர் மாறவில்லை. கண்டிப்பு, அதே நேரத்தில் கருணை. என்னவோ புரிந்தது போல் இருந்தது அவனுக்கு.


HOW ABOUT A TRIP TO
SPACE?
JULY '95 ISSUE!
BUY YOUR CHILD A COPY TODAY!
GOKULAM
The monthly magazine for children
All about the mysteries of space!
96 pages for just Rs. 5!
Write to GOKULAM,
47 Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Madras - 600 097
for a subscription.



27. புதையல்

கிளைகள் நெருங்கிப் படர்ந்து நிழலால் இருண்டிருந்த மாந்தோப்புக்குள் பொன்னன் முன்னால் செல்ல, விக்கிரமன் தொடர்ந்து சென்றான். போகும்போதே தாழ்ந்திருந்த மரக்கிளைகளைப் பொன்னன் அண்ணாந்து பார்த்துக் கொண்டு போனான். ஒரு மரத்தினடியில் வந்ததும் நின்று மேலே உற்றுப் பார்த்தான். அந்த அடிக்கிளையின் பட்டையில் சிறு கத்தியினால் ஓர் உருவம் செதுக்கப்பட்டிருந்தது. நன்றாக உற்றுப் பார்த்தால், அது ஒரு புலியின் உருவம் என்று தெரிந்து கொள்ளலாம்.

பொன்னன் அதைப் பார்த்து விட்டு நின்றான். அந்தப் புலி உருவத்துக்கடியில் தரையில் கிடந்த மாஞ் சருகுகளையெல்லாம் ஒதுக்கினான். பிறகு அங்கே தரையைத் தோண்டத் தொடங்கினான்.

விக்கிரமன் பரபரப்புடன் தானும் மண்வெட்டியை எடுத்த போது பொன்னன் கைமறித்து, "மகாராஜா! தங்களுக்கு உடம்பு இன்னும் சரியாகவில்லை. இன்னும் எவ்வளவோ வேலைகள் செய்வதற்கு இருக்கின்றன. சற்று நேரம் மரத்தடியில் சும்மா உட்கார்ந்திருக்க வேண்டும்" என்றான்.

அவ்விதமே விக்கிரமன் மரத்தடிக்குச் சென்று வேரின் மேல் உட்கார்ந்தான். அவனுடைய உள்ளத்தில் எத்தனையோ எண்ணங்கள் அலை அலையாக எழுந்தன. குழந்தைப் பருவத்தில் இந்த வஸந்தத் தீவில் எவ்வளவு ஆனந்தமாக நாட்கள் கழிந்தன! இதே இடத்தில் ஒரு அன்னியப் பெண்ணின் தயவில் தங்க வேண்டிய காலமும் வந்ததல்லவா? - நல்லவேளை, இன்றோடு அந்த அவமானம் தீர்ந்து விடும். பெட்டியை எடுத்துக் கொண்டு உடனே கிளம்பி விட வேண்டியதுதான்... இனிமேல் ஒரு விநாடி நேரமும் இங்கே தங்கக் கூடாது... செண்பகத் தீவிலிருந்த போது இந்தத் தாய்நாட்டைப் பார்க்க வேணுமென்று தனக்கு ஏற்பட்டிருந்த ஆவலையும், இப்போது இங்கிருந்து கிளம்பினால் போதுமென்று இருப்பதையும் நினைத்த போது விக்கிரமனுக்குச் சிரிப்பு வந்தது. "இங்கே எதற்காக வந்தோம்? என்ன பைத்தியக்காரத்தனம்?" என்று தோன்றியது. பார்த்திப மகாராஜா சுதந்திரமாக ஆண்ட அந்தச் சோழ நாடு அல்ல இது. பல்லவ சக்கரவர்த்தியின் ஆதிக்கத்தில் மிதிபட்டுக் கிடக்கும் நாடு. தேசத் துரோகியும் குலத்துரோகியும் கோழையுமான மாரப்ப பூபதியைச் சேனாதிபதியாகப் பெற்றிருக்கும் நாடு. இப்படிப்பட்ட நாட்டின் மண்ணை உதறி விட்டு எவ்வளவு சீக்கிரத்தில் போகிறோமோ, அவ்வளவுக்கு நல்லது!

"நாடு என்ன செய்யும்? - மனுஷ்யர்கள் கேடுகெட்டுப் போயிருந்தால்?" என்ற எண்ணம் தோன்றியதும் விக்கிரமன் பெருமூச்சு விட்டான். பார்த்திப மகாராஜா போருக்குக் கிளம்புவதற்கு முன் தன்னைச் சித்திர மண்டபத்துக்குள் அழைத்துக் கொண்டு போய் அவருடைய கனவுச் சித்திரங்களையெல்லாம் காட்டியதை நினைத்துக் கொண்டான். அந்த கனவு நிறைவேறப் போகிறதா? இல்லை கனவாகத்தான் போய் விடுமா...? இங்கே எல்லோரும் பல்லவ சக்கரவர்த்தியின் புகழிலேயே மூழ்கிக் கிடக்கிறார்கள். நேற்றுத்தான் காஞ்சியிலிருந்து ஒரு ஆள் வந்தான். சீன தேசத்திலிருந்து வந்த ஒரு தூதனுக்குக் காஞ்சியில் நடந்த வரவேற்பு வைபவங்களைப் பற்றியெல்லாம் அவன் வர்ணித்தான். விக்கிரமன் கேட்டுக் கொண்டிருந்தான். கேட்கக் கேட்க அவனுக்கு ஆத்திரம்

பொங்கிக் கொண்டு வந்தது. அந்தச் சீன தேசத்துத் தூதன் தான் போகுமிடங்களிலெல்லாம் பல்லவ சக்கரவர்த்தியின் அருமை பெருமைகளைப் பற்றிச் சொல்லிக் கொண்டு போவான். சீன தேசத்திலும் போய்ச் சொல்வான். சோழ நாட்டைப் பற்றியோ, சோழ நாட்டின் சுதந்திரத்துக்காக வீரப்போர் புரிந்து மரணமடைந்த பார்த்திப மகாராஜாவின் பெயரையோ யார் கேட்கப் போகிறார்கள்?....

“மகாராஜா!” என்ற குரலைக் கேட்டு விக்கிரமன் திடுக்கிட்டு எழுந்தான். குழியில் நின்ற பொன்னன் குனிந்தான். அவன் மறுபடி நிமிர்ந்த போது அவனுடைய கைகளில் கெட்டியான தோலினால் சுற்றப்பட்ட பெட்டி இருந்தது. பொன்னன் அந்தத் தோலை எடுத்தெறிந்தான். பழைய ஆயுதப் பெட்டி - சித்திர வேலைப்பாடமைந்த பெட்டி காணப்பட்டது.

விக்கிரமன் விரைந்து சென்று கையை நீட்டி அந்தப் பெட்டியை ஆவலுடன் வாங்கித் திறந்தான். உள்ளே சிறிதும் மலினமடையாமலிருந்த ஓலைச் சுவடியைக் கண்ணில் ஒற்றிக் கொண்டு பெட்டிக்குள் வைத்தான். பிறகு பட்டாக் கத்தியைக் கையில் எடுத்துக் கொண்டான். பொன்னனைப் பார்த்துச் சொன்னான் :

“பொன்னா! சற்று முன்னால் என் மனத்தில் தகாத கோழை எண்ணங்கள் எல்லாம் உண்டாயின. இந்தச் சோழ நாட்டின் மேலேயே வெறுப்பு உண்டாயிற்று. “இந்த நாட்டுக்கு விமோசனம் ஏது? எப்போதும் பல்லவர்களின் கீழ் அடிமைப்பட்டிருக்க வேண்டியதுதான்!” என்று எண்ணினேன். எதற்காக இவ்வளவு அபாயங்களுக்குத் துணிந்து, இவ்வளவு கஷ்டப்பட்டு இங்கு வந்தோம் என்று நினைத்தேன் - அந்த மயக்கம், மாயை எல்லாம் இந்தக் கத்தியைக் கண்டவுடன் மாயமாய்ப் போய் விட்டது. பொன்னா! இந்தக் கத்தி ஒரு காலத்தில் உலகை ஆண்டது. கரிகாலச் சோழரும் நெடுமுடிக்கிள்ளியும் இந்தக் கத்தியினால் கடல்களுக்கப்பாலுள்ள தேசங்களையெல்லாம் வென்று, சோழ மகாராஜ்யத்தை ஸ்தாபித்தார்கள். கரிகாலச் சக்கரவர்த்தியின் காலத்தில் செண்பகத் தீவில் குடியேறிய தமிழர்களின் சந்ததிகள்தான் அந்தத் தீவில் இன்று வசிக்கிறார்கள். அத்தகைய மகாவீர புருஷர்களுடைய சந்ததியில் பிறந்தவன் நான். அவர்கள் கையில் பிடித்த வீரவாள் இது. அவர்களால் முடிந்த காரியம் என்னால் ஏன் முடியாது? பொன்னா! இந்தக் கத்தியுடனே என் தந்தை எனக்கு அளித்த இந்தத் தமிழ்மறை என்ன சொல்கிறது? ‘முயற்சி திருவினையாக்கும்!’ ஆகா? அந்தப் புனித வாக்கைக் கூட அல்லவா மறந்து விட்டேன்! இந்தச் சோழ நாட்டுக்கு இப்போது என்னவோ நேர்ந்து விட்டது. இங்கே அடிக்கும் காற்றே மனச் சோர்வு தருகிறது. இங்கே இனி ஒரு கணங்கூட நிற்க மாட்டேன். வா, போகலாம்!”

இவ்விதம் விக்கிரமன் பேசிக் கொண்டிருந்த போது, பொன்னன் அவனுடைய முகத்தைப் பார்த்தவண்ணமே பிரமித்து நின்றான். அப்போது விக்கிரமனுடைய முகத்தில் சுடர்விட்டுப் பிரகாசித்த வீரதேஜஸ் அவ்விதம் அவனைப் பிரமிக்கச் செய்தது.

பிறகு சட்டென்று அந்தப் பிரமையிலிருந்து நீங்கினவனாய், மளமளவென்று மண்ணைத் தள்ளிக் குழியை மூடினான். அந்த இடத்தின் மேல் மாஞ் சருகுகளைப் பரப்பிய பிறகு இருவரும் காவேரியை நோக்கி விரைந்து சென்றார்கள்.

நதிக்கரையையடைந்து படகு கட்டியிருந்த இடத்தைப் பார்த்ததும் அவர்களுக்குப் பகீர் என்றது.

“இதென்ன, பொன்னா! படகு எங்கே?” என்றான் விக்கிரமன்.

“ஒருவேளை இடம் மாறி வந்து விட்டோமோ?” என்று பொன்னன் திகைப்புடன் கூறி அங்குமிங்கும் நோக்கினான். ஆனால், வேரில் கட்டிய கயிறு இருப்பதைப் பார்த்ததும் சந்தேகத்துக்கு இடமில்லாமல் போயிற்று. கயிற்றின் முடிச்சு எப்படியோ அவிழ்ந்து படகு ஆற்றோடு போயிருக்க வேண்டுமென்றுதான் தீர்மானிக்க வேண்டியிருந்தது.

“பொன்னா! என்ன யோசிக்கிறாய்? நீந்திப் போய் விடலாமா?” என்றான் விக்கிரமன்.

“கொஞ்சம் பொறுங்கள், மகாராஜா! கரையோடு ஓடிப் போய் எங்கேயாவது படகு தங்கியிருக்கிறதா என்று இதோ பார்த்து விட்டு வருகிறேன்” என்று சொல்லி விட்டுப் பொன்னன் நதிக்கரையோடு ஓடினான்.

28. குந்தவியின் நிபந்தனை

பொன்னன் மறைந்த கணம் இலைச் சருகுகள் அலையும் சப்தம் கேட்டு விக்கிரமன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். குந்தவி மரங்களின் மறைவிலிருந்து வெளியே வந்து கொண்டிருந்தாள்.

அமரர் கல்கி

இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு சற்று நேரம் மௌனமாய் நின்றார்கள்.

"சோழ நாட்டாரின் யோக்கியதை நன்றாய்த் தெரிந்து போய் விட்டது. இப்படித்தான் சொல்லிக் கொள்ளாமல் கூட ஓடிப் போகப் பார்ப்பார்களா?" என்றாள் குந்தவி.

விக்கிரமன் மறுமொழி சொல்லாமல் சும்மா இருந்தான்.

''வள்ளுவர் பெருமான் 'முயற்சி திருவினையாக்கும்' என்று மட்டுந்தானா சொல்லியிருக்கிறார்? 'நன்றி மறப்பது நன்றன்று' என்றும் சொல்லியிருப்பதாக எனக்குக் கேள்வியாயிற்றே?'' என்று குந்தவி சொன்ன போது, விக்கிரமனுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

''உனக்கு எப்படித் தெரியும்? ஒரு வேளை..." என்று மேலே பேசத் திணறினான்.

"ஆமாம்; நீங்கள் குழிதோண்டிப் புதையல் எடுத்ததைப் பார்த்துக் கொண்டிருந்தேன்; எல்லாம் கேட்டுக் கொண்டுமிருந்தேன்."

"உண்மையாகவா?''


"ஆமாம்; உங்கள் பொய் வேஷத்தையும் தெரிந்து கொண்டேன்."

விக்கிரமன் சற்று யோசித்து, ''அப்படியானால் நான் சொல்லிக் கொள்ளாமல் ஓடிப் போக நினைத்ததில் என்ன ஆச்சரியம்? தேசப் பிரஷ்டன் - மரண தண்டனைக்குத் துணிந்து தாய்நாட்டுக்கு வந்தவன் - சொல்லாமல் திரும்பி ஓடப் பார்ப்பது இயல்பல்லவா?'' என்றான்.

"உயிர் இழப்பதற்குப் பயந்துதானே?"

"ஆமாம்; இந்த உயிர் இன்னும் கொஞ்ச காலத்துக்கு எனக்குத் தேவையாயிருக்கிறது. என் தந்தைக்கு நான் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கும், இந்தத் தாய்த் திருநாட்டுக்கு நான் செய்ய வேண்டிய கடமையைச் செய்வதற்கும் இந்த உயிர் வேண்டியிருக்கிறது...."

''ஆனால், உங்களுடைய உயிர் இப்போது உங்களுடையதல்லவே? மகேந்திர மண்டபத்தில் அந்தப் பழைய உயிர் போய் விட்டது. இப்போது இருப்பது நான்



"... இந்த உயிர்
யதுதான். ம
மண்டபத்தில்
பார்த்துக் காப்பா
மட்டும் அல்
வருஷத்துக்
காஞ்சியிலும், மாம
உன்னைப் பார்த்
உயிரை உன்னு
கொண்ட"

கொடுத்த உயிர் அல்லவா? இது எனக்கல்லவா சொந்தம்?" என்றாள் குந்தவி.

விக்கிரமன் மீண்டும் யோசனையில் ஆழ்ந்தான். பிறகு குந்தவியை உருக்கத்துடன் நோக்கி, "நீ சொல்லியது ஒருவிதத்தில் அல்ல; பலவிதத்திலும் உண்மை. இந்த உயிர் உன்னுடையதுதான். மகேந்திர மண்டபத்தில் நீ என்னைப் பார்த்துக் காப்பாற்றியதனால் மட்டும் அல்ல; மூன்று வருஷத்துக்கு முன்பு காஞ்சியிலும், மாமல்லபுரத்திலும் உன்னைப் பார்த்தபோதே என் உயிரை உன்னுடைய தாக்கிக் கொண்டாய்..." என்றான்.

"ஆ! இது உண்மையா?" என்றாள் குந்தவி.

"ஆமாம். ஆகையினால் உன்னுடைய உயிரையேதான் நீ காப்பாற்றிக் கொண்டாய்...."

"இது உண்மையானால், என்னிடம் சொல்லிக் கொள்ளாமல் ஓடப் பார்த்தீர்களே, அது எப்படி? என்ன நியாயத்தில் சேர்ந்தது?" என்று குந்தவி கடுமையான குரலில் கேட்டாள்.

"அது தவறுதான். ஆனால், காரணம் உனக்குத் தெரியாதா? உன்னிடம் சொல்லிக் கொண்டால் பிரிய மனம் வராது என்ற பயந்தான் காரணம். நீ விடைகொடுக்காவிட்டால் போக முடியாதே என்ற எண்ணந்தான் காரணம்...".

"என்னைப் பற்றி அவ்வளவு கேவலமாக ஏன் எண்ணினீர்கள்? நீங்கள் போவதை நான் ஏன் தடுக்க வேண்டும்? உங்களுடைய கடமையைச் செய்வதற்கு நான் ஏன் குறுக்கே நிற்க வேண்டும்?"

"நான் எண்ணியது பிசகு என்று இப்போது தெரிகிறது. உன்னிடம் நான் எல்லாவற்றையும் முதலிலேயே சொல்லியிருக்க வேண்டும். சொல்லி உன்னுடைய உதவியைக் கோரியிருக்க வேண்டும். மறைக்க முயன்றது பிசகுதான்."

"போனது போகட்டும்; இனிமேல் நடக்க வேண்டியதைப் பேசுவோம். உங்கள் படகோட்டி திரும்பி வரும் வரையில் இங்கே உட்காரலாம்" என்றாள் குந்தவி.



ன்னுடை
ந்திர
ன்னைப்
யதனால்
மூன்று
முன்பு
லபுரத்திலும்
பாதே என்
யதூக்கிக்
...

படகோட்டி என்றதும் விக்கிரமன் மனத்தில் ஒரு சந்தேகம் உதித்தது. குந்தவியைச் சிறிது வியப்புடன் நோக்கினான்.

"இங்கே கட்டியிருந்த படகு எங்கேயென்று தெரியுமா?" என்று கேட்டான்.

"தெரியும்; ஆற்றோடு போய் விட்டது. படகோட்டிக்கு வீண் அலைச்சல்தான்."

"எப்படிப் போயிற்று? ஒருவேளை நீ..."

"ஆம்; நான்தான் படகின் முடிச்சை அவிழ்த்து விட்டேன். என்னிடம் சொல்லிக் கொள்ளாமல் போக நினைத்ததற்குத் தண்டனை!"

விக்கிரமன் சற்று மௌனமாயிருந்து விட்டு, "அதுதான் முன்னமே சொன்னேனே. உன்னிடம் சொல்லிக் கொண்டால், பிரிந்து போக மனம் வருமோ, என்னவோ என்று பயந்தேன்" என்றான்.

"அம்மாதிரியெல்லாம் பயந்து கொண்டிருந்தால் உங்கள் மூதாதையான கரிகால சோழர் தீவாந்திரங்களையெல்லாம் வென்றிருக்க முடியுமா?" என்று குந்தவி கேட்டாள்.

"முடியாது. ஆகையால்தான் இப்போது தைரியமாக உன்னிடம் விடை கேட்கிறேன். உதவியும் கேட்கிறேன். இந்த நதியைத் தாண்டுவதற்குப் படகும், அப்பால் மாமல்லபுரம் போவதற்குக் குதிரையும் கொடுத்து உதவ வேண்டும்."

"கொடுக்கிறேன். ஒரு நிபந்தனை இருக்கிறது."

"நிபந்தனையா?"

"ஆமாம் கண்டிப்பான நிபந்தனை. போன தடவையைப் போல் என்னைக் கரையில் நிறுத்தி விட்டு நீங்கள் கப்பலில் போய் விடக் கூடாது. நீங்கள் போகும் கப்பலில் என்னையும் அழைத்துப் போக வேண்டும்."

விக்கிரமனுக்கு அளவில்லாத திகைப்பு உண்டாயிற்று. குந்தவியின் மெல்லிய கரத்தைப் பிடித்துக் கொண்டு தழுதழுத்த குரலில், "தேவி! என்ன சொன்னாய்? என் காதில் விழுந்தது உண்மையா? அவ்வளவு பெரிய அதிர்ஷ்டத்தைப் பெறுவதற்கு நான் என்ன செய்து விட்டேன்! உலகமெல்லாம் புகழ் பரவிய மகாபல்லவ சக்கரவர்த்தியின் ஏக புதல்வியாகிய நீ இந்த தேசபிரஷ்டனுடன் கூடக் கடல் கடந்து வருவாயா!" என்றான்.

குந்தவி காவேரியின் பிரவாகத்தை நோக்கியவண்ணம், "உங்களுக்கென்ன இவ்வளவு சந்தேகம், பெண் குலத்தைப் பற்றியே நீங்கள் இழிவாக நினைக்கிறீர்கள்; அதனாலேதான் சந்தேகப்படுகிறீர்கள்" என்றாள்.

"இல்லவே இல்லை. அருள்மொழியைத் தாயாகப் பெற்ற நான் பெண் குலத்தைப் பற்றி ஒருநாளும் இழிவாக நினைக்க மாட்டேன். ஆனால் நீ என்னுடன் வருவது எப்படிச் சாத்தியம்? உன் தந்தை... சக்கரவர்த்தி... சம்மதிப்பாரா?"

"என் தந்தை நான் கேட்டது எதையும் இதுவரை மறுத்ததில்லை, இப்போதும் மறுக்க மாட்டார்..."

அப்போது, "மகாராஜா!" என்ற குரலைக் கேட்டு இருவரும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார்கள்.

அந்தக் குரல் பொன்னனுடையதுதான். அவர்கள் உலகை மறந்து பேசிக்

அருள்வாக்கு

புராணம் என்பது வேதத்துக்கு பூதக் கண்ணாடி. சின்னஞ்சிறியதாக இருப்பதை பூதக்கண்ணாடி நன்றாகப் பெரிசு பண்ணிக் காட்டுகிறதல்லவா? இம்மாதிரி வேதத்தில் சுருக்கமாக, சின்னச் சின்னதாகப் போட்டிருக்கிற தர்ம விதிகளை கதைகள் மூலம் பெரிசு பண்ணிக் காட்டுவதுதான் புராணம்.

ஒன்றைச் சுருக்கமாகச் சொன்னால் அது மனதில் ஆழப் பதியாமல் போய் விடலாம். அதையே சுவாரஸ்யமான கதையாகச் சொன்னால் நன்றாக மனதில் பதியும்.

"ஸத்யம் வத" (உண்மையே பேசு)



ஆசிரியர் 1 : எதை வச்சு இவன் பிற்காலத்தில அரசியல்வாதியா வருவான்னு சொல்றீங்க?

ஆசிரியர் 2 : 'காங்கிரஸ் மாதிரி உடைஞ்சுக்கிட்டே வந்து கடைசியிலே இனிமே உடைக்கவே முடியாதபடி மீதமாயிருக்கிறதுக்குப் பேர்தான் மூலக்கூறு' அப்படீன்னு மூலக்கூறுக்கு விளக்கம் எழுதியிருக்கிறான் சார்!

- நாகலை இளவல்

என்று மட்டும் வேதம் சொல்கிறது. அப்படிப் பேசுவதால் எத்தனை பெருமை ஏற்படுகிறது என்பதை ஹரிச்சந்திரன் கதை பல அத்யாயங்களில் விஸ்தாரமாகச் சொல்கிறது. 'தர்மம் சர' (அறத்தைப் பின்பற்று) என்று இரு வார்த்தையில் வேதம் சொன்னதை நீள நெடுக மஹா பாரதத்தில் தர்ம புத்திரரின் கதையாகச் சொல்லியிருக்கிறது. "மாத்ரு தேவோ பவ", "பித்ரு தேவோ பவ" (அன்னை தந்தையை தெய்வமாகக் கொள்) என்ற வேத வாக்குக்கு, ஸ்ரீராம சரித்ரம் பூதக் கண்ணாடியாய் இருக்கிறது.



அடக்கம், பொறுமை, தயை, கற்பு முதலான அநேக தர்மங்களை, வேதத்தில் கட்டளையிட்டுள்ளவற்றை புராண புருஷர்களும் புண்ய ஸ்திரீகளும் தங்களுடைய சரித்திரத்தின் மூலம் நன்றாகப் பிரகாசிக்கும்படி செய்திருக்கிறார்கள். அவற்றைப் படிப்பதாலும், கேட்பதாலும் இந்த தர்மங்களில் நமக்கு ஆழ்ந்த ஈடுபாடு உண்டாகிறது.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச் சார்ய சுவாமிகள்.

கொண்டிருந்த சமயம், பொன்னன் மெதுவாகப் பின்புறமாக வந்து அவர்கள் அருகில் நின்று கொண்டிருந்தான். கடைசியாக, அவர்கள் பேசிய வார்த்தைகளும் அவன் காதில் விழுந்தன.

விக்கிரமன் பொன்னனைப் பார்த்து, "எப்பொழுது வந்தாய், பொன்னா! படகு அகப்படவில்லையே? இந்தத் தேவிதான் படகை அவிழ்த்து விட்டு விட்டாராம். நமக்கு வேறு படகு தருவதாகச் சொல்கிறார்" என்றான்.

"காதில் விழுந்தது, மகாராஜா! ஆனால், இவ்வளவு தொல்லையெல்லாம் என்னத்திற்கு என்றுதான் தெரியவில்லை. தேவி சொல்வதை ஒருநாளும் சக்கரவர்த்தி தட்ட மாட்டார். தங்களைப் பற்றி ஒரு வார்த்தை சொல்லி...."

குந்தவி வீராவேசத்துடன் எழுந்து பொன்னனுக்கு எதிராக நின்றாள். "என்ன சொன்னாய், படகோட்டி! உங்கள் மகாராஜாவை மன்னித்துக் காப்பாற்றும்படி சக்கரவர்த்தியிடம் நான் சொல்ல வேண்டுமா? ஒரு தடவை அந்தத் தவறு நான் செய்தேன். இனிமேல் செய்ய மாட்டேன். இவர் தமது கையில் பிடித்த கத்தியின் வலிமையினால் ஒரு சாண் பூமியை வென்று ராஜாவானால் அந்தச் சாண் பூமிக்கு நான் ராணியாயிருப்பேன். இவர் உன்னைப் போல படகோட்டிப் பிழைத்து ஒரு குடிசையில் என்னை வைத்தால், உன் மனைவி வள்ளியைப் போல் நானும் அந்தக் குடிசையில் ராணியாயிருப்பேன். இவரை மன்னிக்கும்படியோ, இவருக்குச் சோழ ராஜ்யத்தைக் கொடுக்கும்படியோ சக்கரவர்த்தியை ஒருநாளும் கேட்க மாட்டேன். எனக்காக நான் என் தந்தையிடம் பிச்சை கேட்பேன். ஆனால் இவருக்காக எதுவும் கேட்டு இவருடைய வீரத்துக்கு மாசு உண்டாக்க மாட்டேன்!" என்றாள்.

பொன்னன், "தேவி..." என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தான். அவனைப் பேச விடாமல், குந்தவி மீண்டும் "ஆம், இன்றைய தினம் இவருடைய வேஷம் வெளிப்பட்டு, இவருக்கு மரண தண்டனை அளிக்கப்பட்டாலும் நான் உயிர்ப்பிச்சை கேட்க மாட்டேன். தண்டனையை நிறைவேற்றுவதற்கு முன்னால் என்னை இவருக்கு மணம் புரிவிக்க வேண்டுமென்று மட்டும் வரம் கேட்பேன்!" என்றாள்.

"தேவி; தாங்கள் அவ்விதம் வரம் கேட்க வேண்டி வருமென்றே தோன்றுகிறது. அதோ பாருங்கள்! படகுகளில் வீரர்கள் வருவதை" என்றான் பொன்னன்.


விக்கிரமனும் குந்தவியும் துணுக்கமடைந்தவர்களாகப் பொன்னன் கை காட்டிய திசையை நோக்கினார்கள். உறையூர்ப் பக்கத்திலிருந்து நாலு படகுகள் வந்து கொண்டிருந்தன. வஸந்தத் தீவில் அடர்த்தியாக வளர்ந்திருந்த மரங்கள் இத்தனை நேரமும் அப் படகுகளை மறைத்துக் கொண்டிருந்தன. இப்போதுதான் அவை ஒரு முடுக்கத்தில் திரும்பி அவர்களுடைய கண்ணுக்குத் தெரிந்தன. படகுகளில் பொன்னன் சொன்னபடியே வேல்தாங்கிய வீரர்கள் கும்பலாயிருந்தார்கள்.

படகுகள் கணத்துக்குக் கணம் கரையை நெருங்கி வந்து கொண்டிருந்தன.

(தொடரும்)

போலீஸாருக்கு

●● காசர்கோடில் உள்ள பார்வை இழந்தோர் பள்ளியில் ஆடிட் பார்க்க வந்தவர்கள் அதிர்ந்து போனார்கள். ஒரு மாதம் 21 டன் விறகும் மற்றொரு மாதம் 15 டன் விறகும் வாங்கிய தாகக் கணக்கு எழுதப்பட்டிருந்தது! சமையலுக்கான பலசரக்கு சாமான்களுக்கோ வெறும் நாலாயிரம் ரூபாய்தான் செலவாகியிருந்தது. விறகு விலையைக் கணக்கிட்டால் நாலாயிரம் ரூபாய் பொருளைச் சமைக்க இருபத்தையாயிரம் ரூபாய்க்கு எரிபொருள் செலவாகியிருக்கிறது! பொய்யைச் சொன்னாலும் பொருந்தச் சொல்லத் தெரியாத செக்ஷன் ஆபீசர் 'சஸ்பெண்ட்' ஆகியிருக்கிறார்!



●● இந்த ஆண்டு மலையாள எஸ்.எஸ்.எல்.சி. பாட நூலிலிருந்து மகாத்மா காந்தியின் சிந்தனையையொட்டி அமைந்த ஒரு பாடத்தை நீக்கிவிட்டார்கள்! 'வேலையால் விளையும் கல்வி' என்ற அப்பாடத்தை 1989இல் பாடநூல் வல்லுனர்கள், புத்தகத்தில் சேர்த்தபோது அதனை மாற்றக் கூடாது என்று சொல்லியிருந்தனர். ஆனால், ஆண்டு தோறும் சில பழைய பாடங்களைக் கழித்துக் கட்டி புதியவை புகுத்தும் மரபினையொட்டி காந்திஜியின் கருத்துகள் அடிவாங்கி விட்டன!

●● திருவனந்தபுரம் கரமனையில், சைக்கிளில் பால் கேன் வைத்து விற்றுவந்த இருவர் மோதிக் கொள்ள, அவ்வளவு பாலும் வீதியில் ஓடியது. பொது மக்கள் 'உச்சு' கொட்டி அனுதாபப்பட்ட வேளையில் பால் கேனிலிருந்து இரண்டு சிறிய துணி மூட்டைகள் வெளியே விழுந்திருந்ததைப் பார்த்தார்கள். மூட்டைகளை அவிழ்த்தால்... உள்ளே கொத்தாக மண் புழுக்கள்! ஆத்திரமடைந்த பொது மக்கள், அவ்வழியே வந்த மற்றொரு சைக்கிள் பால்கேன்காரரையும் நிறுத்தி ஆராய்ந்தார்கள். அந்த கேனுக்குள்ளும் புழு மூட்டை! மண் புழுக்களின் உடம்பிலிருந்து வெளிப்படும் ஒருவிதமான கொழுப்பு போன்ற திராவகம் பாலை 'திக்'காகத் தோன்றச் செய்யும் என்பதற்காகவே வியாபாரிகள் இப்படிச் செய்கிறார்களாம். அன்று அகப்பட்ட சைக்கிள் பால்காரர்களுக்கெல்லாம் சரியான தர்ம அடி!

கேரள பல்கலைக் கழக ஜுவாலஜி டைரக்டர் டாக்டர் கோபாலகிருஷ்ணனிடம் கேட்டால், "மண்புழுவின் உடலிலிருந்து சுரக்கும் திராவகம் பாலை சில சமயம் கொழுப்புள்ளது போல் தோன்றச் செய்யக்கூடும்" என்கிறார். எனினும் அதில் நச்சுத் தன்மை கிடையாதாம். எப்படியோ, அரசு பால்வளப் பிரிவு தயாரிப்பான 'மில்மா' பாலுக்கு இப்போது கிராக்கி அதிமாகி விட்டது!

●● "இங்குள்ள லாரி டிரைவர்கள் வெளியூர்களுக்குப் போகும் போது, தகாத உறவு கொண்டு எயிட்ஸைப் பெற்றுக் கொண்டு வந்து, உள்ளூர்ப் பெண்களுக்குப் பரப்பி விடுகிறார்கள். இப்படி எயிட்ஸ் பாதித்த விபசாரத் தொழிலிலுள்ளோரை 'ரெய்டு' மூலம் கைது செய்யும் போலீஸார், அவர்களை உடனே கோர்ட்டில் நிறுத்தாமல், லாக்-அப்பிலேயே வைத்து, அவர்களிடம் தவறாக நடந்து கொள்கிறார்கள். இந்த மாதிரி போலீஸ்காரர்களால் மாநிலம் முழுதும் எயிட்ஸ் பரவுகிறது!"– இப்படிப் பேசியிருப்பவர் கேரள தலைமைச் செயலாளர் ராமச்சந்திரன்! அதுவும் ஒரு டாக்டர்கள் மாநாட்டில்.

கொதித்துப் போயிருக்கிறது கேரள போலீஸ். "விபசார கேஸில் கைதாகும் பெண்களை, அரெஸ்ட் பண்ணுவது பெண் போலீஸ் தான். அவர்கள் அடைக்கப்படுவதும் பெண் போலீஸ் நிலையங்களில்தான். அதோடு, இதுவரை எந்தவொரு போலீஸ்காரருக்கும் எயிட்ஸ் இருப்பதாக பரிசோதனைகள் ஏதும் கூறவில்லை. நிலைமை இப்படி இருக்க தலைமைச் செயலரின் பேச்சு ஆதாரமற்றது; அபாண்டமானது; காவல் துறைக்கே களங்கம் கற்பிப்பது"

என்று ஆழ்மறும் கேரள போலீஸார், தம் மேலதிகாரிகளிடம் முறையிட்டு, இதுபற்றி தலைமைச் செயலரின் விளக்கம் கோரியிருக்கிறார்கள்!

அதிரடி ஸ்டேட்மென்ட்கள் எங்கும் சகஜம்தான்; அதற்காக இப்படியா! என்டே குருவாயூரப்பா!

●● திருவனந்தபுரம் வானொலி நிலைய பொறியியல் பிரிவு ஆட்களுக்கும் ரெக்கார்டிங் நபர்களுக்கும் என்ன வென்று தெரியாத பனிப்போர். இதனால் சென்ற வாரம் திடீரென்று ஒருநாள் ரிக்கார்டிங் மற்றும் டப்பிங் பிரிவுகள் ஐந்துமணி நேரம் செயலற்றுப் போயின! முதலில், பவர்கட் என்று நினைத்த ரெக்கார்டிங் அதிகாரிகள், மற்ற பிரிவி லெல்லாம் கரென்ட் இருப்பதைப் பார்த்து, மலைத்து விட்டார்கள்!

இஞ்சினியரிங் ஆட்களின் கைங்கர்யம் தான்! விசாரித்ததில்... நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள் சிலர் ஒரு மலையாளப் பத்திரிகைக்குத் தந்த பேட்டியில், "நாங்கள் சொல்வதைக் கேட்பதுதான் இஞ்சினியர்களின் வேலை" என்ற ரீதியில் பேசியிருப்பதுதானாம்!

●● அரசுத் துறையில் ஒரு இன்டர்வியூ முடிந்து ரிசல்ட் வர எத்தனை நாட்கள் ஆகும்? அப்பாயின்மென்ட் ஆர்டர் வர? வேலையில் சேர? அட, குறைந்த பட்சம் ஆறு மாதம் ஆகும் என்று வைத்துக் கொள்வோம். கேரளாவில் இதையெல்லாம் மீறி, ஒரு உலக அதிசயம் நடந்திருக்கிறது!

மாநிலம் முழுதும் கூட்டுறவு



சாமியார்: "ஆச்சரியமாயிருக்கே! ஜெயில்ல இருக்கும் எனக்கு நூறு ரூபாய் மணியார்டர் வந்திருக்கா!"

வார்டன்: "உங்களால் நிறைய 'சாமியார் ஜோக்ஸ்' எழுதி பணம் சம்பாதிச்ச யாரோ ஒருத்தர் ஒரு நன்றிக் கடனுக்காக இதை அனுப்பி இருக்கார்.

– வி. ரெங்கநாதன்

தலைமைச் செயலாளர் கொடுத்த ஷாக்!

வங்கிகளுக்கு ஆள் எடுக்க, ஏப்ரல் 19 அன்று ஒரு இன்டர்வியூ நடத்தியது. ஏப்ரல் 20 காலை ரிஸல்ட்! 21 காலை தேர்வான 136 பேரும் அந்தந்த ஊர்களில் பணியில் சேர்ந்தாயிற்று! வெகு தூரத்திலுள்ளவர்கள் கூட, 'ஜாயினிங் டைம்' என்று ஏதும் பெறாமல் சொல்லி வைத்தாற்போல் 21 அன்று வேலையில் சேர்வதென்றால்...

எங்கோ இடிக்கிறதே என்று புவனேந்திர நாயர் என்பவர் கேஸ் போட்டிருக்கிறார்! ஸோ, இந்த திடீர் பணி நியமனம் பற்றி விசாரணை நடத்தி விளக்கம் தர கூட்டுறவு சங்க ரிஜிஸ்த்ராருக்கு, கோர்ட் உத்தரவு போயிருக்கிறது!

கூட்டுறவு வங்கி அதிகாரிகளின் இத்தனை அவசரத்துக்கு என்ன காரணம்? மே-1 முதல் கூட்டுறவு வங்கிப் பணிகளுக்கான தேர்வுகளையும் சேர்த்து கேரள பப்ளிக் சர்வீஸ் கமிஷனே நடத்தும் என்று அரசு உத்தரவு போட்டதால், இனிமேல் தேர்வுகளை நடத்தத் தங்களுக்கு வாய்ப்பில்லையே என்கிற அவசரம்தான்!

●● போகிற போக்கைப் பார்த்தால் 'கமிஷன்' கரப்பதென்பது சட்டபூர்வமாகி விடும் போலிருக்கிறது. உதாரணம்: கேரள அரசு, கேரள மாநில கூட்டுறவு விவசாய கிராம வங்கி, கிராம வளர்ச்சித் திட்டங்களுக்காக 'நபார்டு' வங்கியிடம் 450 கோடி ரூபாய் கடன் வாங்கியது. அது போதாதென்று மீண்டும் 50 கோடி கடன் வாங்கச் சென்ற போது, வழக்கமாக ஜாமீன் தரும் கேரள அரசு ஒரு புது நிபந்தனையை விதித்தது. அதாவது கூட்டுறவு வங்கி தான் வாங்கும் கடன் தொகையில் முக்கால் சதத்தை கமிஷனாகத் தர வேண்டும் என்கிற நிபந்தனை. அப்படி கமிஷன் கொடுப்பதாக ஒப்புக் கொண்டால் இந்த ஆண்டு 3.5 கோடி தர வேண்டியிருக்கும். கூட்டுறவு வங்கியின் லாபமே இரண்டு கோடி ரூபாய்தான் என்கிற நிலையில் கமிஷன் கொடுக்க என்ன செய்வது? விழி பிதுங்கிக் கொண்டிருக்கிறது கூட்டுறவு வங்கி!

திருவனந்தபுரத்திலிருந்து :
எஸ்.எஸ்.மணி.

தேவைகள் என்பவை
சொல்லிக்கொண்டு வருவதில்லை.
ஆகவே...



தென்னை:
வலிமை, பல்வேறு உபயோகம் நிறைவான பலன் ஆகியவற்றின் சின்னம்.

இன்றே பணத்தைச் சேமிப்பது அவசியம். திடுமென எந்த நேரத்திலும் உங்களுக்குப் பணத்தேவை ஏற்படக்கூடும். சட்டென்று உடனே அந்தத் தேவையைப் பூர்த்தி செய்ய இயலாமல் போய்விடலாம். குழந்தையின் உயர்கல்வி, திருமணம், சொந்தத்தில் வீடு, வாகனம் இப்படி எந்தவொரு காரணத்துக்காகவும் பணத்தேவை ஏற்பட்டால் அதனைச் சிரமமின்றிச் சமாளிப்பது எப்படி? உங்களுக்கு அவசியப்படும் நேரத்தில் நல்ல லாபத்துடன் திரும்பக் கிடைக்கும் விதத்தில் இன்றே புத்திசாலித்தனமாக முதலீடு செய்து வைப்பதுதான் அதற்குச் சரியான வழி.

சேமிக்க வேண்டும் என முடிவு செய்து விட்டால் மட்டும் போதுமா? நீங்கள் முதலீடு செய்யப்போகும் நிறுவனம் எப்படிப் பட்டது என்பதைப் பற்றித் தெரிந்திருக்க வேண்டாமா?

எந்தவொரு நிறுவனத்திலும் முதலீடு செய்வதற்கு முன் பின்வரும் மூன்று அம்சங்களும் அதில் இடம் பெற்றிருக்கின்றனவா என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

- உங்கள் பணத்துக்குப் பாதுகாப்பு
- அதனை எளிதில் திரும்பப்பெறும் நிதி வசதி
- பண்புடன் கூடிய சேவை

பொதுமக்கள் நலனைக் கருத்தில் கொண்டு வெளியிடப்பெறுவது.

Ram Kaashyap Investment Ltd

பதிவு அலுவலகம்: 53, பிஷப் கார்டன்,
(கிரீன்வேஸ் ரோடுக்கு அப்பால்)
சென்னை - 600 028 போன்: 4936931, 4936932

உலகக் கண்ணோட்டம்; தனி மனித மேம்பாடு

Insight-757

எங்கள் வெற்றியின் அடித்தளம் - பண்புடன் கூடிய சேவை



தேங்காய்:
மனித குலத்துக்குப் பல விதங்களிலும் பயன்படுவது இதன் சிறப்பு.

மௌனப் பூகம்பம்

7

பிரபு புரண்டு புரண்டு படுத்தார். பகலெல்லாம் உடல்வலி. இரவிலாவது சிறிது நேரம் கண்ணை மூடலாம் என்று பார்த்தவருக்குத் தூக்கம் வருவதாயில்லை. சாதாரண சுரம் என்று நினைத்திருந்தவருக்கு மூன்று நாளாகியும் உடல்வலியும் குறையாமல் மன உளைச்சலும் குறையாமல் தொல்லை கூடியது. சாந்தி அவரை எவ்வளவு கவனிக்க முடியுமோ அவ்வளவு கவனித்தாள்.

"சாந்தி... உன்னிடம் நான் ஒரு உண்மையைச் சொல்லணும்...'' என்று அவளைப் பார்த்தார்.

"என்னங்க?" எப்போதும் போல் ஆதுரத்துடன் கேட்டாள் சாந்தி.

"அன்னிக்கி இங்கே வந்தாளே ஒரு பெண்.... மாலதி... அவள் என்னுடன் நான் பி.எச்.டி செய்யும்போது பழகியவள்'' சாந்தியைப் பார்த்துக் கொண்டே பேசியவருக்கு அவளுடைய முகத்தில் எந்தவித உணர்ச்சியையும் கண்டு கொள்ள முடியவில்லை.

''ம்ம்'' என்று மட்டும் கேட்டாள் சாந்தி.

"மாலதி என் காதலி மட்டுமில்லை..."

"ம்..... ம்"

"அவள் என் பையனுக்கு அம்மா கூட."

"ம்..... ம்."

"என்ன, சாந்தி... எல்லாத்துக்கும் ம்ம்னு மட்டும் சொல்றே? உன்னிடம் எப்படிச் சொல்றதுன்னு தெரியாமத்தானே நான் மூணு நாளா படுத்த படுக்கையிலே கிடக்கிறேன்." பிரபு சாந்தியைப் பிடித்து உலுக்கினார்.

"இப்ப என்னங்க ஆயிடுச்சு? உங்களுக்கு மாலதி மூலமா ஒரு பையன் இருக்கான்... அவன் பெயர் கோபு.... அவ்வளவுதானே?"


"சாந்தி...." பிரபுவின் கூச்சலைக் கேட்டு அவர்கள் பையனும் பெண்ணும் வேறொரு அறையிலிருந்து ஓடி வந்தனர். அவர்கள் பயந்து ஓடி வந்ததும் சாந்தி அவர்களை அணைத்துக் கொண்டாள்.

"இங்கே பாருங்க... நீங்க இனிமேலாவது நிம்மதியாத் தூங்குங்க.... நாம நாளைக்கு விவரமா பேசிக்கலாமே" என்று அவரைப் படுக்க வைத்து, அவர் மேல் போர்வையைப் போர்த்திவிட்டு குழந்தைகளைத் திரும்பத் தூங்க வைக்க அழைத்துப் போனாள் சாந்தி.

பிரபுவுக்குக் குழப்பம் அதிகமானதே தவிர தூக்கம் வருவதாயில்லை. சாந்திக்கு எப்படித் தெரிந்தது? அவளிடம் மாலதியே ஒரு வேளை சொல்லியிருப்பாளோ? ஏன் சொல்ல வேண்டும்? சாந்தி அத்தனை விவரத்தையும் அதிர்ச்சியில்லாமல் ஏற்றுக் கொண்டிருக்கிறாளே! நாளைக்குத் தான் பூகம்பம் ஆரம்பமாகுமோ? எரிமலை வெடிக்குமோ? கோபக்கனல் தெறிக்குமோ? பிரபுவினால் சாந்தியைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

சேது ஆறுமணி அளவில் வீட்டுக்கு வந்தபோது நீலா ஏற்கெனவே சமையலை முடித்து விட்டு இருந்தாள். டேப்ரிக்கார்டரில் தனக்குப் பிடித்த பழைய சினிமா பாட்டு ஒன்றைக் கேட்டுக் கொண்டு ஏதோ ஒரு விஞ்ஞான பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்தாள். அவள் சிந்தனை மட்டும் 'மேலதயான்' ஆராய்ச்சியைப் பற்றியே சுற்றி வந்தது.

வேகவைத்த வேர்க்கடலையை சேது எடுத்துக் கொண்டு அவள்



பக்கத்தில் உட்கார்ந்தான். இருவருமே நெருக்கமாக உட்காரும் அளவு இருந்த அந்த சோபாவில் அவன் உட்கார்ந்ததும் நீலா அவனைப் பார்த்தாள்.

"இன்னிக்கி நான் மறுபடியும் டாக்டர் பிரபுவின் ஆராய்ச்சிக் கூடத்துக்குப் போயிருந்தேன். ரொம்ப முக்கிய சமாசாரம் தெரிந்தது" என்றாள் நீலா.

"அப்படியா? நான்கூட உன்னிடம் ஒன்று கேக்கணும்னுதான் இருக்கேன்" என்றான் சேது.

"என்ன கேக்கணும்?"

"முதல்லே நீ ஆராய்ச்சி அறையிலே என்ன பார்த்தேன்னு சொல்லு?"

"டாக்டர் பிரபு 'மேலதயான்' என்கிற பூச்சிக் கொல்லியை வைத்து நிறைய ஆராய்ச்சிகள் செய்து வருகிறார். முக்கியமாக ஆண் எலிகளை பரிசோதனைக்குப் பயன்படுத்தி அவைகளின் உயிரணுக்கள் குறைகின்றனவா என்பதில் ஆர்வம் காட்டுகிறார்."

"அப்படியா!" வியப்பின் உச்சிக்கே சேது போய்விட்டான்.

"ஏன், சேது? என்ன இப்படி ஆச்சரியப் படறீங்க?" நீலாவுக்குப் புரியவில்லை.

"ஏன் தெரியுமா? நானும் 'மேலதயான்' பற்றித்தான் உன்னிடம் பேசணும் என்றிருந்தேன்!" சேது பேச்சைத் தொடர்ந்தான்.

"எங்க கம்பெனியிலே 'மேலதயான்' பூச்சிக் கொல்லி மருந்து நல்லா விற்பனையாகிக் கிட்டு இருக்கு. ஆனா அது சில சமயங்களில் தண்ணீரில் தன் சக்தியை இழந்து விடுகிறது என்று விவசாயிகள் சொல்கிறார்கள். அதைப் பற்றின ஆராய்ச்சி விவரம் உனக்குத் தெரியுமா?" என்று நிறுத்தினான் சேது.

"மேலதயான்' அமிலம் கலந்த தண்ணீரில் அதிக நாட்கள் சக்தியுடன் இருக்கும்... அமிலம் இல்லாத நீரில் மாற்றங்கள் பல வற்றிக்கு இலக்காகிறதாம்...." என்றாள் நீலா.

"நல்லது, நீலா... நான் இதை என் கம்பெனிக்குச் சொன்னால் அவர்கள் மேலும் 'மேலதயான்' பற்றி பரிசோதனைகள் செய்ய

வாசன்

முடியும்" என்று மகிழ்ச்சியுடன் சொன்னான் சேது.

"அது இருக்கட்டும், 'மேலதயான்' பற்றி நான் ஒரு 'தியரி' வைச்சிருக்கேன் தெரியுமா?" என்றாள்.

"என்ன 'தியரி'? சயின்டிஸ்ட் போல பேசறியே?"

"அந்த பூச்சிக் கொல்லி மருந்தை அமைச்சர் ரங்கதுரை தன்னுடைய அரசியல் காரணத்துக்காகப் பயன்படுத்தப் போகிறார் என்பது என் 'தியரி'." நீலா திட்ட





— வேதபுரி எஸ். ரமேஷ்

வட்டமாகச் சொன்னான்.

"அவ்வளவு நிச்சயமாக எப்படித் தெரியும்?"

"நான் பாலு, சாலமன் பேசியதிலிருந்து இதைத் தெரிந்து கொண்டேன்; ஆனால் எப்படி, எங்கே மேலதயாளை' ரங்கதுரை பயன் படுத்தப் போகிறார் என்பதுதான் புரியவில்லை."

"ஒருவேளை கிராமங்களில் இருக்கும் விவசாயிகளுக்கு விளைச்சலை விருத்தி செய்ய இலவசமாக விநியோகம் செய்யப் போறாரோ என்னவோ" என்று அடுக்கினான் சேது.

"அப்படி அவர் செய்தால் உங்க கம்பெனிக்கு நல்ல லாபம் வரும்னுதானே கணக்குப் போடறீங்க!" என்று சிரித்தாள் நீலா.

சேதுவும் சிரித்து விட்டான். பிறகு ஏதோ நினைத்துக் கொண்டவனாக, "சரி, நீலா... எனக்கு அடுத்த வாரம் இரண்டு நாட்கள் லீவு எடுக்க முடியும். பெங்களூர் போய் வந்து விடலாமா?" என்று கேட்டான்.

"நீங்கள்தானே சேது - நீலா தம்பதி?" என்று பெங்களூர் மருத்துவ மனையில் அவர்கள் உட்கார்ந்திருந்த இடத்துக்கு வந்து நர்ஸ் கேட்டாள்.

"ஆமாம்" என்று சேது சொன்னவுடன் நர்ஸ் அவர்களை டாக்டர்கள் இருக்குமிடத்துக்கு அழைத்துச் சென்றாள்.

"மிஸஸ் நீலா, நீங்க இந்த அறையிலே இருங்கள். லேடி டாக்டர் உடனே வருவாங்க" என்று நீலாவை ஒரு அறையில் உட்காரவிட்டு சேதுவுடன் பக்கத்தில் இன்னொரு அறைக்குப் போனாள்.

"மிஸ்டர் சேது, நீங்க சட்டையைக் கழற்றிவிட்டு இங்கே உட்காருங்கள்... உங்களைப் பார்க்க ஒரு டாக்டர் வருவார்" என்று அவனுக்குச் சொல்லிவிட்டு நர்ஸ் அங்கிருந்து போனாள்.

சில நிமிடங்களில் அங்கு வந்த டாக்டர் சேதுவிடம் பேச்சுக் கொடுத்தார். பொதுவான சில பரிசோதனைகள். பிறகு அவனிடம் ஒரு சிறிய கண்ணாடி பாட்டிலைக் கொடுத்து விவரம் சொன்னார். சேது அந்த அறையினுள் மறைவிலிருந்த பகுதியில் மறைந்தான். அவன் திரும்பி வந்து டாக்டர் கண்ணுக்குப் படும்படியாய் மேசையில் அந்த கண்ணாடி பாட்டிலை வைத்தான். அவனுடைய உயிரே அதனுள் இருப்பது போல் தோன்றியது.

"மிஸ்டர் சேது... நீங்கள் நாளை வரை பெங்களூரில் ஓட்டலில் தங்குவதாய்



அறிந்தேன். நாளை காலை பத்து மணிக்கு எங்களுக்குப் போன் செய்தால் ரிசல்ட் சொல்கிறோம். அதன் பிறகு என்ன செய்யலாம் என்பதை யோசிக்கலாம்... பொதுவாக உங்கள் உடல் ஆரோக்கியம் நல்லபடி இருக்கிறது" என்று சேதுவிடம் விடை பெற்றார்.

சேது டாக்டரின் அறையை விட்டு வெளியே வந்தபோது நீலாவும் அங்கு காத்திருந்தாள்.

"எப்படி போச்சுங்க?" என்றாள் அவனைக் கூர்மையாகப் பார்த்துக் கொண்டே.

"நாளைக்குத் தானே தெரியும்... உனக்கு எப்படி?"

"நான் இன்னக்கி இங்கே ஒரு மைனர் சர்ஜரி செய்துக்கணுமாம்" என்றாள் தயக்கத்துடன்.

"என்னது? சேதுவுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

"லேடி டாக்டர் நம்மகிட்ட பேசணும்னு கூப்பிடறாங்க." சேதுவை உள்ளே அழைத்துச் சென்றாள் நீலா.

சேதுவும், நீலாவும் எதிரே உட்கார்ந்ததும், லேடி டாக்டர் விளக்கமாகச் சொல்ல ஆரம்பித்தாள்.

"மிஸஸ் நீலாவுக்கு 'ஃபெலோபியன்' குழாய்கள் அடைபடாமலிருக்கிறதா என்பதை 'லேபராஸ்கோபி' என்ற முறைப்படி பார்க்கலாம். அது இன்றே செய்து விடலாம். சாதாரண சர்ஜரிதான். ஒரு நாளிலே அவங்க 'நார்மல் ஆயிடுவாங்க" என்று தொடங்கி அந்த சர்ஜரி பற்றி விளக்கினாள் டாக்டர்.

நீலாவை சேது பார்த்தபோது, நீலா 'சரி'யென்பது போல் தலை ஆட்டினாள்.

சர்ஜரிக்கு ஏற்பாடு நடந்து, சர்ஜரி முடிந்து தங்குமிடத்துக்கு டாக்சியில் வந்து நீலா படுக்கையில் சரிந்தாள். அவளுக்கு மயக்க மருந்து கொடுக்கப்பட்டதால் அவள் கண்களை மூடி விழுந்து கிடந்தாள்; அவளை அந்த நிலையில் பார்த்த சேதுவுக்கு மனம் துடித்தது. எப்போதும் துறுதுறுப்பாக அலைந்து கொண்டிருக்கும் நீலா இப்படி உணர்வற்றுக் கிடப்பது அவன் மனதைத் துளைத்தது. குழந்தை வேண்டிச் செய்து கொள்ளும் இந்த காரியங்களுக்குப் பலன் கிடைக்க வேண்டுமே என்று அவன் எண்ணம் ஓடியது. நீலாவின் தலைமுடியை வருடிக் கொடுத்தான். அவளையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்து விட்டான்.

(தொடரும்)

நெடுக்கும் குறுக்கும்

அம்மா குடத்தை 'ணக்'கென்று வைத்த போது தண்ணீர் சிந்திய ஒலி இங்கு கேட்டது. இதில் தற்செயல் இல்லை. அதே நேரத்தில் திட்டமிட்டுச் செய்த மாதிரியும் தெரியவில்லை. கோபமாக இருக்கிறாள் என்பது மட்டும் தெரியும். அம்மா கோபிக்கும் போது அவளுடைய அசைவுகள் இவ்வாறுதான் அனுமானிக்க முடியாமல் இருக்கும்.

"பாகீரதி... கரெக்டா வந்துட்ட பாரு... இந்தா, இதத் தொட்டுக் குடு. எட்டு மணி கட்டுல சேத்துடுவேன்."

அப்பா இடுப்பில் துண்டு கட்டாத குறைதான். அவரைப் பொறுத்தவரைக்கும் அந்த வீட்டில் லட்சணமான பெண் பாகீரதி அத்தைதான். அப்படியே மகாலட்சுமிதான்.

அம்மாவிடம் எப்போதோ இதை ஒப்பிடும் போதுதான் வந்தது வினை. அன்று முதல் அம்மாவுக்கு அத்தையின் வரவும், பேச்சும் பாந்தமில்லாமல் போனது... அம்மாவைச் சீண்டுவதில் அத்தைக்கும் ஏதோ சுகம் தெரிந்திருக்க வேண்டும்.

"நாமள்ளாம் கவடு, சூது தெரியாதவாடா - ஒம் மனசு போலவே ஜோரா இருக்கும்." அத்தை சமையலறையைப் பார்த்தபடி கை உயர்த்தி ஆசி கூறினாள்.

சமையலறையில் ஏதோ பாத்திரம் அலறியது.

அப்பா ஒற்றிக் கொண்டு கவரை வாங்கினார். இன்றுபோட்டு நாளை சேர வேண்டும். நாளை கடைசி நாள்.

போட்டியை அறிவித்து ஒரு மாதம் ஆகிவிட்டது. ஒரு நாளைக்கு ஒரு கட்டம் என்றால் கூட இந்நேரம் நிரப்பியிருக்கலாம். அப்பாவின் கோட்பாடே தனி. மனிதன் அவசர காலத்தில்தான் சிறப்பாகச் செயல்படுகிறான். கடைசி வினாடிகளில்தான் ஒரு போட்டியாளனுக்குள் ஜ்வாலை கிளம்பும்.

பம்பாயிலிருந்து ஓர் உர நிறுவனமும், ஒரு பத்திரிகையும் இணைந்து நடத்தும் ஒரு லட்ச ரூபாய் போட்டி. உரக் கம்பெனிக்கும் குறுக்கெழுத்துக்கும் என்ன தொடர்பு... ஆயினும் அப்பா போன்றவர்களும் இதற்காக இருக்கின்றனர்.

அப்பாவுக்குத் தினசரிகளில் செய்திகள் முக்கியமில்லை.. முக்கியமான செய்திகள் எப்படியும் நாலு பேர் அலசுகையில் காதை எட்டி விடும். அவருக்குக் குறுக்கெழுத்துக் கட்டங்கள்தான் பிரதானம். பத்திரிகைகளின் பணி செய்திகளைச் சொல்வதில் பூரணமடைவதில்லை. படிப்பவன் சாவதானமாக மறந்து விட்டு அடுத்த செய்திக்குப் போய் விடுவான். படிப்பவனை, அவனுடைய கவனத்தை நிறுத்த குறுக்கெழுத்துப் புதிர்தான் சரியானது. மேலும் கீழும் கண் ஓட வேண்டும். இதுவா, அதுவா, இதில் எது பொருத்தம் என்று மூளை பரபரக்க வேண்டும். அப்பா டீ.வியில் வரும் குறுக்கெழுத்துப் புதிரை, அறிவிப்பாளர் க்ளூ சொன்னதும் படாரென்று சொல்வார் - பதில் சரியாகவே இருக்கும்.

"வாடா... ஆர்.எம்.எஸ் வரைக்கும் போயிட்டு வந்துடுவோம்." அப்பா என்னைப் பெரும்பாலும் வெளியே அழைத்துப் போவார்... இதில் சின்ன தாய் சூட்சமம் உண்டு. கெடிலம் ஆற்று மணலில் அப்பா சிகரெட் பிடிப்பார். ஊரில் அநேகருக்கு அப்பாவைத் தெரியுமாதலால் நான்தான் சிகரெட் வாங்க வேண்டும். கடைக்காரர்களும் காசு கொடுத்தால் பண்டம் கொடுத்தோமென்றில்லை. 'பிஞ்சிலே பழுத்த' என்னை ஒரு பார்வையுடன்தான் அனுப்புவார்கள்.

இன்று அப்பா கெடிலம் போகவில்லை. தபால் கட்டு எடுத்து விடுவார்கள் என்று நடையை எட்டிப் போட்டார். அவருடன் விரைய, இணைய வேண்டியதாயிற்று.

"ஏம்பா... காளி... நாளைக்குப் போயிடுமில்லே." சதுர ஓட்டை வழியாகப் பேசினார். காளி அப்பாவின் சிநேகிதர் மகன்.

சுப்ரமணியன் ரவிச்சந்திரன்

காளி ஏதும் பேசாமல் கவரை வாங்கிக் கொண்டான்.


"ஹப்பா... பெரிய சமாசாரம்... ரொம்ப க்ரிடிகல்லா கேட்டுருந்தான். வச்ச ரூபான்னா சும்மாவா. பைபிள் தாத்தாவின் கை ஓட்டைன்னு ஒரு க்ளூ.... அதுக்கு மேலந்து கீழ் வார்த்தையும் கடூரமா இருந்தது. வேலையே ஓடலே. கொல்லைப் பக்கம் போனேனா, ஒரு ப்ளாஷ், சாந்தக்ளாஸ்... யாரும் பண்ணியிருக்க மாட்டான். ஏழு இடமிருந்து வலம் ஒரு வகை பந்தய வண்டின்னு போட்ருக்கான். மூணெழுத்து... ரேக்ளா...."

அப்பா அணு அணுவாக அனுபவித்துச் சொல்லிய படி வந்தார். அவர் அவ்வாறு கூறுகையில் அவரது மூளை குறித்து எனக்கே பிரமிப்பாக இருந்தது. எத்தனை சிக்கல்களை அனாயசமாக விடுவித்திருக்கிறார். அப்பா சொல்வது போல, பாதி பேருக்கு மேல் முழுசாய்ப் பூர்த்தி செய்திருக்க வழி இல்லை என்றே தோன்றியது.

வரும் போது இருட்டில் ஆள் தெரியவில்லை. அப்பா பாலத்தின் மேல் அமர்ந்து கொண்டார். அவருடைய கையின் ஆட்டத்திற்கு ஏற்ப சிகரெட்டின் நுனி இருட்டில் ஆடியது.

"பாகீ வந்தா பாத்தியாடா... அதான்டா முக்கியம். எழுதி வச்சுக்கோ... வர்ற பணத்துல அவளுக்கு ஒரு பட்டுப் புடைவைய தட்டி உட்டுற வேண்டியதுதான்."

'அம்மாவுக்கு?' என்று கேட்க நினைத்து அடங்கினேன்.



"இல்ல சார். இது இந்த வாரத்து புக்தான் சார், பாருங்க." அழாக் குறையாகச் சொன்னான் சர்க்குலேஷனில் புத்தகம் போடும் பையன்.

"இதோ பாருப்பா... நீ மத்த நாளுல வாசனும், கல்கியும் எடிட்டரா இருந்த விகடன், கல்கியக் குடுத்துண்டு வந்தே. நா ஏன்னு கேட்டிருப்பேனா... இப்ப எனக்கு தேவைப் படறது... ஒரு ரிஸல்ட் பாக்கணும்." அப்பா கண்டிப்பாய்க் கூறினார்.

"சார் மணிச்சங்கு பத்திரிகை புதன் கிழமைல வருது... செவ்வாக் கிழமை ராத்திரி ஜனதால நம்ம ஊர் ஸ்டேஷனுக்கு வந்துடும். நம்ப மணிகண்ட விலாஸ் கப்புணி தான் ஏஜெண்டு. போறுமா... இனியும் ஏதாச்சும் தெரியணுமா...."

அந்தப் பையன் என்ன செய்வான். பதினைந்து நாட்களாக போட்டி முடிவு



— எஸ்.எஸ். பூங்கதிர்

போட்டி முடிவு என்று அறித்தால்?

"ஆல்ரைட், நீ போ." அப்பா சாந்தமானார்.

"டேய் என்னடா அதுக்குள்ள தூக்கம். இன்னிக்கு என்ன கெழமை, எங்க போகணும்னு மறந்து போச்சா..." தூங்கப் போனேன்... புரட்டினார்.

எல்லாம் நினைவிற்கு வந்தது. இன்று செய்வாய். மணிச் சங்கு பத்திரிகை ஜனதாவில் வருகிறது. ஏஜெண்ட் கப்புணியிடம் வாங்கப் போகும் பையனை அவர் அப்பாவுக்கு அறிமுகப்படுத்தியதும் நடந்திருந்தன...

"டேய் ஒரு லட்சம் ரூபாய்னா, புஸ்தகத்துல போட்டோ, பேரு எல்லாம் வரும்டா... மணிச் சங்கு ரெண்டு இலச்சமாவது விக்கும்.. அத்தனையிலயும் என் பேரு..." சின்னக் குழந்தையாய் ஆகிப் போன அப்பா திடீரென்று மோனோ ஆக்டிங் நடிகரானார்.

"வணக்கம் திரு. வைத்தியநாதன் அவர்களே... போட்டியில் கலந்துகிட்ட பதினஞ்சாயிரம் பேர்ல நீங்க ஒருத்தர்தான் அத்தனை விடைகளையும் சரியா எழுதியிருக்கீங்க. ஓங்க வெற்றியோட ரகசியம்?"

"நான் கிட்டத்தட்ட இருவத்தஞ்சு வருஷமா குறுக்கெழுத்துப் புதிர்களை விடுவிச்சுக்கிட்டு வர்றேன். எத்தனையோ போட்டிங்கள்ல நான் கலந்துக்காம விட்டிருக்கேன். அந்தப் பரிசுத் தொகையைக் கூட்டினாலே இலட்ச ரூபாய்க்கு மேல வரும்..."

"இப்ப கலந்துகிட்டது? ரூபாய் லட்சங்கறதாலயா?"

"இல்லே. இந்தப் போட்டியோட புதிர்கள் சவால் விடற மாதிரி இருந்துச்சு. யாரு ஜெயிக்கப் போறாங்கற மாதிரி ஒரு அலட்சியம். அதான் நான் இருக்கேன்னு."

"வாஸ்தவம்தான். போட்டியோட நடு வார்த்தையே சிக்கலான சாந்தக்ளாஸ்தான்... அதுக்கு ரெண்டு பக்கமும் இந்த வார்த்தைய அடையற க்ளுவே இல்ல... எப்படி அதைச் சட்னு பிடிச்சீங்க?"

அப்பா கனைத்துக் கொண்டார்.

"நான், வெர்ஜர், எஸ்காண்டே, பிராண்டே போன்ற பாதிரியார்கள் கிட்ட படிச்சவன். பேருதான் இங்கிலீஷ்காரங்க, அவங்க சொல்ற திருக்குறள் பொழிப்புரைய நம்மால கூடச் சொல்ல முடியாது. தமிழ்ல வார்த்தை நிறையத் தெரிஞ்சது அவங்களால தான். கிறிஸ்தவ பள்ளிக் கூடங்கறதால சாந்தக்ளாஸ் பத்தித் தெரிஞ்சது... நானே ஸ்கூல் ட்ராமால வேஷம் போட்டிருக்கேனே..."

அப்பா தனது மானசீக பேட்டியை முடிக்கும் போது ஸ்டேஷன் வந்து விட்டது. முடிச்சு முடிச்சாய் ஜனங்கள் குழுமியிருக்க ஜே ஜே என்றிருந்தது.

"டேய், போய் வண்டி ரைட் டைமான்னு பாத்துண்டு வா." அப்பா காலியாய்ப் பெஞ்சு இல்லாததால் அரச மரத்து மேடையில் துண்டால் தட்டி விட்டு அமர்ந்தார்.

"பத்து நிமிஷம் லேட்டாம்பா."

"பத்து நிமிஷம்னா. அரை மணி ஆயிடும். என்ன கவர்மெண்ட். இதுக்குத்தான் எமர்ஜன்சி வேணுங்கறது. ச்சை..." அப்பா தலையை ஒரு மாதிரி ஆட்டினார். ரயில்வே ஸ்டேஷனின் அந்தக் கோடி எப்போதும் அந்தகாரம்தான். சிகரெட் பிடித்தால் தெரியாது.

பாதி பிடிக்கும் போது மணி அடித்தது. அப்பா சடாரென்று சிகரெட்டைக் கீழே

இந்தியாவின் முதல்தரமான நிதி நிறுவனம்

- இந்தியாவிலேயே மிகப்பெரிய நிதி நிறுவனம். ரூ. 34,000 கோடிக்கும் மேல் சொத்து ஆதாரம் கொண்டது
- 30 ஆண்டுகளாக தலைமைப் பொறுப்பில் விளங்குவதும், ஐ.டி.பி.ஐ முக்கியமான துறைகளான பவர், பெட்ரோலியம், இன்ஃப்ராஸ்ட்ரக்சர், டூரிஸம் மற்றும் டெலிகம்யூனிகேஷன்ஸ் ஆகியவற்றில் ஏற்பட்டுவரும் வாய்ப்புகளை சாதிப்பதற்கு ஒப்புதலிலும் அமைந்துள்ளது
- உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் மிக அதிக கிரெடிட் ரேட்டிங்
- எல்லா இந்திய வங்கிகள் மற்றும் நிதிநிறுவனங்களைக் காட்டிலும் அமெரிக்க, ஐரோப்பிய மற்றும் ஆசிய நாடுகளின் மூலதன சந்தையிலிருந்து இந்திய தொழிற்துறைக்கு மிக அதிக ஃபோரெக்ஸ் நிதி திரட்டியுள்ளது



மிகவும் விரைந்து முன்னேறிக் கொண்டிருக்கும் பொருளாதாரத்தின் வாய்ப்புகளை கைவசப்படுத்தும் சாமர்த்தியம் இந்தியாவிலேயே மிகப்பெரிய நிதி நிறுவனத்தைத் தவிர வேறு எதற்கு சாத்தியமாகும் ?

IDBI

இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் பாங்க் ஆஃப் இந்தியா

ஐ.டி.பி.ஐ டவர், கஃப் பரேட், பம்பாய் - 400 005.

Adfactors/IDBI/3/95 TM

போட்டார்.

"போடா போய் ராவ்ஜி கிட்ட ஸ்ட்ராங் காப்பி ஒண்ணு வாங்கிண்டு வா."

காப்பியின் மணம் நீர் சுரக்க வைத்தது. நான் சாப்பிடக் கூடாது. ஓமியோபதி டாக்டர் சொல்லியிருக்கிறார். அல்லோபதியின் ஊசிக்கும் கசப்பு மாத்திரைக்கும் பயந்து, ஜவ்வரிசி மிட்டாய் போன்ற மாத்திரையைச் சுகமாகச் சாப்பிடுகையில், இது போன்ற மகத்தான ருசிகளை இழக்க வேண்டியிருக்கிறது.

அப்பா ஆற்றினார். சாரல் தெறித்தது. குட்டக் கூழைப் போலக் காப்பி. அம்மா போட்டு ஆற்ற எடுத்தால் இப்படி நிதானமாக விழாது. கவிழ்த்தது கண்டார் விழுந்தது கேட்டார். அப்பா சிப்பிக் குடித்தார். வீட்டில் முடியாது. எனக்கு அடியே விழுந்திருக்கிறது.

தடதடவென்று ப்ளாட்பாரம் அதிர்ந்ததில் அப்பா காப்பியை அவசரமாய் விழுங்கி எதையோ எதிர் கொள்வது போலத் தயாரானார். தடார் தடாரென்று வண்டிகள் கடந்தன. எங்கோ ஒரு குழந்தையின் கிறீச்சிடல். மீன் கூடையின் நாற்றம்.

அப்பாவுக்கு ஈடு கொடுத்து ஓட முடியவில்லை. அப்பா ஒரு பெட்டியின் முன் நின்றதில் சில வினாடிகள் கழித்து அவரைப் பிடிக்க முடிந்தது.

பேப்பர் பையன், அதுதான் சுப்புணியின் ஆள்... பார்சலை காலி பெஞ்சில் பரத்தினான். அவன் நிதானமாய் வேட்டியைச் சரி செய்ய, அப்பா கோபித்துக் கொண்டார்.

"கொஞ்சமாச்சும் வியாபாரம் பண்ணணும்னு எண்ணம் இருக்கா. பாரேன். சுப்புணி எப்படிப் பறப்பான். அவனுக்கு ஆமை மாரி ஒரு அசிஸ்டண்ட்."

அந்தப் பையன் முறைப்பதை லட்சியம் செய்யாமல் அட்டைக்குக் குறுக்கே கையைக் கொடுத்து தாறுமாறாகக் கிழித்தார். சடாரென்று ஒரு புத்தகத்தை எடுத்தார். காசைப் பார்சல் மீது எறிந்து விட்டு விசுக்கென்று நகர்ந்தார்.

வண்டி போயிருந்தது. ப்ளாட்பாரமும் சந்தடியற்று இருந்தது. வெள்ளை விளக்கு எரியும் இடத்தின் கீழ்வாகாக நின்று கொண்டார். பிரித்தார்.

"என்னது நாலு மேலிருந்து கீழ் ஆபத்துன்னு போட்ருக்கான். விபத்துன்னா வரணும். சரி... எட்டு என்ட்லாக் என்ன, அட பரமசிவா.. முத்தமா... பேத்தலா இருக்கே. ரெண்டு போச்சா. தொலையறது. பண்ணண்டு இடமிருந்து வலம் சாவடியா... என்ன கண்டக்ட் பண்ணியிருக்கான்!

"போறது... ப்ரைஸ் வின்னர் எவ்ளோ மிஸ்டேக் பண்ணியிருக்கான். பார்றா. அவ்ளோத்தையும் ரைட்டா எழுதியிருக்கான். பேட்டி வேற போட்டிருக்கான். குறுக்கெழுத்துப் போட்டிக்கு நிறைய புஸ்தகம் படிப்பானாமே. வாழ்வுதான். ஜெயிச்சுட்டான்ல... என்ன வேணாலும் சொல்லிக்க வேண்டியதுதான்."

அதற்குப் பின் அப்பா வழியெங்கும் ஏதும் பேசவில்லை. அவரது நடை கூட மட்டுப்பட்ட வேகத்தில் இருந்தது. அப்பாவின் இந்த முகம் மிகவும் பரிதாபமாக இருந்தது.

"பாகீரதி... மகாலட்சுமி.... தொட்டுக் குடுத்தாளே.. என்ன ஆச்சு?" அம்மா ஒரு ஒரு வார்த்தையாக லேசாக ஏளனமாக நீட்டிக் கேட்டாள்.

"ஆமாம். அவ மகாலட்சுமிதான். அதுல அதிஷ்டம்தான். அவ அக்கா நீயும் இங்கியே இருக்கியே. அதுலதான் போச்சு" என்றார் ஏறி இறங்கும் நெஞ்சுடன் அப்பா.

அம்மா இதற்குப் பதில் பேசாவிட்டாலும் அவளது முகம் ஏனோ மலர்ந்திருந்தது.



<u>தாயுமானவன்</u>

"டாடியும் மம்மியில்தான்"
என்றது எகிப்துக் குழந்தை.
பாடம் செய்யப்பட்ட அப்பா.

— குல்ஹா

'பித்துக்குளி' சட்டங்கள்!

அமெரிக்கத் தலை நகரான வாஷிங்டனில், பட்டங்கள் பறக்கவிடக் கூடாது!

ஹார்ட் ஃபோர்ட் (கனெக்டிகட்டிலுள்ளது) என்ற ஊரில் ஞாயிற்றுகிழமை மனைவியை முத்தமிடக் கூடாது!

நெப்ராஸ்காவில் உள்ள வாட்டர்லூ என்ற இடத்தில், சவரத் தொழிலாளர்கள் காலை ஏழு மணி முதல் இரவு ஏழு மணி வரை வெங்காயம் சாப்பிடக் கூடாது!

'Loony Laws & Statutes' என்ற புத்தகத்திலிருந்து : **கிருஷ்ணவேணி ரங்கநாதன்**

"THERE IS NOTHING WORSE THAN MAKING EXCUSES FOR FAILURES."

— GEORGE CUCKOR

ஒரு திரைப்படம் சரியாக வரவேற்கப் படவில்லையென்றால் சம்பந்தப்பட்ட மற்றவர்களைக் குறை சொல்வதோ அல்லது குற்றம் சாட்டுவதோ அநாகரிகம் என்று நினைப்பவன் நான்.

கேள்வி கேட்பவர்களுக்கு ஒட்டு மொத்தமான ஒரு ஒப்புதல் வாக்கு மூலம் தந்து விடுவேன். "தோல்வியுற்றது துரதிர்ஷ்டம் தான். அதற்கான முழுப் பொறுப்பையும் நான் ஏற்றுக் கொள்கிறேன்" என்கிற மாதிரியான ஒரு blanket statement.

நினைவுக்கு வருகிறது :

எதிர் நீச்சல், இரு கோடுகள் போன்ற வெற்றிப் படங்களைத் தொடர்ந்து வெளி வந்த 'பத்தாம் பசலி' என்கிற படம். நாகேஷ் கதாநாயகனாக நடித்தது.

'துக்ளக்' பத்திரிகையில் அதன் விமர்சனம் வந்திருந்தது. இரண்டு பக்கங்களுக்கு விமர்சனம். முத்தாய்ப்பு வைக்கிற மாதிரி முடிவில் ஒரு வாசகம்.

"'இருகோடுகள்' என்கிற அற்புதமான திரைப்படத்தைக் கொடுத்த பாலசந்தர் பரக்கப் பரக்க இதில் மூன்று கோடுகளை ரசிகர்களுக்குப் போட்டிருக்கிறார்."

'துக்ளக்' பத்திரிகையில் வெளியிடப்படுகின்ற திரைப்பட விமர்சனங்களுக்கெல்லாம் அந்தந்த இயக்குனர்களிடமிருந்து அதே இதழிலேயே பதில் வாங்கிப் போடுவார்கள்.

விமர்சனத்தின் proof ஐ என்னிடம் எடுத்து வந்த உதவி ஆசிரியர், எனது விளக்கத்தை எழுதி வைத்திருந்தால் மறுநாள் வந்து வாங்கிப் போவதாகவும் சொன்னார்.

"எனது பதிலுக்காக எத்தனை பக்கங்கள் 'துக்ளக்' இதழில் உங்களால் ஒதுக்க முடியும்?" என்று கேட்டேன்.

47 நிணை

கே. பாலசந்தர்

"மூன்று பக்கங்கள் வேண்டுமானாலும் ஒதுக்கத் தயாராக இருக்கிறோம்" என்று பதில் சொன்னார் அந்த உதவி ஆசிரியர்.

"மூன்று பக்கங்கள் எனக்குத் தேவையில்லை; மூன்றே வார்த்தைகள் எனக்குப் போதும்" என்று சொல்லியபடியே அந்த விமர்சன proof ஐ வாங்கி விமர்சனத்தின் முடிவில் எனது கைப்பட மூன்று வார்த்தைகளை எழுதிக் கையெழுத்திட்டு அவரை அனுப்பி வைத்தேன்.

"I plead guilty."

இதுதான் அந்த விமர்சனத்திற்கு எனது பதில்.

ஆனால் ஒரு சுவாரஸ்யமான உண்மையை இங்கே குறிப்பிட வேண்டும்.

நான் எழுதி இயக்கிய மிகச் சிறந்த சில காட்சிகள் வியாபார வெற்றி பெறாத திரைப்படங்களில் இடம் பெற்றிருக்கின்றன. உதாரணமாக மூன்று நான்கு காட்சிகளை இங்கே flash back ஆக எண்ணிப் பார்க்க விரும்புகிறேன்.

1. 'உன்னால் முடியும் தம்பி'யில் வாக்குவாதம் செய்து கொண்டு மோதிக் கொண்டிருக்கும் தந்தையையும் தனது தம்பியையும் அந்த ஊமை அண்ணன் தனது நாதஸ்வர இசையைப் பயன்படுத்தி இணைய வைத்து அவர்களது கோபத்தைத் தணிய வைப்பது.

2. 'அக்னி சாட்சி'யில் 'sensitive' ஆன கண்ணம்மா, தனது நாத்தனார் வீட்டிற்கு விருந்துக்குச் செல்ல, அந்த நேரம் பார்த்து மின்சாரம் இல்லாமல் போகவே, ஒரு குழந்தையின் தலையைப் போன்ற வடிவம் அமைக்கப்பட்ட ஒரு மெழுகுவர்த்தியை அவளது நாத்தனார் ஏற்றி வைக்க... அந்த மெழுகு வர்த்தி கொஞ்சம் கொஞ்சமாக உருகி அதன் குழந்தை உருவம் சிதைந்து, உருக்குலைந்து போவதை காணச் சகிக்காமல் சண்டை போட்டுக் கொண்டு, விருந்து சாப்பிடாமல் கண்ணம்மா வந்து விடுகிற அந்தக் காட்சி.

3. 'ஜாதி மல்லி' - ஒரு காதல் ஜோடி. யார் முஸ்லிம், யார் ஹிந்து என்று தெரியாதவாறு தங்களது பெயர்களையே மாஸ்கோ, பெர்லின் என்று மாற்றியமைத்துக் கொண்டு, படத்தின் இறுதிவரை யார் எந்த மதம் என்று கண்டு பிடிக்க முடியாதவர்களாகவே இருந்துவிட்ட அந்தக் காதலர்களின் கிளைக்கதை.

4. 'ஒரு வீடு; இரு வாசல்' - ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்காமல் நடந்து கொள்ளும் மனிதாபிமானம் மிக்க அந்த கோடம்பாக்கத்துத் துணை நடிகர் நடிகைகள்.

சட்டப்படி பிரிந்து விட்ட மனைவி நீதிமன்ற உத்தரவின்படி, குழந்தையைத் தனது கணவன் வீட்டிற்கு அனுப்ப வேண்டிய அந்த வாரம். இரண்டு வயதுக் குழந்தை ஒரு ஹிந்தி சண்டைக்காட்சி படப்பிடிப்பில்

continuity ஆகிவிட்ட காரணத்தினால் குறிப்பிட்ட நேரத்திற்கு கணவன் வீட்டிற்கு அனுப்ப முடியாமல் தவிக்கின்ற அந்தத் துணை நடிகை.... (கதையின் கதாநாயகி அவள்தான்).

5. 'புன்னகை' - மரணப் படுக்கையில் இருக்கும் ஒரு என்ஜினியர் கதாநாயகன்.

ஒரு காண்ட்ராக்டரின் தவறுகளுக்காக அவன் construction bill ஐ கையெழுத்திடாமல் வைத்திருக்கிறான்.

'நேர்மை நேர்மை' என்று பேசுகின்ற உன் கணவன் இறக்கப் போகும் தருவாயில் உங்களுடைய எதிர் காலத்திற்காக என்ன சேர்த்து வைத்திருக்கிறான் என்று என்ஜினியரின் மனைவியை மூளைச் சலவை செய்கின்ற அந்த காண்ட்ராக்டர், அந்த bill ல் கணவனது கையெழுத்தை வாங்கிக் கொடுத்தால் 50,000 ரூபாய் அன்பளிப்பாகத் தருவதாக அவனிடம் வாக்குறுதி கொடுக்கிறான்.

குற்றமுள்ள நெஞ்சோடு தவிக்கும் கதாநாயகன் அடுத்தமுறை ஆஸ்பத்திரிக்கு வரும் தன் மனைவியிடம் அந்த காண்ட்ராக்டரின் bill ஐக் கையெழுத்திட்டு ஒப்படைக்க....

சாகும் தறுவாயில் தனக்காகக்

வளைகள்

கணவன் நெறி தவறுகின்ற அந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க மனமில்லாமல் கணவன் கையெழுத்திட்ட அந்த bill ஐ மனைவி அங்கேயே கிழித்தெறிகின்ற உணர்ச்சி பூர்வமான அந்தக் காட்சி....

இப்படி ஏராளமான காட்சிகள்.

இவைகளை film clippings களாகப் பார்த்தீர்களானால் காட்சியின் உணர்வுகளோடு ஐக்கியமாக முடியும்.

குறிப்பிட்ட மொத்த திரைப்படமும் பாதிப்பை ஏற்படுத்தத் தவறும் போதோ அல்லது வெற்றி பெறத் தவறும் போதோ அவற்றில் அடங்கியிருக்கும் இப்படிப்பட்ட சில நல்ல நல்ல காட்சிகள் மட்டும் என்ன தான் அற்புதமாக அமைக்கப்பட்டிருந்தாலும் நடிக்கப் பட்டிருந்தாலும்... அவை அனைத்தும் விழலுக்கு இரைத்த நீராகி விடுகிறது என்பதுதான் எங்கள் கண்களில் இரத்தக் கண்ணீரை வரவழைத்து விடும் நிதர்சனமான உண்மை.



• பத்தாம்பசலி படத்தில்....

Mrinal Sen அவர்களின் Ek Din Prati Din என்கிற ஒரு படம். 'எல்லா நாட்களைப் போல் இன்னொரு நாள்' என்பதுதான் படத்தின் தலைப்பு. கல்கத்தாவில் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த ஒரு குடும்பப் பெண்ணின் கதை. வயது 25. அவளுடைய சம்பாத்தியத்தில்தான் மொத்த குடும்பமும் நடைபெறுகிறது.

மாலை ஏழுமணிக்கு ஆபீஸ் முடிந்து வீட்டிற்குத் திரும்பி வந்து சேர வேண்டிய அந்தப் பெண், அன்று இரவு பூராவும் வரவில்லை. மறுநாள் காலை ஆறு மணி சுமாருக்குத்தான் வீட்டிற்குத் திரும்புகிறாள். ஒரு நாள் இரவுதான் முழுக்கதையும். அவளை அண்டி நிற்கும் அந்தக் குடும்பத்து அங்கத்தினர்களும், அண்டை அசல் குடும்பங்களைச் சேர்ந்தவர்களும், எப்படியெல்லாம் react பண்ணுகிறார்கள் என்பதும், வீடு திரும்பாத அந்தப் பெண்ணைப் பற்றி எப்படியெல்லாம் விமர்சிக்கிறார்கள் என்பதும் தான் கதை.

திரைப்படத்தைப் பார்த்த பெரும்பாலோர் அந்த இரவு அவளுக்கு என்ன நடந்தது என்பது ஏன் சொல்லப்படவில்லையென்று இயக்குனர் மீது குற்றம் சாட்டினார்கள்.

"அது எனக்கே தெரியாது" என்று மிரிணாள் சென் பதில் சொன்னார். அவர்

மேலும் சொன்னார் : "எனது படத்தின் முழுத் தாக்கமும் இந்தப் பிரச்னையைப் பற்றியதல்ல; அவளைச் சார்ந்தவர்களும், சுற்றியுள்ள நடுத்தர வர்க்கக் குடும்பத்தினர்களின் அன்றைய reaction ம் hypocritical interaction ம் தான் எனது திரைப்படத்தின் முழு focus. அன்று இரவு அந்தப் பெண்ணுக்கு என்ன நடந்திருந்தாலும் அது என் படத்தை பாதிக்க வில்லை" என்று சொன்னார்.

இந்த வாதம் தனிப்பட்ட முறையில் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. ஆனால் அநேகம் பேருக்கு இந்த பதில் திருப்தி தர வில்லை. அந்த இரவு அவளுக்கு என்ன நடந்தது என்பதைத் தெரிந்து கொள்வதில் தான் அவர்களது முழு அக்கறையும் இருந்தது. அவள் யாரிடமாவது தன் கற்பை இழந்து விட்டாளா? அல்லது rape பண்ணப் பட்டாளா என்று தெரிந்து கொண்டே ஆக வேண்டுமென்கிற ஒரு மதிமிஞ்சிய ஆர்வம்.

ஒரு சராசரி திரைப்பட அபிமானியின் attitude.

இப்படிப்பட்ட வெகுஜன attitude க்குக் காரணம் சில படைப்பாளிகள்தான்.

"People are not corrupt by themselves; they are corrupted by majority of film makers" என்று ஒரு பிரபல இயக்குனர் கொதித்துப் போய்ச் சொன்னார்.

ஒரே மாதிரி கதைகளையும் ஒரே மாதிரி சம்பவங்களையும், அதீதமான கற்பனை யோடு கூடிய சில வழக்கமான திருப்பங் களையும், ஒரே மாதிரி குணசித்திரங்களை யும் மீண்டும் மீண்டும் திரைப்படங்களிலே திணித்துத் திணித்து மக்களின் மனதை மூளைச் சலவை செய்து வைத்திருக்கிறார் களோ என்று நம்பத் தோன்றுகிறது. Over dramatised idealism போதிக்கும் சம்பவங்கள், வாழ்க்கையை நிஜ வாழ்க்கையாகப் பார்க் காமல் கனவு வாழ்க்கையாகவே காட்டும் போலியான கற்பனை வாதங்கள்; இவை களே இந்த மூளைச் சலவைக்குக் காரணங் கள்.

எனது எதிர் நீச்சல் நாடகத்திலும் சரி, திரைப்படத்திலும் சரி 'இருமல் தாத்தா' என் கிற ஒரு குணசித்திரம் வரும். பல குடும்பங் களுக்கு மத்தியில் ஒரு ஒண்டிக் குடித்தன வாசி. அங்கே நடக்கின்ற எல்லாக் காட்சி களிலும் 'இருமல் தாத்தா' வின் இருமல் குரல் மட்டும் பங்கேற்கும்.

அந்த இருமல் ஒரு நாள் நின்று போகும். அவர் இறந்து போயிருப்பார். இந்த குண சித்திரம் கடைசிவரையில் மேடையிலோ, திரையிலோ காட்டப்படவில்லையென்பதை பெருவாரியான ரசிகர்கள் பாராட்டினார் கள் என்றாலும் ஒரு சிலர் அந்த இருமல் தாத்தா யாரென்று காட்டியிருக்கலாமே என்று ஆதங்கப்பட்டார்கள். ஏறத்தாழ மிரி ணாள் சென் அவர்கள் சொன்ன பதில்தான் நானும் சொன்னேன். "அவருடைய இருமல் குரல் மட்டும்தான் என் கதைக்கும் எனது narration க்கும் தேவைப்பட்டது; அன்னா ருடைய உருவத்தைக் கற்பனைக்கு விட்டு விட்டேன்; உருவம் எனக்குத் தேவைப்பட வில்லை; ஆக இருமல் மட்டுமே நடித்தது."

இந்த நேரத்தில் சில ரசிகர்களுடைய prejudiced notions பற்றியும் குறிப்பிட்டாக வேண்டியிருக்கிறது. 'டுயட்' படம் வெளி வந்தவுடன் "கதாநாயகனுக்கு எதற்கு ஒரு சகோதரி? அந்த கேரக்டர் 'வேஸ்ட்' இல்லியா?" என்று என்னிடம் ஒரு ரசிகர் கேட்டார்.

ஒரு நல்ல குடும்பம் என்றிருந்தால் இயற் கையாக ஒரு தாய், தந்தை, மகன், மகள் என்று எல்லோரும்தான் இருப்பார்கள். கேள்வி கேட்டவரின் basic psychology ஐ என் னால் புரிந்து கொள்ள முடிந்தது. அவ ருடைய எதிர்பார்ப்பும் எனக்குப் புரிந்தது. கதாநாயகனுக்கு ஒரு சகோதரி குணசித்திரம் படைத்தாலே அந்த சகோதரி யாரால் எப்பொழுது கெடுக்கப்படவிருக்கிறாள்? அல்லது kidnap செய்யப்படவிருக்கிறாள்? எப்பொழுது கதாநாயகன் வந்து காப்பாற்றப் போகிறான் என்றெல்லாம் எதிர்பார்ப்பது sadism என்று எனக்குப் பட்டது. ஒரு தாய் என்றிருந்தால் அவளை எப்படியெல்லாம் கொடுமைப்படுத்திக் காட்டலாம் என்று சிந்திக்கிற படைப்பாளிகளும் இந்த வகைதான்.

கதையில் ஒரு தாயின் dramatic contribution இல்லையென்பதற்காகவே தாயில்லாத கதாநாயகர்களைத்தான் படைக்க வேண்டு மென்று எதிர்பார்ப்பது என்ன நியாயம்?

வீட்டிலிருக்கும் ஒரு சமையல்காரி கதா பாத்திரத்தை சற்று அழகான ஒரு நடிகை ஏற்று நடிக்கிறாள் என்பதனாலேயே அந்தக் குடும்பத் தலைவனுக்கும் அந்த சமையல் காரிக்கும் பின்னால் ஏதோ தொடர்பு இருப் பதாக வரப் போகிறது என்று viewers எதிர் பார்ப்பதும், பின்னால் அப்படி திரைக் கதை அமைக்கப்படவில்லையென்றால் அதற்காக ஏமாற்றமடைவதும் என்ன நியாயம்? இது தனிமனித எதிர்பார்ப்பும் ஏமாற்றமும்.


In short :

Cinema appreciation is subjective thinking and cinema making is objective thinking.

(தொடரும்)

படம் உதவி : **பிலிம் நியூஸ் ஆனந்தன்**

உங்களின் எதிர்காலம் உங்கள் கையில் தான் !



CITY FINANCE (REGD)

293, Royapettah High Road, Royapettah,
Madras-14, Ph:8267537

7 ஆண்டுகள் ஆழ வேரூன்றிய நம்பிக்கை நிதி நிறுவனம் வழங்கும்

பூர்ண கும்பம்

'பூர்ண கும்பம் பிக்சட் டெபாசிட்' திட்டத்தில் உங்கள் முதலீடு ரூ. 1000 x 4 மட்டும். இத்தொகையை ஆண்டுக்கு ரூ. 1000 வீதம் 4 ஆண்டுகளில் செலுத்தினால் போதும்.

இத்திட்டம் தொடங்கிய நான்காவது ஆண்டிலிருந்து 22 ஆண்டுகளுக்கு ஆண்டு தோறும் ரூ. 1000 மட்டும் வட்டித் தொகையாக வழங்குகிறோம்.

இத்திட்டம் 22 ஆண்டு இறுதியில் முதிர்வுறும் பொழுது

ரூ. 1 லட்சம்

முதிர்வுத் தொகையை பூர்ண கும்பத்துடன் உங்களுக்கு சமர்ப்பிக்கிறோம்.

சிட்டி ஃபைனான்ஸில் முதலீடு செய்து முன்னேறுங்கள்.

வட்டமேஜை

♦ கல்லூரிப் பறவைகளின் உரையாடல் கல கலப்பாகவும், பயனுள்ளதாகவும் இருந்தது. ஒரு கல்லூரி மாணவன் என்ற முறையில் அந்த உரையாடலில் கலந்து கொள்ள முடியவில் லையே என்று ஏக்கமாய் உள்ளது.
காவிலிபாளையம், கே.எஸ். மூர்த்தி

♦ நிச்சயமாய் இளைய சமுதாயம் நாம் நினைக் கின்ற அளவு குப்பையாய் இல்லை என்று புரிய வைத்தது கல்லூரிப் பறவைகளின் கலந்துரை யாடல். 'நம்ம எதிர்காலத்தை அமைச்சுக்கறதும் முழுசா நம்ம கையிலதான் இருக்கு. அதனா லேயே freedom கூட பயமுறுத்துது!' அடேங் கப்பா! இந்தப் பருவத்தில் இத்தனை முதிர்ச் சியா என்று வியக்க வத்து விட்டனர்.
காட்டூர், எஸ். அருள்மொழி

ரூ. 20 பரிசு பெறும் சிறப்புக் கடிதம்

♦ காங்கிரஸின் வளர்ச்சி, அதன் தலை வருடைய தனி நபர் செல்வாக்கின் அடித் தளத்தையே நம்பியிருந்தது. அத்தகைய தலைமை இழப்பிற்குப் பின், கட்சியின் இரண்டாம் நிலைத் தலைவர்கள் அனை வருமே முதல் நிலைக்கு ஆசைப்படு கின்றனர். அதுதான் பிளவிற்கு அடிப்படை. இது தனிநபர் செல்வாக்குள்ள அடுத்த தலை(வி)வர் வரும்வரை தொடரும்.
தாண்டாம்பாளையம், ஸ்ரீநி.

♦ தலையங்கம் படித்தேன். தமிழகத்துக்குத் தீராத அவமானம் தான். என்ன செய்வது? கட் அவுட் காப்பது கடமை, கற்பழிப்பதே கண்ணியம், அரசியல் அவலங்களைக் கண்டும் காணாமல் இருப்பதே கட்டுபாடு! ஒரு போலீஸ் செய்யும் தவறு பலரையும் உசுப்பி விடவே செய்கிறது. இதனால் சில நல்ல போலீஸ்காரர்களுக்கும் தீராத அவமானமே நேர்கிறது. பெண்ணாய்ப் பிறப்பதே பாவம். அதிலும் தமிழகத்தில் பிறப்பது அதைவிட பாவம். ஒருபுறம் காக்கி உடை, மறுபுறம் காவி உடை. அப்புறம் எப்படிங்க தீரும் இந்த அவமானம்.
இலால்குடி, ஆங்கரை பைரவி.

♦ டிடெக்டிவ் இண்டர்நேஷனல் குலோத்துங்க சோழன் கூறியவை- மோசடிகளில் சிக்கி ஏமாறாமல் இருக்க பலருக்கும் பயன்படும் உபயோகமான தகவல்கள்.
உடுமலை, எஸ். பொன்னுசாமி.

♦ 'தலை போகிற வேலை' போட்டோ சமாசாரத்தில் உமக்கு ஃபெயில் மார்க்தான். நம்ம அரசியல் நரிகள் மாதிரி செட்டப் பண்ண நீர் கத்துக்கணும் ஓய்!
தூத்துக்குடி, எஸ். ராமசுப்பிரமணியன்

♦ பல பட்டங்களுடன் பல்லாயிரம் படிகள் ஏறி இறங்கி பல அவஸ்தைகளை அனுபவிக்கும் பல்லாயிரக் கணக்கான சராசரி இந்தியன்தான் 'பசித்தவன்' சிறுகதை. இரண்டரை வருடங்களாக நான் படியேறி இறங்கிய அனுபவ நினைவுகளை அசை போட வைத்தது. எழுதிய ராகவனுக்குப் பாராட்டுக்கள்.
சென்னை-4, ஐ. சாந்து உஸ்மானி.

♦ டி.ஆரும், சரத்குமாரும் சந்தித்தால் எந்த மன நிலையில் பேசிக் கொள்வார்கள் என்று சித்தார்த் எழுதிய கற்பனை உரையாடல், உண்மையான உரையாடல் போலவே இருந்தது. அருமை!
கருமத்தம்பட்டி, அ. இராஜப்பன்

♦ நந்தவன தெருக்கு குரோம்பேட்டை கவிராயர் மண்டை காய்ந்து எழுதிய கவிதை படித்தேன். பட விமசனம் கவிதை வடிவில் வந்தது புதுமையாக இருந்தது.
...மத்தூர், கோ. கல்யாணசுந்தரம்.

♦ பெருமாள் கோயில்களுக்கு கும்பாபிஷேகம் நடப்பதை மகாசம்ப்ரோக்ஷணம் என்றும் மற்ற கோயில்களுக்கு, கும் பாபிஷேகத்தை கும்பாபிஷேகம் என்றும் சொல்வது மரபு. புனிதமான ஸ்ரீராஜாகோபால ஸ்வாமியின் ஆலயத்திற்குள் சம்ப்ரோக்ஷணத்தன்று ஆயிரக் கணக்கான போலீஸார் பூட்ஸ் காலுடன் நுழைந்து நடமாடி ஆலயத்தின் புனிதத்தையே கெடுத்து விட்டனர். மற்ற மதப் புனித இடங்களில் சம்பிரதாயங் களை மீற மதச் சார்பற்ற அரசு இடங்கொடுக்குமா? கேரளத்தில் முதலமைச்சராயிருந்த கருணா கரன் கூட எந்த ஆலயத்திற்குச் சென்றாலும் சட்டையைக் கழற்றிச் செல்லும் மரபைக் கடைப்பிடித்தார்.
திருபுவனம், வி.கே. பிள்ளை.

போட்டோ சமாசாரத்தில் ஃபெயில் மார்க்குதான்!

♦ முதலில் அ.தி.மு.க.வை எதிர்க்க ஆரம்பித்த போதும், பிறகு பிரதமரிடம் கருத்து வேறு பாட்டால் தமிழக காங்கிரஸ் தலைவர் பதவியிலிருந்து தூக்கியெறியப்பட்டபோதும், ஒழிந்தார் வாழப்பாடி என்றே பலரும் நினைத்தார்கள். ஆனால் இத்தனை பிரச்னை களுக்கிடையேயும் அவர் பீனிக்ஸ் பறவை போல மீண் டும் உயிர்த்தெழுந்து நிற்பது ஆச்சரியப்பட வைக்கிறது!
சென்னை-30, கணேசன்



காதல் காண்டம்!

நாகபார்த்திபன்

முதலிலேயே சொல்லி விடுகிறேன். என்னோடு நீங்கள் ஸ்நேகமாய் இருக்க வேண்டுமென்று விரும்புகிறேன். எனவே, 'இந்த வயசில் உனக்கு எதற்கு காதல்?' என்று கேட்பவராக நீங்கள் இருந்தால், ஸாரி. உங்களுக்கு ஆயிரம் வேலை இருக்கும். இங்கேயே விலகி விடுங்கள். என் நலனில் அக்கறை செலுத்த, என் பிரச்னைக்கு தீர்வு சொல்ல முடியும் என்று நினைப்பவர்கள் மட்டுமே மேலே போங்கள்.

சரி. ஆக இப்போது நீங்கள் என் ஃப்ரண்ட்.

என் பெயர் ஜெயா. என் பெயரை எனக்குக் கொஞ்சமும் பிடிக்காது. சுத்த கர்நாடகம். என் பாட்டியின் பெயரையே எனக்கு வைத்த என் அம்மாவின் மேல் எனக்கு பயங்கர கோபம் உண்டு. ப்ச். விடுங்கள்.

பத்தாவது வரை நன்றாகத்தான் படித்தேன். ஸ்கூல் விட்டால் வீடு, வீடு விட்டால் ஸ்கூல். இளையவர்களின் பாஷையில் - பாயிண்ட் டு பாயிண்ட். பெரும்பாலும் யாருடனும் பழக மாட்டேன். அவ்வப்போது கமல் படங்கள், அப்பாவின் பியட்டில் பிக்னிக் என்று வாழ்க்கை கச்சிதமாகச் சென்றது. பதினொன்றாவதிற்கு வேறு ஸ்கூல் செல்லும் வரை.

அப்போது நாங்கள் வேறு வீடு மாறியதால் வேறு பள்ளிக்குச் செல்ல வேண்டியிருந்தது. என் வகுப்பில் சுபாஷிணி என்றொரு ஃப்ரெண்ட் கிடைத்தாள். நல்ல அழகாய் இருந்தாள். என்னைப் பொறாமைப்பட வைத்தாள். அவளின் பேச்சும் செய்கையும் எனக்கு முற்றும் புதிதாக, என்னை பயமுறுத்துவதாக இருந்தது. என்றாலும் அவளுடன் பழகுவதை மிக விரும்பினேன்.

அவள் வீட்டுக்கு ஒருநாள் போயிருந்த போது பீரோவுக்குப் பின்னாலிருந்து ஒரு பிளாஸ்டிக் கவரிலிருந்த பேப்பர்களை

எடுத்துக் காட்டினாள். அவளுக்கு வந்த லவ் லெட்டர்களாம். மொத்தம் 13 பேரிடமிருந்து. என் அமைதியான குளத்தில் முதல் கல் விழுந்தது.

நான் கொஞ்சம் அழகில் சுமார்தான். அவள் வீட்டுக்குப் போய் வந்தபின் (அவளுக்கு வந்த லெட்டர்களைப் பார்த்தபின்) என்னை அலங்கரிப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டேன். என் நிறைய நேரத்தை என் வீட்டு பெல்ஜியம் கண்ணாடி தின்றது.

அந்தச் சமயத்தில்தான் அசோக்கைச் சந்தித்தேன்.

அசோக்! சுபாஷிணிக்குத் தெரிந்தவன். அவன்தான் அறிமுகப்படுத்தி வைத்தான். கம்பீரமாக இருந்தான். மென்மையாகப் பேசினான். இயல்பாகவோ அல்லது நான் பிறக்கும் முன்பே என் கபாலத்தில் பிரம்மன் எழுதி வைத்ததாலோ அவனை அடிக்கடி சந்திக்க நேர்ந்தது.

கொஞ்ச நாள் கழித்து ஒரு பெண்ணோடு பழகும் அத்தனை அத்தனை ஆண்களும் செய்வதையே அவனும் செய்தான். ஒரு ஆறு பக்கக் கடிதத்தில் நான்கு பக்கத்திற்கு என்னுடன் எதையெதையோ ஒப்பிட்டு ஐந்தாம் பக்கத்தில் 'ஐ லவ் யூ' என்றான். சுபாவை விடுத்து ஒருவன் என்னைக் காதலிக்க முடியும் என்று அதுவரை நான் நம்பாததால் உடனே சம்மதித்தேன். அவன் என்னை ப்ரியா என்றுதான் அழைத்தான். அதை நான் மிகவும் விரும்பினேன். அந்தப் பெயரின் இலக்கண மீறலும், அதனால் விளைந்த லேசான ரிதமும், அவனுடைய மெல்லிய குரலும் என்னை ஜில்லிட வைத்தது.

எல்லா காதலர்களைப் போல சுற்றினோம். கூட்டமில்லாத சினிமா போனோம். எல்லா செலவும் நான்தான். அவன் குடும்பத்தின் வறுமையை சொல்வான். வருத்தப்பட்டேன். அவ்வப்போது செலவுக்கென்று அவன் கேட்டபோது நூறு, இருநூறாய் சந்தோஷமாகக் கொடுத்தேன்.

ஒருநாள் சுந்தர் என்ற அவனுடைய ஃப்ரண்டைப் பார்த்தேன். அசோக்கை நம்பாதே. அவன் ஒரு டிரக் அடிக்ட் என்றான். அதற்காகத்தான் என்னிடம் பணம் வாங்குகிறானாம். நான் நம்பவில்லை. பாகிஸ்தானின் சதி என்று விட்டு விட்டேன்.

கொஞ்ச நாள் கழித்து என் அசோக்கை ஒரு பெண்ணோடு - கூட்டமில்லாத தியேட்டரில் பார்த்தேன். சுந்தரை உடனே கேட்டேன். அவன் அசோக்கின் இன்னொரு காதலியாம். பணக்கார! அப்புறம் அசோக்கை மிகவும் துன்டித்தேன். அவனும் அலட்டிக் கொண்டதாகத் தெரியவில்லை.

இதனாலெல்லாம் ப்ளஸ் டூவில் என்னால் மிகக் குறைந்த மார்க்குடன்தான் பாஸாக முடிந்தது. என் ஏரோனேடிக்கல் இன்ஜினியரிங் கனவு தூளானது. எனக்கு வருத்தமில்லை. என் தவறுக்கு தண்டனை என்று நினைத்துக் கொண்டேன்.

இப்போதெல்லாம் என் பெயர் எனக்கு ரொம்பப் பிடிக்கிறது. என்ன ஓர் அழகான பெயர்! ஜெயா. இரண்டே எழுத்து. கச்சிதம். நீங் கள் கூட உச்சரித்துப் பாருங்கள். ஜெயா, நன்றாக இல்லை? ஜெயா, ஜெயா. ஜெயம். வெற்றி. வெற்றி பெறப் போகிறவள்.

இரண்டு நாட்களுக்கு முன் வீட்டுக்கு சுந்தர் வந்திருந்தான். சோகமாக இருந்தான். அசோக் மிகுந்த போதையில் பைக் ஓட்டி ஒரு லாரியில் இறந்து விட்டான் என்று சொன்னான்.

இந்தக் கதை முடிந்து விட்டதென்று நினைத்துக் கொண்டேன்.

முடியவில்லையென்று காலையில் தெரிந்தது. சுந்தரிடமிருந்து ஒரு லெட்டர் வந்திருந்தது. என்னைக் காதலிக்கிறானாம். என் முடிவை நாளை சொல்ல வேண்டுமாம்.

அவனுக்கு என்ன சொல்வதென்று தெரியாமல் லெட்டரை வெறுமனே பார்த்தபடி அமர்ந்திருக்கிறேன்.

காய்ச்சலுக்குக் காரணம்!

'கம்ஸவதம்' நாடகத்திற்கு 'கல்கி'யுடன் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணனும் வந்திருந்தார். வழக்கமாக கம்ஸனின் பாத்திரம் ஏற்று நடிப்பவருக்கு உடல்நிலை சரியில்லையென்று வேறு ஒருவர் கம்ஸனாக நடிக்க வேண்டியதாயிற்று. நாடகம் முடியும் நிலையில் கல்கி அவர்களைப் பேசக் கேட்டுக் கொண்டார்கள். "கல்கி" எழுந்து, "கம்ஸனின் பாத்திரமேற்று நடிப்பவருக்கு எதிர்பாராமல் குளிர்காய்ச்சல் கண்டுவிட்டதாகக் கூறினார்கள். மேடையில் தோன்றும் ஒரு கிருஷ்ணன் போதாதென்று ரசிகர்களில் முதல் வரிசையில் இன்னும் இரண்டு கிருஷ்ணன்கள் (ரா. கிருஷ்ணமூர்த்தி (கல்கி), என்.எஸ். கிருஷ்ணன்) உட்கார்ந்திருப்பதைப் பார்க்கும் போது எப்படி அவருக்குக் குளிர் காய்ச்சல் வராமல் இருக்கும்?" என்றார். சபையில் சிரிப்பொலி ஓய வெகு நேரம் ஆயிற்று!

— ரமா ராமநாதன்



கிரெடிட் அனாலிசிஸ் அண்ட் ரிசர்ச் லிமிடெட் அமைப்பின் மதிப்பீட்டுக் குழு, "CARE A (FD)" மதிப்பீட்டை வழங்கியதைத் தொடர்ந்து, சான்மேக் பிக்சட் டெபாசிட்டுகளுக்கு சாதகமாக மேலும் பல சிறப்புகள் சேர்ந்துள்ளன. அசல் மற்றும் வட்டிக்கு பாதுகாப்பு போதிய அளவில் உள்ளது என்று கணிக்கப்பட்டுள்ளது. எனவே எங்கள் மீது நீங்கள் வைத்துள்ள நம்பிக்கை சரியானதே என்று புரிந்து கொண்டிருப்பீர்களே?

டெபாசிட்தாரர்கள் கொண்டுள்ள இந்த முழுமையான நம்பிக்கையின் காரணத்தால்தான் மற்றவர்கள் வியக்கும் வண்ணம் சான்மேக் இந்த அளவுக்கு உயர்ந்து பல சாதனைகளையும் படைத்திருக்கிறது.

பொது டெபாசிட்டுகள் ரூ. 25 கோடிக்கு உயர்ந்துவிட்டன ■ நிகர மதிப்பு ரூ. 9.5 கோடியாக உயர்ந்துள்ளது. ■ சடுபடுத்தப்பட்டுள்ள மொத்த நிதியானது ரூ. 50 கோடியைத் தாண்டிவிட்டது. ■ EPS இப்போது ரூ.5 (ஆண்டுக்கணிப்பிலானது) என்ற அளவில் உள்ளது. ■ கிளைகளின் எண்ணிக்கை 26 ஆக உயர்ந்துள்ளது.

இந்த CARE A (FD) மதிப்பீட்டுடன், தன் தகுதிக்கு உரிய மற்றும் ஓர் அங்கீகாரத்தை சான்மேக் பெறுகிறது. அத்துடன் இதனுடைய டெபாசிட் திட்டங்கள், சிறந்த பாதுகாப்புக்கான மற்றும் ஒரு முத்திரையைப் பெறுகின்றன.

ஜெ.செல்வாக்கு மக்களிடம் எப்படி உள்ளது?



• ராணுவம் அனுப்பு!



• அனுப்பக் கூடாது!



• நிலைப்பாரா?



• கைவிரிப்பு



• கடைசி வரை தொண்டர்

● க. பழனிவேல், உ. நெமிலி.

? 'இலங்கைக்கு இந்திய ராணுவத்தை அனுப்ப வேண்டும்' என்கிறார் வாழப்பாடி, 'கூடாது' என்கிறார் கலைஞர்... தங்கள் கருத்து...?

! ஸ்ரீலங்கா அரசு விரும்பிக் கேட்காத வரை நாம் ராணுவத்தை அனுப்ப முடியாது. அப்படி அனுப்பினால் அது ஆக்கிரமிப்பாகக் கருதப்படும். வாழப்பாடியோ கலைஞரோ முடிவு செய்கிற காரியமல்ல இது.

● எஸ். பி. ராஜா, கோபாலசமுத்திரம்.

? தமிழகத்து ஜெ. போல மாயாவதியால் நிலைத்து நிற்க முடியுமா?

! ஜெக்கு இருப்பது மிருக பல மெஜாரிட்டி. மாயாவதியோ சாதா மெஜாரிட்டியைக் கூட இன்னமும் நிரூபித்தாக வேண்டிய நிலையில்தான் உள்ளார். மாஜிக் போல் பதவிக்கு வந்தவர் இதற்கு என்ன மாயாஜாலம் செய்யப் போகிறார் என்று நாடே எதிர்பார்த்துக் காத்திருக்கிறது. அதற்கப்புறமும் ஆட்டம் கண்ட நாற்காலிதான்!

● டி. என். பாலகிருஷ்ணன், சென்னை.

? சுப்பிரமணியசுவாமியுடன் எலிமெண்டரி ஸ்கூலில் படித்த நபர் யாரையாவது பிடித்து, "ஸ்கூல் நாட்களில் என் பலப்பத்தைத் திருடியவன் இவன்தான்" என்று குற்றம் சாட்டச் செய்து சுவாமியைக் கைது செய்யலாமே?

! இப்படியெல்லாம் ஐடியா கொடுத்து மேலிடத்துக்கு நெருக்கமாயிடலாம்னு பார்க்கறீங்களா?

● வி. முத்துரங்கசாமி, திண்டுக்கல்.

? 'இன்னும் இருபது ஆண்டுகளில் வேலை இல்லாத் திண்டாட்டம் ஒழிந்து விடும்' என்று கூறும் ப. சிதம்பரம் ஏற்கெனவே எட்டு ஐந்தாண்டு திட்டங்கள் முடித்ததை மறந்து விட்டாரா?

! இல்லை. அவையெல்லாம் பழைய சோஷலிஸக் கொள்கைத் திட்டங்கள். இப்போதுதான் அதைக் கைவிட்டு புதிய பொருளாதாரக் கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறார்களே. ஆனால் ஒன்று, கிராமங்கள் பக்கம் கவனம் திரும்பினாலொழிய ப. சிதம்பரம் கூறுவது நிறைவேறாது.

● பாலகிருஷ்ணமூர்த்தி, மருங்கூர்.

? 'ஸ்பீட்', 'பேபீஸ் டே அவுட்' போன்ற படங்களை எடுக்க பாலிவுட் கூட முன் வருவதில்லையே, ஏன்?

! 'ஸ்பீட்' போன்ற படங்களை எடுக்கத் தேவையான தொழில்நுட்ப ஆற்றல் இந்தியாவில் இருப்பதாகத் தெரியவில்லை. தொழில்துறை போல, சினிமாத் துறையிலும் கூட்டு முயற்சிகளுக்கு முயன்று பார்க்கலாம். 'பேபீஸ் டே அவுட்'டின் தெலுங்கு வடிவம் ஏற்கெனவே பிலிம் சுருளுக்குள் அடங்க ஆரம்பித்து விட்டது. பேபியாக நடிப்பது அமலாவின் குழந்தை அகில்.

● ஆர். சுப்பாராவ், திருக்கோவலூர். ❐

? மகாமக விசாரணை அறிக்கை அரசுக்குக் கிடைத்து விட்டதே. உண்மை வெளிச்சத்துக்கு வருமா?

! அது அறிக்கையின் தன்மையைப் பொறுத்தது. முதல்வருக்கு ஷொட்டு என்றால் கரை ஏறும்; குட்டு என்றால் குளத்துக் குள்ளேயே அமுங்கி விடும்!

● சூர்யநிலா, சேலம்.

? 'இனி என்னைப் பார்க்க வரும் தொண்டர்கள் ஐந்து மரக் கன்றுகளுடன்தான் வர

வேண்டும்' என்று உத்தரவிட்டிருக்கிறாரே, ராமதாஸ்?
! முன்பு வெட்டியதற்கு இன்று பிராயசித்தம். பாராட்டுகிறோம். தொண்டர்கள் மரக் கன்றுகளைக் கொண்டு வருவதுடன் வளர்த்துக் காட்டினால் மேலும் தொடர்ந்து பாராட்டலாம்.

● **சோ. இராமு, செம்பட்டி.**
? ஆறாம் வகுப்பு தமிழ் பாடப் புத்தகத்தில் ஜெ. புகழ் பரப்பும் வகையில் பாடம் அமைக்கப்பட்டுள்ளது பற்றி...?
! அநியாயம்! அக்கிரமம்! ஒன்றாம் வகுப்பிலேயே இதை ஆரம்பித்திருக்க வேண்டாமா! ஆறாம் வகுப்பு வரை அம்மாவைக் காணாமல் குழந்தைகள் ஏங்கித் தவிக்குமே!

● **சகா. நாகராஜன், பொள்ளாச்சி.**
? என்னைச் சுற்றி நிறைய தவறுகள் நடக்கின்றன. என்னால் ஒன்றுமே செய்ய முடியவில்லையே?
! ராவைப் பார்த்து ஆறுதல் அடையவும்.

● **எஸ். மதியழகன், திருவெண்ணெய்நல்லூர்.**
? ஜெயலலிதாவின் செல்வாக்கு மக்களிடம் எப்படி உள்ளது?
! சு. சுவாமியின் செல்வாக்கு வளர்வது கண்டு பயந்து ஃபோர்ஜரி படம் தயாரிக்கப்பட வேண்டுமானால்; வழக்கை நீதிமன்றத்தில் சந்திக்க அஞ்சி, வழக்கறிஞர் மீது குண்டர்கள் ஏவி விடப்பட வேண்டுமானால்; வழக்கறிஞர்களின் போராட்டத்தைக் கண்டு கலங்கி, போலி விலாசங்களுடன் மூவர் சரணடையும் நாடகம் அரங்கேற வேண்டுமானால் ஜெயின் செல்வாக்கு சரிந்து வருவதாகத்தானே அர்த்தம்! பொது மக்களை விடுங்கள். கட்சிக்குள்ளேயே செல்வாக்கு சரிகிறது! அல்லாது போனால் உட்கட்சித் தேர்தல்களில் இத்தனை அடிதடிகளை ஏன்? போலீஸ் தலையிட்டு, லத்தி சுழற்றும் அளவுக்குக் கட்சிக்குள் மோதல்கள் வலுப்பானேன்?

● **அ. ராமச்சந்திரன், சென்னை.**
? பேராசிரியர் என்.ஜி. ரங்காவின் சேவைகள் பற்றி?
! நன்கு படித்த நல்லறிஞர்கள் அரசியலுக்கு வரத் தயங்குவது தவறு என்பதற்கு எடுத்துக்காட்டு என்.ஜி. ரங்கா. ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில் பொருளாதாரம் பயின்று, பச்சையப்பன் கல்லூரியில் பேராசிரியராக இருந்தவர், காங்கிரஸில் சேர்ந்து விடுதலை வீரரானார். சுதந்திரத்துக்குப் பிறகு விவசாயிகள் நலனுக்காகக் கட்சி அமைத்துப் போராடினார். ராஜாஜி ஆரம்பித்த சுதந்திரா கட்சியின் கொள்கைகள் பிடித்துப் போனதால் அதில் சேர்ந்து, நிறுவனத் தலைவராக பன்னிரண்டு ஆண்டுகள் தொண்டாற்றினார். இன்று அந்த சுதந்திர பொருளாதாரக் கொள்கை மத்திய அரசின் கொள்கையாக மாறியிருப்பது கண்டு மகிழ்ந்தார். பதவிகளுக்கு ஆசைப்படாமல் கடைசி வரை மக்கள் தொண்டராகவே விளங்கிய தூய அரசியல்வாதி. தில்லி நாடாளுமன்றம் அவர் பணியை ஐம்பதாண்டு காலம் அனுபவித்திருக்கிறது!

● **புளியரை கணேசன், சென்னை.**
? 'காவிரி நீர் பங்கீடு' பற்றி பேசித் தீர்ப்பதற்குத் தகுந்த சூழ்நிலை நிலவவில்லை' என்று தேவேகௌடா கூறியிருக்கிறாரே?
! அப்படி சொல்லி குறுவைக்குத் தண்ணீர் விடாமல் கைவிரித்து விட்டார்! அம்மாவோ கண்டு விரல் கூட அசைக்கக் காணோம்! தஞ்சை விவசாயிகளின் கண்ணீரே காவிரியாகப் பாயும் என்று காத்திருக்கிறாரோ என்னவோ!

● **வி. மகேஸ்வரன், காரைக்குடி.**
? எங்கே இப்போது சொல்லுங்கள், கலைஞருக்கா மூக்குடைந்தது? சாமியா வழுக்கி விழுந்தார்? (போட்டோ விஷயத்தில்.)
! என் பதிலை ஒட்டுமொத்தமாகப் பாருங்கள், மகேஸ்வரன். இந்த இக்கட்டிலிருந்தும் மீண்டு வந்தால் நிஜமாகவே அவர் (சு. சுவாமி) ஒரு சூப்பர் அரசியல்வாதிதான் என்ற எதிர்பார்ப்பையும் தந்திருக்கிறேனே!

• பேபி நடிப்பு



• இருபது ஆண்டுகளில்...



• பிராயசித்தம்



• சூப்பர் அரசியல்வாதி



ரூ 25 பரிசு பெறுபவர் :
ஆர். சுப்புராஜ்,
95, கீழ வீதி,
திருக்கோவலூர் - 605 757.



* டாக்டர் அம்பாடி: "நரசிம்மராவ் பாராட்டியது பெரிய விஷயம்..."

அம்மாடி! டீ.வி பார்க்கமாட்டாராமே அம்பாடி!

+2 வயதில் எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்றவர் பாலமுரளி கிருஷ்ணா அம்பாடி. இந்த சாதனை நிகழ்த்தியது எப்படி என்ற வழக்கமான கேள்விகளை ஒதுக்கி இப்படி ஒரு கேள்வி கேட்டோம்.

"சகட்டு மேனிக்கு சாட்டிலைட் டீ.விக்கள் பெருகிவிட, இங்கே குழந்தைகள் படிப்பில் ஏக பாதிப்பு என்கிறார்கள். அமெரிக்காவில் இங்கிருப்பதைக் காட்டிலும் ஏராள சானல்கள். விதவிதமாகப் பொழுது போக்கு. வயதோ மிகக் குறைவு. எப்படி முடிந்தது. இப்படி ஒரு சாதனை? டீ.வி. பார்க்கிற பழக்கமே இல்லையா?"

சொன்னார்:

"அமெரிக்காவில் டீ.வியை Baby sitter என்கிறார்கள். பெற்றோர் இருவரும் வேலைக்குப் போகிற நிலையில் குழந்தைகளுக்கு டீ.வியே கதி. அதனால் டீ.வி. வழங்கும் அதீத செக்ஸ் மற்றும் வன்முறை நிகழ்ச்சிகள் அங்கே சின்ன வயதிலேயே பிள்ளைகளை ரொம்பவும் பாதித்து, கெடுத்து விடுகின்றன. அங்கே நடக்கிற பெரும் குற்றங்களுக்கும் காரணம் இதே! இதிலெல்லாம் சிக்காமல் என்னால் படிக்க முடிந்ததற்கு ஒரே காரணம் என் இலக்கில் இருந்த தெளிவுதான். படிப்பு. அதுதான் நமக்கு முக்கியம்.

இரண்டாவது, குடும்பம். டீ.வியால் இவ்விரு விஷயங்களிலிருந்து கவனம் சிதறுவது உறுதி என்பதால், அதை ஆரம்பத்திலேயே தவிர்த்து விட்டேன். செய்திகள், விளையாட்டு நிகழ்ச்சிகள் மட்டும் பார்ப்பதுண்டு. அதுவும் வாரத்திற்கு பத்து மணி நேரத்துக்கு மேல் இருக்காது."

இங்கே மெடிக்கல், இஞ்சினியரிங் படிப்புக்கு தகுதி, காப்பிடேஷன் என்று இரண்டு சானல்கள் இருப்பது பற்றி பாலமுரளி ரொம்ப வருத்தப்படுகிறார்.

"தகுதி இல்லாமல் பணத்தைக் கொண்டு டாக்டராவது ரொம்பத் தவறு. அது ஆரோக்கியமான விஷயமல்ல; மாறாக, அபாயகரமானது!" என்று அடித்துச் சொல்கிறார் இந்த அமெரிக்க டாக்டர்.

— எஸ். சந்திரமௌலி

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி, பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் : ரூ. 525/-.

சம்பூர்ண வேகம்
100 நாள்
டெபாசிட் சேர்ப்பு விழா

டெபாசிட் திட்டங்கள்

ஃபிக்சட் டெபாசிட்

காலம்	வட்டி விகிதம் (ஆண்டிற்கு)	குறைந்த பட்ச டெபாசிட் தொகை
ஓர் ஆண்டு	**24%**	ரூ.10,000/-

ஊக்கத் தொகை 1%

க்யூமுலேடிவ் டெபாசிட்

காலம்	டெபாசிட் தொகை	முதிர்வுத் தொகை	வருடாந்தர வட்டி	ஊக்கத் தொகை
13 மாதம்	ரூ.10,000/-	ரூ.13,000/-	27.70%	1.5%
25 மாதம்	ரூ.10,000/-	ரூ.16,000/-	28.80%	3.0%
37 மாதம்	ரூ.15,000/-	ரூ.30,000/-	32.4%	4.5%

ஈஸ்வரி பாண்ட்

குறைந்த பட்சத்தொகை
ரூ.25,000
இரு மடங்காகிறது
37 மாதங்களில்
ரூ.50,000/-
ஊக்கப்பரிசு
4 கிராம் தங்கக்காசு

திருமலா பாண்ட்

குறைந்த பட்சத்தொகை
ரூ.50,000
மும் மடங்காகிறது
60 மாதங்களில்
ரூ.1,50,000/-
ஊக்கப்பரிசு
8 கிராம் தங்கக்காசு

ESWARI

ஈஸ்வரி பைனான்ஸ் & இன்வெஸ்ட்மென்ட்ஸ்
(ஈஸ்வரி குரூப் நிறுவனங்கள்)

தலைமை & நிர்வாக அலுவலகம்: 4, எல்டாம்ஸ் ரோடு, முதல் மாடி, ஆழ்வார்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி: 455349, 459557, 457583.

கிளைகள் : நெ. 13, ரட்டன் பஜார், பாரிமுனை, சென்னை-3. போன்: 560767, 49, வடக்கு உஸ்மான் ரோடு, தி.நகர், சென்னை-17. போன்: 8259661, 69, முதல் மாடி, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, புரசைவாக்கம், சென்னை-7. போன்: 5324937, 5324940, நெ. 72, ஜி.எஸ்.டி. ரோடு, குரோம்பேட்டை, சென்னை-44. போன்: 405845, நெ. 11, பாரதி சாலை, திருவல்லிக்கேணி, சென்னை-5. போன்: 841187, நெ. 19/6, 4வது மெயின் ரோடு, முதல் மாடி, நங்கநல்லூர், சென்னை-61. போன்: 2345891, நெ. 13, ஆற்காடு சாலை, சாலிக்கிராமம், சென்னை-93. போன்: 428650, நெ. 25, முதல் மாடி, ஜவஹர்லால் நேரு தெரு, பாண்டிச்சேரி-1. போன்: 31830.

கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சென்னை (அண்ணா நகர், மைலாப்பூர் மற்றும் அடையார்) கிளைகள் விரைவில் திறக்கப்படவுள்ளது.

எல்லா ஞாயிறு அன்றும் அலுவலகம் இயங்கும்

உங்கள் வளர்ச்சி ஈஸ்வரியுடன் வளரட்டும்

LOTUS/95

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka.